


# காகிதம்

மேலாண்மை
பொன்னுச்சாமி

திருவரசு புத்தக நிலையம்

# காகிதம்

மேலாண்மை பொன்னுச்சாமி

23, தீனதயாளு தெரு,
தியாகராய நகர். சென்னை - 600 017.

| | | |
|---|---|---|
| முதற்பதிப்பு | | மே - 1998 |
| இரண்டாம் பதிப்பு | : | டிசம்பர், 2010 |
| உரிமை | | ஆசிரியருக்கு |

பதிப்பாசிரியர் : வானதி திருநாவுக்கரசு

**விலை : ரூ.50.00**

| | |
|---|---|
| ☐ Title | **KAKITHAM** |
| ☐ Author | **Melanmai Ponnusamy** |
| ☐ Language | Tamil |
| ☐ Edition | **Second Edition, December - 2010** |
| ☐ Pages | xii + 132 = 144 |
| ☐ Publication : | **THIRUVARASU PUTHAKA NILAYAM,**<br>23, Deenadayalu Street,<br>Thyagaraya Nagar,<br>Chennai - 600 017.<br>✆ 24342810/24310769 |

**☐ Price : Rs.50.00**

Typesetting *Goodwill Computers,*
*T.Nagar, Chennai -17.* Mobile:9940254493
E.Mail : goodwilltngr@yahoo.co.in

*Printed at :* **NOVENA OFFSET PRINTING CO.,** Chennai - 5 ✆ 28446166, 28446891

## சமர்ப்பணம்...

வயது பேதம் பார்க்காமல்
அலட்சியம் காட்டாமல்
நெஞ்சு தழுவி அரவணைக்கிற
அந்தப் பேரன்பு.

பேசிப் பழகுகிறபோது மனசையே
முகத்தில் வைத்துப் புன்னகைக்கிற
நேர்மைமிகு தோழமை.

இலக்கியப் படைப்புகள் மூலமாக
என் போன்றோருக்கு
மொழிநடை வழிகாட்டி.

காயிதங்கள் எழுதுகிறபோதெல்லாம்
நம்மைச் செதுக்குகிற அந்தப்
பாசமான அக்கறை.

எல்லாம் நிறைந்த எங்கள் முன்னத்தி ஏர்
**கி. ராஜநாராயணன்** அவர்களுக்கு

# முன்னுரை

**எ**ன்னுடைய சிறுகதைகளுக்கு ஒரு சிறப்புத்தன்மை இருக்கும். அவற்றில் பெரும்பான்மையானவை பரிசுகள் பெற்றவை. முதல் பரிசு, முத்திரைப் பரிசு என்று ஏதேனும் பரிசுகள்.

‘இலக்கியச் சிந்தனை’ என்ற அமைப்பு, தமது உயர் தன்மைகளையெல்லாம் தொடர்ந்து பிறழாமல் காப் பாற்றிக் கொண்டே மாதந்தோறும் ஒரு சிறுகதைக்குப் பரிசு தருகின்றனர்.

தமிழில் அந்த அந்த மாதம் வெளியான அனைத்து இதழ்களையும் ஓர் எழுத்தாளரிடம் தந்து, அவற்றில் பிரசுரமான அனைத்துச் சிறுகதைகளையும் வாசிக்க வைத்து, அவற்றில் சிறந்த ஒன்றைத் தேர்வு செய்து, அதற்குப் பரிசு தருவார்கள். பரிசுத்தொகை வெறும் ஐம்பதுதான். ஆனால், அந்தப்பரிசு மிகமிக முக்கியத் துவமிக்கது. மாண்புமிக்கது. எழுத்தாளர்களின் மரியாதைக்குரியது.

‘இலக்கியச் சிந்தனை’ பரிசு, எனது எட்டு சிறு கதைகள் பெற்றிருக்கின்றன. ஒரே எழுத்தாளர் இத்தனை பரிசுகளைப் பெற்றிருப்பது நான் மட்டும்தானா, வேறொரு எழுத்தாளர் இருக்கிறாரா? யாமறியோம்! அந்தப் பாரதி, லட்சுமணருக்கே வெளிச்சம்.

V

இந்த 'இலக்கியச் சிந்தனை' அமைப்பை நெறிபிறழாமல் பண்பு குறையாமல், தன்மை சிதையாமல் தொடர்ந்து நடத்தி வருகிற பாரதி, லட்சுமணன் என்ற மாண்புமிகு அசலான மனிதர்களை எத்தனை போற்றினாலும் தகும்.

அதே 'இலக்கியச் சிந்தனை' அமைப்பு, மாதந்தோறும் தேர்வு செய்யப்பட்டு ஐம்பது ரூபாய் பரிசு வழங்கப்பட்ட பனிரெண்டு சிறுகதைகளையும் ஒரு பிரபல எழுத்தாளரிடம் ஒப்படைத்து, வாசிக்க வைத்து, ஒன்றைத் தேர்வு செய்து, அந்தச் சிறுகதையை அந்த ஆண்டின் சிறந்த சிறுகதையாக அறிவித்து அதற்கொரு பரிசு தருவார்கள்.

ஆனந்தவிகடனில் 'சற்றே பெரிய சிறுகதை' என்ற தனித்துவ அடையாளத்துடன் பிரசுரம் பெற்ற 'ரோஷாக்னி' என்ற எனது சிறுகதை, 'ஆண்டின் சிறந்த கதை' என்ற பரிசையும் பெற்றது.

பரிசளிப்பு விழா சென்னையில் நடைபெறும். கண்ணியமான விழா. மரபார்ந்த கலை இலக்கியச் செல்வங்களைப் போற்றிப் பாதுகாத்துக் கௌரவிக்கிற மரியாதைக்குரிய விழா.

பரிசை நேரில் பெற்றுக் கொள்ளும்படி அந்த விழா என்னை அழைத்திருந்தது.

கதர்ச்சட்டை, பாலியஸ்டர்வேட்டி, எண்ணெய்க் கசிவான முகம், கலைந்த தலைமுடி, உச்சி முடியில் ஒரு கற்றை, சிலுப்பிக்கொண்டு நிற்கும். தென் மாவட்டக் கிராமத்துப் பாமரனுக்குரிய அசட்டுத்தனம் அப்பியிருக்கிற முகம்.

## VI

இந்தத் தோற்றத்திலிருக்கிற என்னை "எழுத்தாளர்" என்று கடவுளால்கூட யூகித்துவிடமுடியாது. யாரேனும் அறிந்தவர்கள், "இவருதான் எழுத்தாளர்" என்று அறிமுகம் செய்து வைத்தால்கூட, "நெசந்தானா? இவருதான் அவரா?" என்ற ஆச்சரியக் கேள்வியைத் தவிர்க்கவே முடியாது.

விழா மண்டப முகப்பில் வானதி பதிப்பகம் கடை போட்டிருந்தது. 'ரோஷாக்னி' என்ற தலைப்பிட்ட புத்தம்புதிய "(இலக்கியச்சிந்தனை பரிசுகள் பெற்றது)" என்ற அறிவிப்புடன் கூடிய புத்தகமும் கிடந்தது.

இலக்கியச் சிந்தனை பரிசு பெறுகிற அனைத்துச் சிறுகதைகளும் வானதி பதிப்பகம் மூலமாகத்தான் வெளியிடப்படும். இது வழக்கம்.

நான் கடை முன்னால் ஆவலும் ஆர்வமுமாய் நிற்கிறேன். கடைக்குள்ளிருந்தவர் என்னைத் தீர்க்கமாகப் பார்க்கிறார். கனிவான பார்வை. அறிமுகமற்ற என்னைப் பரிவுடன் பார்க்கிறார். பார்வையில் ஏதோ ஓர் யூகம். சற்றே திகைப்பு. உதட்டில் ஒரு சிறிய புன்னகை.

அவர் கண்ணைப் பார்க்கிறேன். கண்ணில் தெரிகிற அவரது மனம். அவரது உள்மனநேர்மையும், தொழிற் பற்றுறுதியும், நாணயமும், உயர்பண்பும், கண்ணியமும் அந்தக் கண்ணின் ஒளியில் எனக்குள் இறங்குகின்றன.

அவரது தயக்கத்தில் அவரது கண்ணியம்.

"நீங்க... நீங்க... நீங்க?"

"ஆமா. நாந்தான் எழுத்தாளர். மேலாண்மை பொன்னுச்சாமி"

VII

“அடடே, நீங்கதானா? நா நெனைச்சேன், நீங்க. ளாத்தான் இருக்கும்னு. உங்க கதைகளை நிறைய படிச் சிருக்கேன்.”

“அப்படியா?”

“உங்க கதைதான் இந்தத் தொகுப்புலே தலைப்புக் கதை. நல்லா பிரிண்டாயிருக்கா? பாத்தீகளா?”

“ம்.. ம்... ரொம்ப அற்புதமா வந்துருக்கு. நல்ல காகிதம். நேர்த்தியான அச்சு. நல்ல கலர்லே ரேப்பர். எல்லாமே ரொம்ப கச்சிதம்.”

“உங்களுக்குப் பிடிச்சிருக்கா?”

“பிரமிச்சுப் போயிருக்கேன்.”

“வேணும்னா... நீங்க விருப்பப்பட்டா... உங்க கதைகள்லே பத்தோ பன்னிரண்டோ குடுங்க. மேட்டர் குடுத்தீங்கன்னா... ஐயாகிட்டே கலந்துபேசிட்டு... நாங்க தொகுப்பா வெளியிட ரெடியாயிருக்கோம்.”

இப்படித்தான்... எனக்கும் வானதி பதிப்பகத் துக்குமான உறவு முளைத்தது. துளிர்த்தது.

அன்றைக்குக் கடைக்குள்ளிருந்து என்னிடம் பேசியவர் வேறுயாருமல்ல... திருமிகு. ராமு அவர்கள்.

அந்தச் சந்திப்பும் உரையாடலும் சம்பிரதாயப் பூர்வமான சடங்காக முடிந்துவிடவில்லை. முளைத் தெழுந்த உறவுக்கு அன்று, விருட்சமாயிற்று.

நான் ஊர்வந்து சேர்ந்தவுடன் அனுப்பி வைத்த மேட்டரை சுடச்சுட வெளியிட்டது, “கங்கை புத்தக நிலையம்.”

வானதி பதிப்பகம் வெளியிட்ட எனது முதல் தொகுப்பான "மனப்பூ" அந்த ஆண்டில் தமிழக அரசின் மாநில இலக்கிய விருதைப் பெற்றது. இரண்டாவதாக நான் அனுப்பிய மேட்டரை "ஒரு மாலை பூத்துவரும்" என்ற தலைப்பில் தொகுப்பை வெளியிட்டார்கள்.

அந்த நூலுக்கும் அந்த ஆண்டில் தமிழக அரசின் மாநில இலக்கிய விருது கிடைத்தது இனிய ஆச்சரியமாக இருந்தது.

முதல்வருடன் பேராசிரியர் அன்பழகன் கையில் விருது பெறுகிற நான், மறுவருடம் மாற்றுமுதல்வர் பன்னீர் செல்வம் கையில் பெறுகிறேன். அடுத்தடுத்து மாநில விருதுகள்.

அப்புறம்தான்... வானதி பதிப்பக உரிமையாளர் திருமிகு. திருநாவுக்கரசு ஐயா அவர்களைச் சந்தித்துப் பேசினேன். ஆச்சரியமான சாதனையாளர், 'வெற்றிப் படிகளி'ல் ஏறியவர். 'வெற்றிப்படிகளை'ப்படைத்தவர். புகழ்மிகு மனிதர்களின் மரியாதையைப் பெற்ற மாண்பு மிக்கவர், ஐயா.

அவரிடம் தன்னடக்கம், அன்பு போன்ற உயர் பண்புகள் பலவற்றை கற்றுக் கொள்ளலாம்.

அரசு அலுவலர், ஆசிரியர் என்று ஏதேனும் ஒரு மாதச் சம்பளத்துடன்தான் எல்லா எழுத்தாளர்களும் பதிப்பகத்துடன் உறவு கொள்கின்றனர். எந்த மாத வருமானமுமில்லாமல், கிராமத்து எளிய விவசாயக் குடும்பமாக இருக்கிற எனது வறிய நிலையில் எழுத்தாளனாக நீடிப்பது ரொம்பவும் கஷ்டம். அதிலும், கமர்ஷியல் ரைட்டராக மலினப்படாமல், கண்ணியமான

முற்போக்கு எழுத்தாளராக நீடிப்பது அதனினும் கஷ்டம்.

வானதி திருநாவுக்கரசு ஐயா, 'கங்கை' ராமு போன்ற பதிப்பகத்தார்களின் நேர்மையையும், பரிவை யும், அக்கறையையும் அன்பையும் தனித்த பாசத்தையும் நம்பித்தான் என் போன்றோர் வாழ முடியும்.

'என்னை வாழவைக்கும் வானதி பதிப்பகம்' என்று மனப்பூர்வமாக நம்புகிறேன்.

'காகிதம்' தொகுப்பை மறுபதிப்பாக வெளியிட முன்வந்திருக்கிற வானதி பதிப்பகத்தின் பெருந் தன்மைக்கும், எனது இலக்கியப் பயணத்திற்கான ஆணி வேராகவும், ஆதார பலமாகவும் இருக்கிற என் தம்பி கரிகாலனுக்கும், மறுபதிப்புக்கான தொகுப்புப் பணியில் உடன்ஒத்துழைத்த எனது துணைவியார் பொன்னுத் தாய், எனது இளைய மகள் தென்றல் மற்றும் குடும் பத்தினருக்கும், ஆய்வு மாணவர்களுக்கும், என் படைப்பு களுக்கு 'ஆய்வரங்கங்கள்' நடத்தி என்னைச் சிறப்பிக் கிற தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கம் என்ற புகழ்மிகு அமைப்புக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றிகள் என்றென்றும் உரித்தாகும்.

நன்றி

என்றும் உங்கள்
**மேலாண்மை பொன்னுச்சாமி**

**மேலாண்மறைநாடு
626127
இராஜபாளையம் வழி
விருதுநகர் மாவட்டம்**
04562/271233 & 9942610700

# பொருளடக்கம்

1. காகிதம் .................... 1
2. மனமாயை .................... 17
3. வஞ்சனை .................... 30
4. விரிசல் .................... 42
5. ஞாபகம் .................... 50
6. பேய்கள் .................... 59
7. லங்கேஸ்வரர்கள் .................... 73
8. என் கனா .................... 88
9. அண்டாது .................... 101
10. அதிகாரி .................... 117

# ஆசிரியரின் பிற நூல்கள்

1. மானுடம் வெல்லும் — சிறுகதை தொகுப்பு
2. சிபிகள் — ”
3. மானுடப் பிரவாகம்
4. பூச்சுமை (லில்லிதேவசிகாமணி விருது)
5. தாய்மதி
6. பூக்காதமாலை (ஆனந்தாச்சாரி அறக்கட்டளை விருது)
7. காகிதம்
8. கணக்கு
9. விரல்
10. உயிர்காற்று (பாரதஸ்டேட் வங்கி விருது)
11. என்கனா
12. மனப்பூ (தமிழக அரசு இலக்கிய விருது)
13. ஒரு மாலை பூத்துவரும் (தமிழக அரசு இலக்கிய விருது)
14. அன்பூ வாசம் (பாரத ஸ்டேட் வங்கி விருது, திருப்பூர் தமிழ்ச்சங்க விருது)
15. மானாவாரிப்பூ (அமரர் சி.பா. ஆதித்தனார் இலக்கியவிருது)
16. ராசாத்தி
17. மின்சாரப்பூ (மத்திய அரசின் சாகித்ய அகாதமி விருது)

18. பூமனச் சுனை
19. பூமாயன்
20. பூக்கும் மாலை
21. சூரிய வேர்வை
22. கோடுகள் குறுநாவல் தொகுப்பு
23. தழும்பு ”
24. மரம்
25. ஈஸ்வர...
26. பாசத் தீ
27. முற்றுகை (கல்கி பொன்விழா முதல் பரிசு) நாவல்
28. இனி ”
29. அச்சமே நரகம்
30. ஆகாயச் சிறகுகள் ”
31. ஊர் மண் (பாரத ஸ்டேட் வங்கி விருது) ”
32. முழு நிலா
33. சிறுகதைப் படைப்பின் உள் விவகாரம் கட்டுரைகள்

❑❑❑

# காகிதம்

டக்கருக்கு மண்ணள்ளிவிடப் போயிருந்தான், செபாஸ்டியன். பாடுபட்ட அலுப்பையெல்லாம் குளித்துக் கழுவிவிட்டு வருகிறான். பொழுதடைந்து விட்டது. இன்னும் இருட்டவில்லை. மயங்குகிற மேகத்து வெளிச்சம்.

செபாஸ்டியனுக்குக் கறுத்த திரேகம். ரோமம் அடர்த்தி. வைரம் பாய்ந்த புஜத்தைக் குளிரச் செய்து உலர்கிற நனைந்த ஈரத்துண்டு. ஈர வேட்டியை நாலாக மடித்து இடுப்பில் கட்டியிருந்தான். குடங்கையில் வெறும் தூக்குச் சட்டியின் கிலு கிலுப்பு. அதற்குள் பீடி, தீப் பெட்டி, வாங்கின சம்பளம்.

ஆறுமணி பஸ் புழுதியைக் கிளப்பிக் கொண்டு திரும்பிப் போகிறது, ராசபாளையத்துக்கு. புழுதிப்படு தாவைக் காற்று இழுத்துச் செல்ல- வெளிப்படுகிற ராம லிங்கம். கபில நிற கதர்த்துண்டைத் தோளில் போர்த்தி யிருந்தார்.

“ஏண்டா செபாட்டி, டக்கருக்குப் போனியா?”

“ஆமா சாமி”

“நாளைக்கு நமக்கு வாரீயா?”

“என்ன ஜோலிக்கு... சாமி?”

“கருசக் காட்டுலே கரைபோடணும். ஒடைப் பெடுத்து ஓடையா புடுங்கிக் கெடக்கு. அதை அடைக் கணும்.”

“அப்படியா.... சாமி?” என்று தயக்கமாக இழுத்தான். சட்டென்று “வரல்லே சாமி” என்று சொல்லவில்லை. ராமலிங்கம் முகத்தில் ஒரு சின்ன மகிழ்ச்சி. காரியம் கைகூடி வருகிற திருப்தி. வேப்பம் பழத்தை விழுங்கிய மைனாவின் சந்தோஷம். முகச் சுருக்கம் மறைகிற மென் னகை. “அப்பச்சரி... நீ வேலைக்கு வாரீயா, செபாட்டி? நானும் ஊரெல்லாம் பேயாச் சுத்திட்டேன். ஒவ்வொரு பயலா தொண்ணாந்து (மிகக் கெஞ்சி) பாத்துட்டேன். எந்தப் பயலும் வரவே மாட்டேங்கான்.”

“ஆமா.... சாமி. நம்ம ஊர்லே இப்ப ரொம்ப ஆளுக்குக் கிராக்கிதான். கூலி வேலைக்கு வர்றவுக எல்லாம் கொய்யாப்பழ ஏவாரத்துக்குப் போறாக. கேரளாவுக்கு ஐஸ் விக்கப் போறாக. சம்சாரி வேலை களுக்கு ஆளு தட்டுப்பாடாயிருச்சு.”

“.......நீ சொல்றதும் சரிதான். ஒடம்பு வளைஞ்சு மம்பட்டி புடிச்சு ஒழைக்குறதுக்கு கறியெல்லாம் வலிக்குது. மேனி அலுங்காம காசு பாக்க நெனைச்சு, ஏவாரத்துக்கு போய் ஏமாத்தித் திரியுறாங்க நம்ம பயக. காட்டு வேலைக்கு ஆளு இல்லாமப் போச்சு.”

“நீங்க சாமியவுக பண்ற கொடுமையும் அப்படித் தானே இருக்கு? வேலைக்கு வர்ற கூலி சனத்தை கொன்னு புழியணும்னு குறியா நிக்கீகள்லே? மனுசனை மனுசனா மதிக்க மாட்டேகங்குறீகள்லே?”

“ஏண்டா, குடுக்குற கூலிக்கு வேலை வாங்க வேண்டாமா?”

"அதுக்கும் ஒரு அளவு இல்லியா... சாமி."

"அளவு என்ன வேண்டிக்கிடக்கு மயிரளவு."

"அதான்.. ஆள் கிடைக்காம இப்படி தெருத்தெருவா அலையுறீக?"

"அந்த மயிரெல்லாம் நீ காப்பாத்த வேண்டாம், இதெதுக்கு வளவளாப் பேச்சு? நீ நாளைக்கு வாரீயா... இல்லியா? அதைச் சொல்லுடா."

"நா வரல்லை சாமி... டக்கருக்குப் போவணும்."

ராமலிங்கம் முகத்தில் வந்து அப்பிய ஏமாற்றம். நம்பிக்கை வெளிச்சம் இருட்டாக மாறிய வேகம். சுள்ளென்று பாய்ந்த கோபம். விறைத்துக் கடுகடுத்த அவரது முகத்தைப் பார்த்து உள்ளூர ரசித்தான்.

அவருக்குக் கண்கள் இடுங்கின.

"பெறகெதுக்கு... இம்புட்டு நேரம் பேச்சை இழுத்தே?"

"சாமியவுககிட்டே பேசுறதும் குத்தமாய் போச்சா?"

செபாஸ்டியன் உதட்டில் எட்டிப் பார்த்த நமுட்டுச் சிரிப்பு. ஆள் தேடி ஆவலாய் பறந்து வருகிறார் என்றறிந்து கொண்டுதான், இழுத்தடித்தான். ஆசைகாட்டி ஏமாற்றுகிற ஒரு சின்ன விளையாட்டுத்தான்.

இவனது நமுட்டுச் சிரிப்பில் ராமலிங்கம் கொதித்துப் போனார். "ஏலேய்... ஒஞ்சாதிக் குசும்பையா... காட்டுதே?"

சாதி சொல்லித் திட்டிய பின்னும் ரோஷப்படாமல் சிரிக்கிற செபாஸ்டியன். விளையாட்டை விளையாட்டாகவே எடுத்துக் கொள்கிற இயல்பு.

வெறுத்துப் போய் விலகிப் போகிற ராமலிங்கம், ஆத்திரமூர்க்கமாய் சீறிப் பாய்கிற முணுமுணுப்பு.

"வர வர... காலடியிலே கிடந்த எளிய சாதிப் பயகளுக்கு மப்பேறிப் போச்சு. மட்டுமரியாதையில்லாம வாய் நீளுது. இழுத்து வைச்சு அறுத்தாத்தான்... கொழுப்பு அடங்கும்."

அவரது முணுமுணுப்பில் முகம் காட்டிய குரூர வன்மம்.

போகிற வழியில் டீக்கடை முடிகிற நேரம். பால்ச் சட்டி ஒருச்சாயலாக உட்கார்ந்திருந்தது. டீ குடித்து விட்டால்... பசி சற்று அடங்கும். வீட்டிற்குப் போனால் சண்டை சத்தம் வராமலிருக்கும்.

"சாமி... டீ இருக்கா?"

"இருக்கு"

"ஒன்னு போடுங்க சாமி."

சன்னாசித் தேவரும், முத்தைய நாடாரும், எல்லப்ப நாயக்கரும் எவர் சில்வர் கிளாஸில் டீ குடித்துக் கொண்டிருந்தனர். இவன் கைக்கும் டீ வந்தது. பூப்போட்ட கண்ணாடிக் கிளாஸில் ததும்பிய டீயில் பாலாடை இணுக்குகளாக மிதந்தன.

பீடியைப் பற்ற வைத்துக்கொண்டு நடந்தான். ஊரைக் கடந்தால்- பாலம். விலக்குப் பாதையில் நடந்தால் இவனது தெரு. மிஞ்சிப் போனால் முப்பது வீடுகள்.

கூரைவீடு. நாள்ப்பட்டுப் போன கூரை. கறுத்துப் போய் சாம்பலாய்க் கிடந்தது. கூரை முகடு கிழிந்து கிடந்தது. வீட்டிற்கு முன்பு அகலமான முற்றம். கூரை

வல்லடைக்குக் கீழே கட்டியிருந்த கயிற்றுக் கொடியில் ஈரத் துண்டை காயப்போட்டான். மொட மொடத்துக் கிடந்த கைலியை உருவி கட்டிக் கொண்டான்.

உள்ளிருந்து ஞானத்தாயின் சத்தம்.

"வந்தாச்சா?"

"ம்"

"சம்பளம் வாங்கியாச்சா?"

"ம்ம்"

"வெளக்கு மாடத்துலே ஒரு காயிதம் கெடக்கு."

"எப்ப வந்துச்சு?"

"இப்பத்தான்."

"எங்கயிருந்து?"

"திருச்சியிலேயிருந்து."

செபாஸ்டியனுக்குள் ஊற்றெடுத்துப் பீச்சிய சந்தோஷம். குப்பென்று பூத்துச் சிரித்த பூவாசம். மனசுக்குக் கால்முளைத்துப் பரபரத்தது.

திருச்சியிலிருக்கிற அக்கா. அக்காவின் மகன் பாக்கியம். தீயணைப்புப் படையில் சேர்ந்து ஒரு வருஷ மாகிறது. இங்கு வந்ததேயில்லை. நகரத்திலேயே பிறப்பு, படிப்பு, பணி எல்லாம். மகளை எப்படியாவது பாக்கியத் துக்கு கட்டிக் கொடுத்துவிட வேண்டுமென்று இவனது ரொம்ப நாள் ஆசை. ஜென்மக்கனவு.

'காயித'த்தை எடுத்து விரித்தான். பழுப்புநிற இன்லெண்ட். "அன்புள்ள மாமா..." என்று துவங்கி, எல்லாருடைய நலனைச் சொல்லி, விசாரித்து... "வருகிற

சனிக்கிழமை கிராமத்திற்கு வருகிறேன். கிராமத்தையும், தங்களையும் பார்க்க ரொம்ப ஆசை" என்று முடித்திருந்தான், பாக்கியம்.

'வா- மருமகப்புள்ளே-வா! என்னையும் ஊரையுமா பாக்க ஆசை, ஒனக்கு?" என்று குதூகலமும், குறும்புமாக நினைத்துக் கொண்டான். இடுப்பில் குடத்துடன் ஆட்டுக்குட்டியாகத் துள்ளிச் செல்லும் மகளைப் பார்த்துக் கொண்டான். அவனுக்குள் முடிச்சவிழ்ந்து வாசம் பரப்புகிற புன்னகை.

காகிதத்தை மறுபடியும் படித்தான். படிக்கப் படிக்கத் திகட்டாத காகிதம். உணர்வுகளின் சகல அணுக்களிலும் இனிமையாய் கரைகிற செய்தி. அவனது ஆயுள் கனவுக்கு கால் முளைத்துக் கம்பீரமாக நடக்கப் போகிற நம்பிக்கை. ரெக்கையடித்து ஜிவ்வென்று பறக்கிற நினைவுகள்.

பட்டணத்துலேயே படிச்சு வளர்ந்த புள்ளையாண்டான். பட்டிக்காட்டுலே புழுதியிலே வளர்ந்த நம்ம புள்ளையைக் கல்யாணம் முடிப்பானா? "சும்மாதான் வந்தேன்" என்று உதட்டைப் பிதுக்கிவிட்டால்..?

கல்லெறிபட்ட பறவையாக 'சொத்'தென்று சுடுபுழுதியில் விழுகிற நினைப்பு. நெருடலான உறுத்தல். 'பக்'கென்றாகிப் போகிற மனச் சூன்யம். அடிவயிற்றில் கலக்கம்.

"தடியால் அடித்துத் தண்ணீர் விலகுமா" என்று தன்னைத்தானே தேற்றிக் கொள்கிற அவன். ஆயிரந்தான் வேற்றுமையிருந்தாலும்... அக்கா மகன் என்கிற பந்தம் அற்றுப் போகுமா?

அவனுக்குள் மீண்டும் கசிவெடுக்கிற ஊற்றுகள். மனசின் சகல மூலைகளிலும் பரவிப் படர்ந்து குளிரச் செய்கிற நம்பிக்கைச் சுனைகள். அருஞ்சுனைகள்.

செபாஸ்டியன் சனிக்கிழமையை வெறித்தனமாக எதிர்பார்த்தான்.

சனிக்கிழமை. டக்கருக்குப் போகவில்லை. காலையிலிருந்தே ஒரு வகையான படபடப்பு. பரபரப்பு. இன்னதென்று விளங்காத குழப்பம்.

பாக்கியம் வந்தால்... அடையாளம் தெரியுமா? பத்து வருஷமாயிற்று, திருச்சியில் அவனைப் பார்த்தது. எவ்வளவு ஞாபகப்படுத்தினாலும் பிடிபட மறுக்கிற முகம். டவுசரும் சட்டையுமாக மனசுக்குள் வந்து போகிற ஒரு சிறுவத் தோற்றம்.

ஞானத்தாயும் வேலைக்குப் போகவில்லை. வீட்டில் வளர்கிற கோழிகளில் ஒரு முட்டைக்கோழியைக் குறி வைத்திருந்தாள். மகள் தெரசம்மா தரையில் கால் பாவாமல் ஓடித் திரிந்தாள்.

செபாஸ்டியனுக்கு மதியக் கஞ்சி இறங்கவே மறுத்தது. மனத் ததும்பல்.

பாலத்தைக் கடந்து ஊருக்குள் வந்துவிட்டான், மூன்று மணி பஸ்ஸை எதிர்பார்க்க.

மாறிமாறி பீடியும் டீயுமாகப் பொழுது நகர்ந்தது. ஒரு நிலைப்படாத மனசில் அலைபாய்கிற நினைவுகள்.

எங்கோ ஓடுகிற டக்கரின் இரைச்சல். மோட்டார் பைக் சத்தம் எல்லாம் இவன் மனச்செவிக்குள் பஸ் மயக்கத்தை ஏற்படுத்தின. அடிக்கொரு தடவை பஸ் வரும் திசையைப் பார்த்துக் கொண்டான்.

ஆவலின் விளம்பில் துடித்தாடுகிற மனசு. பஸ் வந்துவிட்டது. இறங்குகிற முகங்கள். எல்லாம் அறிந்து பழகிய முகங்கள். ஆசைக்குரிய வேற்று முகம் எதுவுமில்லை.

உறுமிக்கொண்டிருந்த பஸ், நகர்ந்து இவனைக் கடந்தது. எழுந்த புழுதியும் ஏமாற்றமும் இவனைப் போட்டு அமுக்கியது. ரெக்கையொடிந்த ரணத்தில்... இவன்.

சற்று தூரம் போன பிறகு- பஸ்ஸுக்குள் ஒரு சின்னச் சலசலப்பு. சலிப்பும் எரிச்சலுமாய் சத்தமிடுகிற கண்டக்டர். கோபச் சீறலாக ஒரு விசில் இரைச்சல்.

நின்ற பஸ்ஸிலிருந்து இறங்குகிற ஓர் இளைஞன்.

சூட்டும், சட்டையும், தோளில் தொங்குகிற பேக்கும், காலில் போட்டிருக்கும் பூட்ஸும் பார்த்தால்.. ஏதோ ஒரு பெரிய ஆபீசரைப் போல..

சுற்றும் முற்றும் திரும்பிப் பார்க்கிற அந்த இளவட்ட முகத்தில் ஒரு திகைப்பு. முன்பின் பார்த்தறியாத ஒரு கிராமீயச் சூழலின் கற்றையான மோதலில் வந்த திகைப்பு.

'தொக், தொக்'கென்று ஓடுகிற செபாஸ்டியன். அவனுள் மீண்டும்...

ஓடி வருகிற இவனை ஒரு பிடிமானத்தோடு பார்க்கிற அந்த இளைஞன்.

"நீ... நீ... பாக்கியந்தானே?'

"ஆமா.. அப்ப நீங்க..? நீங்கதா மாமாவா?"

"ஆமா நாந்தான். விடிஞ்சதுலேயிருந்து 'இப்ப வந்துருவே, அப்ப வந்துருவே'ன்னு காத்துக் கெடந்தேன். கண்ணு பூத்துப் போச்சு."

செபாஸ்டியன் மனசுக்குள் திக்குமுக்காடல். மகிழ்ச்சியின் கூத்தாட்டம். தத்தளிப்பு.

ஆள் வளர்த்தியாயிருந்தான். நிழல் வாட்டத்திலேயே வளர்ந்த நிறக்கனிவு. பாலீஷான முகம். கட்டி மீசை. 'எந்த ஜில்லா கலெக்டரோ' என்று மலைக்க வைக்கிற கம்பீரம்.

அவனோடு சேர்ந்து சமதையாக நடப்பதில் செபாஸ்டியனுக்கு ஏகப்பட்ட பெருமிதம். விம்மிப் புடைக்கிற எண்ணத் ததும்பல். போதையேறிப்போன மாதிரியோர் மதர்ப்பு, மனசுக்குள்.

அக்காவைப் பற்றி - மாமா பற்றி - பிள்ளைகள் பற்றி - உறவுக்காரர்கள் பற்றியெல்லாம் குசலம் விசாரித்துக் கொண்டே நடக்கிற செபாஸ்டியனுக்குள், நாலா திசைகளிலும் மூர்க்கமாய்ப் பாய்கிற நினைப்புகள்.

நடை நடையாயிருக்க - பேச்சு பேச்சாக இருக்க, மனம் சுற்றுமுற்றும் பார்த்தது. தன்னை யார் யார் பார்க்கிறார்கள். 'யார் இது புதுசா இருக்கு' என்ற கேள்விக்குறியில் நெறிகிற கண்கள் எது எது என்று எல்லாவற்றையும் கவனித்தபோது, தாளாத பெருமிதம்.

"வீட்டுக்குப் போனால்... டீ இருக்குமா? பால் இருக்குமா? இங்கேயே டீ குடித்துவிட்டுப் போய் விட்டால்... நல்லதே."

"அப்படியா சொல்லுறீக?"

“பாக்கியம், நம்ம தெருவுலே ஒன்னும் இருக்காது. இங்கேயே டீ குடிச்சிட்டுப் போயிருவமா?”

“டீயா மாமா?... ம்... இங்க நல்லாயிருக்குமா?”

“பட்டிக்காடுதான். ஆனா, டீ ரொம்ப ருசியா யிருக்கும்.”

“சரி... சாப்பிட்டிருவோம்.”

டீக்கடை முன் நின்றனர். கடைக்குள் ராமலிங்கமும் மற்ற ரெண்டு மூணு பேரும் எவர்சில்வர் கிளாஸ்களில் டீ குடித்துக் கொண்டிருந்தனர். கடைக்கு வெளியே நின்று கொண்டே பூப்போட்ட கண்ணாடி கிளாஸில் டீ உறிஞ்சிக் குடிக்கிற ரெண்டு பேர்.

எல்லார் முகங்களையும்- முக வித்தியாசங்களையும் உன்னிப்பாகப் பார்த்தான், பாக்கியம். அவனுள் ஓடுகிற மர்மமான நினைப்பு.

செபாஸ்டியனோடு டிப்-டாப்பாக வருகிற நகர வாலிபனை வியப்பாகப் பார்த்துச் சிரித்தார், கடைக்காரர்.

“என்ன செபாட்டி-யார் இது?”

“எம் மருமகன், அக்கா மகன். திருச்சியிலே இருக்கான்.”

“அப்படியா?”

“ஆமா சாமி. ரெண்டு டீ போடுங்க. பட்டணத்துப் புள்ளையாண்டான். நல்லாப் போடுங்க.”

“அசத்திருவம்.”

செபாஸ்டியனின் பெருமிதப் பூரிப்பைப் புரிந்து கொண்டு கடைக்காரரும் ஜாலியாகச் சிரித்தார். பூப்போட்ட கண்ணாடிக் கிளாஸ்களைக் கழுவினார்.

பாக்கியம் எல்லாவற்றையும் நுட்பமாகக் கவனித்துக் கொண்டிருந்தான். அவன் முகத்தில் ஒரு மாறுதல். ஓர் இறுக்கம், அவமதிக்கப்பட்ட கொதி உணர்வின் பீறிடலைக் கட்டுப்படுத்த சிரமப்படுகிற பிரயத்தனம். வெறுப்பின் கடுமை.

"டீ வேண்டாம் மாமா."

"ஏம்ப்பா?"

"வேண்டாம். வாங்க... வீட்டுக்குப் போவோம்."

"ஏன்... பாக்கியம்?"

"ஒண்ணுமில்லே..."

இவன் முக மாற்றத்தில் ஏகமாக பதற்றமடைந்து, கலவரப்படுகிற மாமா. அவரின் அறியாமை, உடைத்துச் சொல்ல முடியாத தர்மசங்கடம். முள்மேல் நிற்பவனைப் போலத் தவித்தான்.

கடைக்காரர் பக்கம் திரும்பினான். முகத்தில் அதே சிடுசிடுப்பு.

"கண்ணாடிக் கிளாஸ் வேண்டாம். சில்வர் கிளாஸ்லே டீ போடுங்க."

கடைக்காரர் முகத்தில் திகைப்பு. சட்டென்று கோபமாக நிறம் மாறுகிற திகைப்பு. சிரமப்பட்டு சமாளித்துக்கொண்டு சங்கடமாகச் சிரித்தார்.

"ஏந் தம்பி... கண்ணாடி கிளாஸ்லேதானே போடு றேன்? அருமையான பூபோட்ட கிளாஸ்."

"அதுக்கில்லே... சில்வர் கிளாஸ்லேயே போடுங்க."

"எதுக்கு?"

“சில்வர் கிளாஸ் இருக்குல்லே? டீ போடத்தானே வைச்சிருக்கீக?”

“அதுக்கில்லே... அதுவந்து... அதாவது... கண்ணாடி கிளாஸ்தானே சுத்தம்?”

“அதெல்லாம் எனக்குத் தெரியும். சில்வர் கிளாஸ்லேயே நீங்க போடுங்க.”

“என்னப்பா இது. விதண்டாவாதம் பண்றே?”

“கிளாஸ்லே டீ கேக்குறது விதண்டாவாதமா?”

“நாங்க போட்டுக் குடுத்ததை குடிச்சிட்டுப் போக வேண்டியதுதானே? எல்லாரும் போகலே?”

“காசு வாங்குறீக இல்லே? நாங்க கேட்டதுலே குடுக்க வேண்டியதுதானே?”

கால முரணின் சமூகக் கைகலப்பாக அங்கு முறுக்கேறியிருந்த பிடிவாதம். சூழலையே வெக்கையாக்கி விட்ட வாய்ச்சண்டை. சுற்றி நின்றவர்களிடம் பதைப்பும் ஆத்திரமுமாய் உணர்வுகள்.

கடைக்காரருக்குச் சுள்ளென்று கோபம் வந்தது. ஆத்திரமும் மூர்க்கமுமாய் செபாஸ்டியனைப் பார்த்தார். பாக்கியமும் பின் வாங்குவதாக இல்லை. அவன் நின்ற வைராக்கியத் தொனியே கடைக்காரரிடம் ரொம்ப ஆத்திரத்தை மூட்டியது.

“காசு குடுத்தா... எது வேணும்னாலும் கேப்பியா? நாங்க குடுத்துரணுமா? எங்க வீட்டுப் பொண்ணைக் கேப்பே. குடுக்கணுமா?”

“இப்ப... நீங்கதான் விதண்டாவாதம் பேசுறீக.”

செபாஸ்டியனுக்குக் குலைபதறி வந்தது. விஷயம் விபரீதமாகிக் கொண்டிருப்பதாக உணர்ந்தான். உள்ளூர உதைப்பு. என்னென்ன நாசக்காடு வந்து சேருமோ- என்று மனசுக்குள் மருகினான். பீதியும் கிலியுமாக நடுங்கினான்.

உள்ளிருந்து ராமலிங்கம் வெறுப்பும் குமைச்சலுமாய் கத்தினார், கடைக்காரரிடம். "பொண்ணு மட்டுமா கேப்பாக? இப்ப இருக்கிற எளிய சாதிக்காரப் பயகளுக்கு தலையிலே கொம்பு முளைச்சிருக்கு. எல்லாமே கேப்பாக."

சுற்றி நின்றவர்களும் கோபம் கோபமாகப் பாய்ந்தார்கள். குதர்க்கமாகக் கடித்துக் குதறினார்கள். பாக்கியம் அசரவில்லை.

"இப்ப... டீ தரப் போறீகளா... இல்லியா?"

"என்னப்பா... ஊர் நெலவரம் தெரியாம... சட்டம் பேசுறே?"

"நீங்கதான் சட்ட நெலவரம் தெரியாமப் பேசுறீக, தீண்டாமை கோர்ட்டுக்கு நா இப்பப்போனா, என்னாகும் தெரியுமா? ஆறு மாசம் நீங்க "உள்ளே" போகணும். இந்த வட்டாரத்துக்கு ஸ்ரீ வில்லிபுத்தூர்லே கோர்ட். நா போகட்டுமா?"

"என்ன நீ? ஊர் விட்டு ஊர்வந்து, எங்களை அரட்டிப் பாக்குறீயா?"

"நீங்கதான் கால நிலவரம் தெரியாம அதிகாரம் பண்ணுறீக."

கோர்ட் என்றவுடன் கடைக்காரர் முகத்தில் ஒரு மிரட்சி. 'திக்'கென்று பேச்சை நிறுத்திவிட்டார்.

ஆனால்... ராமலிங்கம் விடுவதாக இல்லை. 'தங்கு, புங்'கென்று குதித்தார். தறியமுறிய விழுந்தார். பயங்கர மாக எகிறிக் கொண்டு பாய்ந்தார்.

"கோர்ட்டுன்னா- பயந்துருவாகன்னு நெனைச்சீயா? பெரிய்ய கோர்ட். நாங்க பாக்காத கோர்ட்டா? இந்த ஊருச் சட்டத்தை மீறுன கோர்ட்டா... ஒலகத்துலே யிருக்கு?"

"பாத்துருவமா?"

"பாத்துருவம், எங்க போனாலும்... எளியவன் எளியவன்தானே? சாதி இல்லாமலா போயிரும்?"

"எளியவன்தான். அவனும் மனுசந்தானே? மனுச உரிமையைப் பறிக்கிற அதிகாரம்- இப்ப எந்தக் கொம்பன் கிட்டேயும் கெடையாது, தெரியுமா?"

மாறி மாறிப் பேசி சூடேற்றிக் கொண்டிருந்த ராம லிங்கத்தையும், மற்றவர்களையும் கடைக்காரர் சமாதானம் பண்ணி அடக்கினார். அவருக்குள் கோபத்தை மீறின பயம். வம்பு வந்து சேருமோ என்கிற பதற்றம்.

"சரி சரி,....... தம்பி, ஒங்களுக்கு சில்வர் கிளாஸ்லே தானே டீ வேணும்? போட்டுத்தாரேன். தங்கக் கிளாஸ்லே கேட்டாலும், தாராளமாப் போட்டுத்தாரேன், தந்து தானே ஆகணும்?"

கடைக்காரரின் அந்தப் பாவனைப் பணிவே, பெரும் சாட்டையடியாகச் சுளீரிட்டது, செபாஸ்டியனுக்கு. அடர்த்தியான கோபத்தின் கற்றைத்தாக்குதலாக இருந் தது.

"ஒங்க டீயை நீங்களே வைச்சுக்கோங்க."

பாக்கியம் விறுவிறுவென்று நடந்தான். பட்ட அவமானத்தின் கொதிப்பு, அவன் நடையின் வேகத்தில். செய்வதறியாத தவிப்பில் செபாஸ்டியன். கனல்பறந்த இவர்கள் முகங்களைப் பார்த்துவிட்டு... மருமகன் பின்னால் நடந்தான்.

கடையில் ஆள் ஆளுக்குப் பாய்ந்து சீறுகிற குரல்கள், 'தலை கீழாய் மாறி தறுதலையாகிப் போன காலம்' பற்றியும், 'தலையைத் தரையிலே ஊனி நடக்குற எளிய சாதிக்காரங்க" பற்றியும் அனல் பேச்சுகள், கொதிப்பான சொற்கள்.

'இது எதில் போய் முடியுமோ' என்ற பயத்தில் செபாஸ்டியன். இத்தனைக்கு மத்தியிலும் மருமகனைப் பற்றிய புதுவகையான பெருமிதம்.

"இதுக்குள்ளே இம்புட்டு விஷயம் இருந்துருக்கா...? இதெல்லாம் தெரியாம,... இம்புட்டுக் காலமா வெறும் மண்ணா கெடந்துருக்கமே-"

மனசின் ஆழத்தின் மடியில் சின்னச் சின்ன ஒளிக் கீற்றுகள்.

பாக்கியம் அவனுக்கு நிறைய விஷயங்களை உணர்த்திவிட்டு மறுநாளே போய்விட்டான்.

பத்து நாளைக்குப் பிறகு -

ஒரு பழுப்பு நிற இன்லெண்ட் காகிதம் நடுக்கத் துடன் திருச்சிக்குப் போனது, அந்த ஊரிலிருந்து.

"நீ போன பிறகு இங்க நடந்த கொடுமை கொஞ்ச மில்லே. ஊர்ப்பஞ்சாயத்து- வாக்குவாதம்... அடிதடியாகி- நம்ம வீடுகள் ஏழு சாம்பலாகிப் போச்சு.

நம்ம சொந்தக்காரங்க பதினாறு பேர் மேலே போலீஸ் கேஸ். போலீஸ் புகுந்து நடத்துன கூத்து பேய்க் கூத்து. பொண்டுபுள்ளைக நாசக்காடாகிப்போச்சு. தெரசம்மா எப்படியோ தப்பிச்சிட்டா.

நம்மளை மனுசங்களா மதிக்கிற நல்ல மனுசங்க ஊருக்குள்ளேயும் சில பேரு இருக்காக. அவுக சப்போர்ட்டுலே நெலமையை சுமுகமாக்க பேச்சுவார்த்தை நடக்குது. என்ன ஆகுதோ... தெரியலே."

**ஆகஸ்ட் 1995, செம்மலர்**

# மனமாயை

குழம்பு ஊற்றிப் பிசைந்த சோற்று வட்டிலில் விரல்களை ஊன்றியவாறு வெறித்தாள், விஜயம். சாப்பிடத் தோன்றவில்லை. முதல் கவளத்தைக் கூட எடுக்கவில்லை. மனதில் ஏதோ நினைவுகள். உஷ்ணமாய் தகிக்கும் கொதி நினைவுகள்.

வாசலுக்கு வெளியே வீதி வெயிலையே வெறித் தாள். இமை தட்டாத பார்வை. நிலைத்த பார்வை. வேறு எங்கோ 'பார்த்துக்' கிடந்தது, மனசு.

"அந்தப் பயலா... அப்படிச் சொன்னான்? அப்படிச் சொல்லணும்னா நெஞ்சுலே எம்புட்டுத் திமிர் இருக்கணும்? அவன் நாக்கை அறுத்து தெரு நாய்க்கு எறிய வேண்டாம்? நாசமாய்ப் போற அந்தப் பாவி வாய்லே புத்து பெறப் பட... ஒருநாள் பேதியில் பாடையிலே போக!"

சத்தமில்லாமல் அவள் உதடு முணுமுணுத்தன. கோபக் கொதிப்பும் குலை கொதிப்புமாய் சீறித் தெறித்த வார்த்தைகள். வார்த்தைக் கங்குகள்.

விஜயத்துக்குச் சாப்பிடவே பிடிக்கவில்லை. எதுவும் செய்யத் தோன்றவில்லை. மனம் முழுக்க குருட்டுக் கோபத்தில் விறைத்துக் கிடந்தது. 'என்ன செய்ய' என்று யோசிக்கக் கூட இயலாமல், விரக்தியின் விளிம்பில் உறைந்து கிடக்கிற மனசு.

கூலி வேலைக்குப் போக வேண்டியவள். நாராயண சாமி நாயக்கர் தோட்டத்திற்குப் பருத்திக்குள் களைவெட்ட வருவதாக வருவதாக ஒப்புக் கொண்டிருந்தவள்தான்.

எட்டு மணிக்குள் 'வேலைக்குப் புறப்படணுமே' என்று பரபரத்துப் போய் வேலை பார்த்தாள். அடுப்பு வேலை, அது இது என்று சில்லறை வேலைகள். ரெக்கை யடித்துப் பறக்கிற அவசரத்தில் இயங்கிக் கொண் டிருந்தாள்.

அப்போதுதான் -

இந்தத் தீ வந்து செய்தியாகக் காதில் விழுந்தது. வேலக்கா வந்து என்னவோ பேச ஆரம்பித்து, இந்தத் தீயைக் கொட்டிவிட்டுப் போனாள். அந்தத் தீ, மனசு முழுக்க பற்றியெரிந்தது. ஜ்வாலை விட்டெரிந்தது. உடம்பும் மனசும் கிடந்து தகித்தது.

'சோற்றையள்ளி வாயில் போட்டு விட்டு வேலைக் குப் பறக்கணும்' என்ற பரபரப்பில் இருந்த விஜயம்... ரெக்கையில் கல்லெறி பட்ட பறவையாக விழுந்து கிடந் தாள். அவளைத் துடிக்க வைத்தது. அவமானத்திலும் அசூயையிலும் மனசே கூசிக்குறுகியது. யாரோ தன்னை மலத்தில் தள்ளி விட்டதைப் போன்ற அருவருப்பு. வெறுப்பு, கசப்பு.

அப்போதுதான் -

"வேலைக்குப் போவமா? வாரீயா?" என்று கேட்டுக் கொண்டு களை சுரண்டியும் தூக்குச் சட்டியுமாக வந்தாள் ராஜம்.

இவள் முகமே எதுவோ மாதிரி விகாரப்பட்டிருந்தது. வெப்ப நீரில் நனைந்த இமை ரோமங்கள், வெட்டுப்பட்ட

பல்லி வாலாக அடி உதட்டில் ரணத்துடிப்பு. மனசுக்குள் எரிகிற தீயின் வெக்கை, முகத்திலும் அனல் வீசியது.

ராஜம் திகைத்துப் போனாள். எதுவும் தப்பாகக் கேட்டு விட்டோமா என்று தடுமாறினாள்.

"என்ன - விஜயம், நாராயணசாமி நாயக்கரு புஞ்சைக்கு வர்றதாகத்தானே இருந்தே?"

"ஆமா..."

"வரல்லியா?"

"வரல்லே..." வறண்ட குரலில் எரிந்து விழுந்தாள்.

"ஏன்... வரல்லே? வாரேன்னு சொல்லி, நம்பவைச் சுட்டு, கடைசி நேரத்துலே வரல்லேன்னு சொன்னா, எப்படி? வையமாட்டாரா நாயக்கரு?"

"வையட்டும்... நல்லா வையட்டும்! சின்னப் பய அல்பப்பயலெல்லாம் நாக்குலே நரம்புல்லாமே என்னைக் கேவலப்படுத்தறப்ப, பெரிய மனுசரு நாயக்கரு வையுறது பெரிய விஷயமா? வையட்டும். நா வரல்லே."

விஜயத்தின் சீற்றம், சீறிச் சினந்து தெறித்த அனல் சொற்களுக்குள் புதைந்து கிடந்த மனவேதனை. ஒரு சோகம். குத்துண்ட புண்ணின் வலி.

ராஜத்துக்கு விஜயத்தைப் பார்க்கவே பாவமாக இருந்தது. இதற்கு மேல் கிண்டிக் கிளற விரும்பவில்லை. 'நொந்த புண்ணை நோண்டக் கூடாது' என்கிற கிராமத்து நாகரீகம்.

"சரி... அப்ப... நா போறேன்."

ராஜம் போய்விட்டாள். விஜயத்துக்கு செயலற்ற நிலை. செயல்பட முடியாமல் மரத்து, மந்தித்துப் போன மனநிலை.

வெளுக்கிற வெயில். இளமதியத்தை நோக்கி முகம் வெளுத்து, நிறம் மாறுகிற வெயில். வெப்பமாகிற வெயில்.

போன வருஷம் நிகழ்ந்த புருஷனின் மரணம். கிணறு வெட்டுகிற வேலைக்குப் போயிருந்தான், வேல்ராஜ். கருங்கல் கிணறு. வேட்டு வைத்து வெடிக்கச் செய்து... சிதறும் கற்களை நொறுக்கி... கூடையில் அள்ளி வெளியேற்றுகிற வேலை.

ஏதோ ஒரு வேட்டு வெடித்ததில் ரொம்ப உயரத்துக்கு நாலா திசைகளிலும் சிதறித்தெறித்த கருங்கல் துண்டுகள். அதில் ஒரு துண்டு... இவன் தலையில் விழ-

ரத்த மழையில் நனைந்த பிரேதமாகத் தூக்கிக் கொண்டு வந்து போட்டனர் நாலைந்து கூலியாட்கள்.

மூன்று வயதுக் குழந்தையோடு இவள் வெடித்துக் கதறி அழுத அழுகை. தலைவிரி கோலமாக நெஞ்சில் அடித்துக் கொண்டு கதறிய கதறல். அறுத்துப் போட்ட கீரைத் தண்டாக வாடிக்கிடந்த அவலக்கோலம். வாழத் தொடங்கிய பருவத்திலேயே வாழ்க்கையையும், தாலியையும் பறிகொடுத்த பரிதாபம். வாழ்க்கையாகவே வந்து அப்பிக் கொண்ட சாஸ்வதச் சூன்யம்.

ஊர்ஜனம் அவளைப் பார்த்துக் கண் கலங்கியது. பேதலித்துப் புலம்பியது. "ஐயோ, ஐயோ..." என்று கதறிப் புலம்பியது. யார் புலம்பி, என்ன செய்ய? மிச்சமிருக்கும் நாட்களை பிழைத்துத் தீர்க்கணுமே.

பிள்ளையை அரைக் கிளாஸுக்கு அனுப்பி விட்டு கூலி வேலைக்குப் போனாள். வேற வழி?

"அந்த ஒழக்கரிசி ஜீவன் உசுரோட இருந்துருந்தா- இந்த நாய்ப் பயலுக்கு இந்த நெனைப்பு வந்துருக்குமா? இப்படிப் பேசியிருப்பானா? பேசுற தைர்யம் வந்துருமா? நாக்கை அறுத்துப் போட்டிருப்பாரே- அந்த நாயகன்."

இறுக்கம் உடைந்த மனசின் நெகிழ்வு. கணவன் பற்றிய நினைவில் இன்றைய வெறுமையின் தகிப்பு. நாதியற்ற பலவீனம். சுய பரிதாபம்.

உடைந்து கசிந்தாள். விசும்பி விசும்பி அழுதாள். யாருமற்ற தனிமை, சுதந்திரமாக அழுதாள். குமுறிப் பீறிட்டு வந்த உணர்வுக்கற்றை உதடுகளில் ஒரு வெடிப் போடு வெளிப்படுகிறது. கண்களில் குத்தலெடுக்கிற நீர். மடை விலகி வழிகிற கண்ணீர்.

...வேல்ராஜ் நல்ல சிவப்பு. கடுமையான உழைப் பாளி. அவனைக் கண்டாலே வேலி மரம் தலை வணங் கும். கருங்கல் பாறை நடுங்கியதிரும். புஜச்சதை உருளும். திரளும். வைரம்வாய்ந்த இறுக்கம். அவனது உள் ளங்கையே மரப்பலகை மாதிரி சொர சொரப்பாக இருக்கும்.

விஜயத்தின் மீது அவன் கொண்டிருந்த காதல். அவளுக்காக ஆறுமாசம் காத்திருந்து தாலி கட்டிய காதல் பொறுமை.

விஜயமும் ரொம்ப லட்சணம். கரிசல் காட்டுக்குச் சம்பந்தமில்லாத செவல் மண்ணைப் போல... அந்தக் கிராமத்தை மீறிய லட்சணம். அரைத்துக் குழப்பிய மஞ்சளின் நிறம். குழைவு. கனிவு. கச்சிதமான முகம்.

கண்ணில் ஒரு மின்னல். கனவைக் குழைத்துப் பூசிய மாதிரியான பூமலர்ச்சியான முகம்.

அவனோடு வாழ்ந்த அஞ்சு வருஷ தாம்பத்யம்.

அவனது லட்சணத்தின் மேல் இவளுக்கும் கொள்ளை மோகம். அவனை விட்டுப் பிரிந்திருக்க மன சிருக்காது. வேலைக்குப் போய் விட்டு வருகிற அவனுக் காக ஒரு தவிப்போடு காத்துக் கிடப்பாள். மனசு கிடந்து துடிக்கும். திரேகத் தவிப்பு.

அவனது அண்மை, உஷ்ணமான மோகிப்பு. மோகம் நிறைந்த அணைப்பு. மூர்க்கமான தழுவல், இறுக்கம். இறுக்கத்துக்குள் அவனது உணர்ச்சிப் பிரவாகம். அவனது பரபரப்பு, அவசரம். அதன் பரவசம். பரவசத் திணறல், திணறலில் மூர்ச்சையாகிப் போவாள், பல சமயங்களில்.

அவனது மூர்க்காவேசத்தில் இவள் நிலைகுலைந்து விடுவாள். இன்பமான குலைவு. திளைப்பான சுகத்தின் பரவசக்குலைவு. நினைத்து நினைத்து ஏங்க வைக்கிற குலைவு.

நிலை குலைந்து... சரிந்து... முழுசாகத் தோற்று... அடித்துப் போட்ட மாதிரி கிறுகிறுத்துக் கிடப்பதில் அவளுக்கொரு பரவசம். தேனுக்குள் சிக்கின எறும்பின் திளைப்பு.

அவன் செத்த பிறகும் கூட—

பல இராத்திரிகளில் அந்தச் சுகத்திளைப்பை நினைத்திருக்கிறாள். நடுச்சாமத்தில், அந்த மூர்க்கத் தழுவலின் நெறு நெறுப்பை உணர்ந்து மூச்சுத் திணறிப் பதறிப் போய் விழித்திருக்கிறாள். அப்படிப் பல ராத் தரிகள். பல கனாக்கள். பரவசக் கனாக்கள்.

விழித்துப் பார்த்தால்–

கனத்த இருட்டும், தகிக்கும் சூன்யமும்.

அந்தக் கணங்களில்தான் வேல்ராஜின் மரணம், எத்தனை கொடிய இழப்பு என்ற நிஜத்தின் முழுமை. அவளை மூர்க்கமாய்த் தாக்கும்.

அதே போல்– இப்போதும்.

ஒன்றுக்கும் உதவாத ஒரு நாய்ப்பயல். கால் தூசிக்குக் கூடப் பெறாத அற்பன். பல்லில் நாக்கைப் போட்டுப் பேசியிருக்கிறான் என்று கேள்விப்படுகிற போது–

அந்த உழக்கரிசி உயிரின் அருமை இவளுக்குள் மலையாய் உயர்ந்து, சமுத்திரமாய் விரிந்து–

"ஐயய்யோ... எந் தங்கப்பெட்டியைத் தூக்கிக் குடுத்துட்டேனே... ஏ ராசா... எங் காவல் தெய்வமே... என்னை வுட்டுட்டுப் போய்ட்டீகளே– நாதியத்த சீவனா என்னைத் தவிக்கவுட்டுட்டு– சாவோட சேர்ந்து போற துக்கு எப்படி மனசு வந்துச்சு?"

நெஞ்சுக்குள் முட்டிக் கொண்டு வந்த அழுகை. தாங்க முடியாமல் வலது தோளில் முகத்தைப் புதைக்கிற விஜயம். ஒப்பாரியும் புலம்பலுமாய் அழுது கசிகிற அவள். கண்ணிலிருந்து சிந்திச் சிதறுகிற கண்ணீர், உலர்ந்து கொண்டிருந்த வட்டில் சோற்றில் தெறிக்கிறது.

..... விடிந்து கொஞ்ச நேரம்தான் ஆகியிருந்தது. மஞ்சள் வெயிலின் நிறம் இன்னும் மாறவில்லை. அடுப்புக்கு விறகு இல்லையே என்று வெளியே போய் எடுத்து வந்தாள் விஜயம்.

விறகுகளை அடுப்பில் சொருக– கொழுந்து விட்டெரிகிற தீ. தீயின் சந்தன நிறம், அவள் கால்சதையில்

விழுகிறது. கால்சதையின் மஞ்சள் ஜ்வலிப்புக்கு முன்னால் நிற்க முடியாமல், தீயின் நிறம் தோற்று முகம் மங்கியது.

அப்போதுதான் -

வேலக்கா வந்தாள். ஏதோ விஷயம் பேச வந்தவளைப் போல 'வளா, வளா'வென்று அதை, இதைப் பேசினாள். விஜயத்துக்குள் வெறுப்பாக இருந்தது. கண்ணில்கூட மன எரிச்சல் லேசாக மின்னியது. இருந்தாலும் முகத்தாட்சண்யத்திற்காகப் பல்லைக் கடித்துக் கொண்டு சிரித்த முகம் காட்டினாள். 'ம்' கொட்டினாள், அரைமனசாக.

வேலக்கா 'ஒரு மாதிரி' என்று ஊர் முழுக்கத் தெரிந்த விஷயம். தகாத உறவுகள்-முறைகேடான சேர்க்கைகள்-கள்ளப்பறவைகள்-என்று நடக்கிற ரகசிய இழிவுகளுக்கெல்லாம் துவக்கப் புள்ளியாகத் தூதாக இருந்து, பாலமாக விளங்குபவள்.

இவள் வீட்டுப்படி ஏறி, நின்று பேசுவதையே அசூயையாக உணர்ந்தாள், விஜயம். வெளிக்காட்ட முடியாமல் உள்ளுக்குள் குமைந்தாள்.

அப்போதுதான் -

பேச்சோடு பேச்சாகப் பேசுவதைப் போல- ரொம்ப இயல்பாக, அந்தத் தீப்பந்தத்தை வீசினாள், வேலக்கா.

"அடிக்கடி... அந்த வேப்பமரம் பக்கமாப் போவீயோ?"

"ஆமா... கடைக்குப் போறப்ப... தண்ணிக்குப் போறப்ப அந்த வழியாப் போவேன். அதுக்கென்ன?"

"அங்க நடராசன் உக்காந்திருப்பானோ?"

"யாரு? அந்த புதுப் பணக்காரனா? வட்டிக்குக் கடன் குடுத்து வாங்குறதைப் பொழைப்பா வைச்சிருக்கானே... அவனா?"

"அந்த எளவட்டந்தான்.;'

"அதுக்கென்ன?'

"ஒறங்குதுக்குக் கண்ணை மூடுனா... நீதான் கனாவுலே வாரீயாம். அப்புறம் ஒறக்கமே வர்றதில்லியாம். ஒம் மேலே அப்படிச் சொக்கிப் போய்.. இருக்கானாம்."

தீப்பந்தத்தால் முகத்தில் அறைந்த மாதிரியிருந்தது, விஜயத்துக்கு. வெலவெலத்துப் போனாள். 'இப்படி ஒரு மலப் பேச்சு முகத்துக்கு நேராக வந்து விழும்' என்று கனாக்கூட கண்டதேயில்லை அவள். அத்து மீறலான அசூயை. கற்பனை செய்ய முடியாத அருவருப்பு.

"அடி செருப்பாலே... நாயை" என்று பீறிட்டு வந்த உணர்வுப் பொறியான வார்த்தைகளைக் கூட சொல்ல வாயில்லாமல் ஸ்தம்பித்துப் போய்விட்ட விஜயம். மனம் முழுக்க தகிப்பு. திரேகமே பற்றி எரிகிற மாதிரியான தோர் தகிப்பு.

வந்த கடமை முடிந்ததென்று போய்விட்ட வேலக்கா.

விஜயத்தால் நிற்கக்கூட முடியவில்லை. திரேகமே நடுங்குவதைப் போலிருந்தது.

'நா வேணும்னா லட்சணமாப் பொறந்தேன்? லட்சணமா இருந்து தொலைச்சுட்டா.. அதுக்கு நா என்ன செய்ய? இந்தப் பாவியோட கொள்ளிக் கண்ணுலே படணும்னா... வேப்பமரம் வழியாப் போறேன்? இந்தச் சின்னப்பய சில்லறையைப் பாத்து சிரிச்சு மயக்கவா, அவன் முன்னாலே போறேன்? அந்தச் சின்ன நாயி சில்லறை...

என்னோட கெண்டைக்காலுலே ஒட்டுற புழுதிக்குச் சமானம். த்தூ!'

நினைக்க நினைக்க அவளுக்குள் குலை கொதித்தது. மனசெல்லாம் கிடந்து கசந்தது. அவமானத்தில் கூசிப் போகிற நினைவு.

'ச்சேய்... நம்மளை எம்புட்டு ஏளனமா... இழிவா-நெனைச்சுட்டான்! ஏழையைக் கண்டா, மோழை (கொம்பில்லா மாடு)யும் பாயுங்கிறது சரியாய்ப் போச்சே. எளியவன் பொண்டாட்டின்னா... எல்லாருக்கும் மதினி முறையா? அப்படி ஒரு சின்னப்பய நினைக்குற அளவுக்கா-நா நடந்துக்கிட்டேன்? இருக்குற லட்சணத்தைக் குலுக்கி மினுக்கிக்கிட்டா- திரிஞ்சேன்?'

வேப்ப மரப் பாதையில், தான் நடந்து போய் வந்த நினைவுச் சுவடுகள். கடைக்கு- ஓடைக்கு- தண்ணீர் எடுக்க-எல்லாம் அந்தப் பாதைதான்.

அப்போதெல்லாம்... வேப்பமரத் திண்ணையில் அந்தக் கொரங்கு உட்கார்ந்திருக்கும். பல்லையிளித்துக் கொண்டு- கண்ணில் காம எச்சில் வழிய- கழுத்துக்கு மேல் ஓநாய்த் தலையோடு... உட்கார்ந்திருக்கும். உற்று உற்றுப் பார்க்கும். கண்ணால் துரத்தும். எத்தனையோ தடவைகள் இவளது உள்ளுணர்வில் உறுத்திய பார்வைகள்.

'இது என்னடா- இச்சிலாத்தி' என்று மனசுக்குள் சள்ளைப்பட்டிருக்கிறாள்.

வேப்பமரப் பாதையில்லாமல் வேறு பாதையிருக்கத் தான் செய்கிறது. மேலத் தெரு வழியாகப் போகலாம். ஆனால், அங்கே ஒரு சிக்கல். இவளுக்குப் பகையான ஒரு சின்னச் சிறுக்கியின் வீடு, அந்தப் பாதையில்.

'அந்தச் சனியன் மூஞ்சியில் முழிக்கக் கூடாதே' என்ற வெறுப்பில்தான் வேப்ப மரப் பாதை. இங்கே- இந்த முள். இந்தச் சனியன். புதுப் பணக்காரனின் வாய்க் கொழுப்பு.

மனசுக்குள் -

அந்த ஓநாயின் மூஞ்சி. கறுத்தமூஞ்சி. மேல் உதட்டுக்கு மேல் மீசை ஓரத்தில் ஒரு மச்சம். கண்ணை உறுத்துகிற மச்சம். தொண்டையில் ஒரு கறுப்பு நரம்பு புடைத்து நெளிந்து இறங்கும். பனியன் போடாத நேரங்களில் நெஞ்சுக்குழியில் ரோம அடர்த்தி. பனியன் போட்டிருந்த தோலின் நிறமாற்ற அடையாளம்.

'ச்சேய்... அந்த ஓநாய் மூஞ்சிக்கு இப்படி ஒரு சபலமா? எச்சில் வடிப்பா?'

இந்தக் கணத்தில் -

அவன் மனசின் ஆழத்தில் ஒரு பெருமித உணர்வு முகம் காட்டுவதை அவளே உணர்ந்து வியந்தாள்.

இப்படி ஓர் ஈனப் பார்வையை ஈர்த்துவிட்ட அழகின்-இளமையின் மீது அவளுக்கே ஒரு கர்வமா? தற்பெருமையா? அல்லது வேல்ராஜ் தந்த அஞ்சு வருஷ ருசியா? ருசி கண்ட பூனையின் கள்ளத்தனம், தன் மனசிற் குள்ளும் பம்மிக் கிடக்கிறதா? நெளிகிறதா?

நானும் எங்கோ... ஒரு மூலையில் சலனப்பட்டி ருக்கேனா? சபலப்பட்டிருக்கேனா? சதைத் திரட்சியின் மோகப் பேயின் ராட்சஸத்துக்குப் பலியாகியிருக்கேனா?

அவனது மேல் உதட்டு மச்சத்தை கண்டுணர்கிற அளவுக்கு நானும் உற்றுப் பார்த்திருக்கேனா?

அப்ப... மேலத் தெருப் பாதையை நான் தவிர்த்ததன் காரணமே... பொய்யா? அந்தப் 'பகையாளியின் முகரையைப் பார்க்கக் கூடாது' என்பது, நானே எனக்குச் சொல்லிக் கொண்ட சாக்குப் போக்குதானா? மாய்மாலம் தானா? 'வேறு வழியில்லாமல் வேப்பமரப் பாதையில் போய் வந்தேன்' என்பதுவும் பொய்யா? உள்மனச் சலனத் தால்தான் வேப்பமரப் பாதையா? விரும்பிச் செல்கிற மோகப் பாதையா? பாவப் பாதையா?

விலகி நின்று அவளை அவளே பார்த்துக்கொள்கிற போது... தனது அந்தரங்கத்தைத், தானே உற்று நோக்கிய கணத்தில்-

தனக்குத்தானே மலமாய்- அருவருப்பாய்- அசூயையாய்...

'ச்சேய்ய்' என்று வந்தது. காறித்துப்பணும் போல மனசுக்குள் ஓர் உன்மத்தம். யார் மீது? அவன் மீதா? தன் மீதேதானா?

வெறிகொண்டவள் போல எழுந்தாள், விஜயம். உலர்ந்த சோற்றை... கழுநீர்ப்பானையில் கொட்டினாள். சம்பந்தமற்ற அந்த இளமதியத்தில் பச்சைத் தண்ணீரில் குளித்தாள். சிலீர் என்று பரவிப்படர்ந்த நீர்க் குளிர்ச்சி. மனத்தகிப்பு. 'திகு திகு'வென்று பற்றி எரிகிறது உணர்வுத் தீ.

வேறு சேலையை உடுத்திக் கொண்டாள். ஈரக் கூந்தல் முதுகு பூராவிலும் பரவிப்படர்ந்து தொங்க... வேக வேகமாக நடந்தாள். ரௌத்ர காளியாக.

வேப்பமரப் பாதையில்தான் நடந்தாள்.

வேப்பமரத்திண்ணை. அவன் இல்லை.

இல்லாமற்போனாலும்... அவன் இருக்கும் திசை பார்த்து, காறித்துப்பினாள். "த்தூ ஊஊ..."

காறித்துப்பிவிட்டு வீடு திரும்புகிறபோது, அவள் மனசு வைராக்யமாய்ச் சொல்லிக் கொண்டது.

"வேப்பமரப் பாதையிலே நடக்குறது, இதுதான் கடைசித் தடவை..."

**5-10-97, கல்கி**

# வஞ்சனை

குருவையாவுக்கு எழுபதுக்கு மேலாகி விட்டது வயசு. உட்கார்ந்தால் எழுந்திருக்க முடியவில்லை. முழங்கால் மூட்டுவாதம். நடந்தால் ஒரு தளர்ச்சி. ஒரு நிரந்தரமான வலி.

'எல்லாம்... முடிஞ்சு போச்சு. மயானக் கரையிலே கட்டையை சாய்ச்சிருக்கணும். சாம்பலாயிருக்கணும். ஆனா- நம்ம பாடு ஓயலியே."

ஒரு பெருமூச்சு அவரைப் பிளந்து கொண்டு வெளிப்பட்டது. அடைகிற பொழுதைப் பார்த்தார். நிறம் மாறுகிற வெயில். 'கிடைகாவலுக்குப் போவணும். விடிய விடிய செம்மறியாடுகளோடு மாரடிக்கணும்.'

இந்த நினைவே அவருக்குள் சோர்வூட்டியது. வேலைப் பளுவைச் சுமக்கிற சக்தி உடம்புக்கு இல்லை. மனசின் பலத்தில்தான் வண்டி ஓடுகிறது.

"இன்னொரு டீ போடப்பா. கிடைகாவலுக்குப் போவணும்."

வீட்டுக்குப் போனால்... கெழடி எல்லாம் ரெடி பண்ணியிருப்பாள். கம்பளி, சாக்கு, போர்வை எல்லாம் மடித்துச் சுருட்டி கட்டியிருப்பாள். அதற்குள் டார்ச் லைட்டையும் சொருகியிருப்பாள். ஆட்டுக் கம்பையும் எடுத்து வைத்திருப்பாள். கூதலுக்குக் கதகதப்பாக

இருக்கட்டும் என்று காக்கிச்சட்டை, ஸ்வெட்டர், மப்ளர் என்று எல்லாம் தயார் நிலையில் இருக்கும்.

குடித்த டீயின் ருசி நாக்கில் நின்றது. ஒரு தெம்பு வந்த மாதிரியோர் உணர்வு. பீடியைப் பற்றவைத்து நடந்தார். நடை கோணல். ரெண்டு காலும் ரெண்டு பக்கமும் விரிந்து நடக்க... நடையின் அசைவில் உடம்பே தேர்போல ஆடியது.

மனுஷர் தேர் மாதிரி கம்பீரமாய் இருந்தவர்தான். ஆள் இற்றுப்போய் விட்டார், இப்போது. சதையை யெல்லாம் உடைத்துக் கரைத்துக் குடித்துவிட்ட முதுமை. அவரையே பலவீனப்படுத்திய வாழ்வின் ஏமாற்றங்கள். கொடிய வஞ்சனைகள். தாளமுடியாத அதிர்வுகள்.

பெற்ற பிள்ளைகள் வைத்த தீ. மூன்று ஆண்மக்கள். மூன்று சிங்கங்கள். உள்ளூரிலேயே குழந்தையும் குட்டியு மாய் குடும்பமாயிருக்கிறார்கள். இருந்து என்ன செய்ய? வயித்துக் கஞ்சிக்கு அலைய விட்டுட்டாங்களே... சாகப் போகிற வயசுலே பாடுபட வைச்சிட்டாங்களே... பாவிப் பயக...! உசுரோட கொள்ளி வைச்சுட்டாங்களே...

குருவையா அந்தச் சின்ன ஓட்டுச் சாய்ப்பு முன்பு நின்றார். முற்றத்தில் கட்டிக் கிடந்த வெள்ளாட்டுக் கிடாய்க் குட்டி. அகத்திக்கொழையை 'நறுக், நறுக்' கென்று கத்தரித்துக் கொண்டிருந்தது. நடைச் சத்தத் திலேயே இவரது வாசத்தை உணர்ந்துகொண்டு, பாசத்தோடு, நிமிர்ந்து பார்த்தது.

'இந்தக் கிடாய்க்குட்டிக்கு இருக்குற பண்புலே பத்துலே ஒரு பங்கு நம்ம பயகளுக்கு இருந்தாக்கூடப் போதுமே...! நன்றி விசுவாசங்கெட்ட பயக.'

எரியும் மனசுக்குள்ளிருந்து ஜ்வாலைவிடும் நினைவு கள். நினைவுகளின் வெக்கை.

நின்று நிதானித்த கிடாய்க்குட்டியின் சலனமின்மை யில், நின்றுபோன கழுத்து மணியோசை. அதிலேயே இவரது வருகையை நுகர்ந்துவிட்ட கெழடி... கழுத்தை வாசல் பக்கமாய் நீட்டினாள். "வந்துட்டீகளா?"

"ம்..."

"சாப்ட்டுக்கிடுதீகளா?"

"போடு. ஏதாச்சும் போட்டு அடைச்சுக்கிட ணும்லே?"

கிழடி இவரை விடவும் நொடித்துப் போயிருந்தாள். தோலைப் போர்த்திய எலும்புக்கூடாகிப் போய்... அதன் குழல் வாய்க்குள் ஊசலாடுகிற உயிர்க்காற்றாகி...

சாப்பிட்டு முடித்தார். நரைத்த மீசையை ஒதுக்கி விட்டு நீவி விட்டுக் கொண்டார்.

பீடியைப் பற்றவைக்கப் போனவரை... கிழடி கடிந் தாள்.

"ஏய் கெழட்டுச் சனியனே... அதுக்குள்ளே எதுக்கு இந்த நாத்தத்தை வாய்லே சொருகுதீக?"

"பீடி குடிச்சா... ஒனக்கென்ன வந்துச்சு?"

"வவுத்த வலிக்கு மாத்திரையும் டானிக்கும் குடிச்ச பிறகு பத்தவைக்க வேண்டியதுதானே?"

"அது வேற... இச்சிலாத்தி. ச்சே!"

அவரது முகச் சுருக்கங்களில் ததும்பி நின்றன சலிப்பும், எரிச்சலும்.

வாயில் வைத்த பீடியை எடுத்துக் காய்ந்த தலை முடிக்குள் சொருகிக் கொண்டார். கிழடி தந்த மாத்திரையை ஏழு கோணலாய் நெளிந்த முகத்தோடு பார்த்தார். கசப்பும் வெறுப்புமாய் விழுங்கினார். ரோஸ்கலரில் சுண்ணாம்புக் கரைசலைப் போலிருந்த டானிக்கையும் குடித்தார்.

கிடைகாவல் தந்த சீதனம் இந்த வயிற்றுவலி. கொதி வெயில்பட்ட புஞ்சை மண்ணில் படுப்பதால் வந்த சூடு. குடல்புண், இரைப்பை முழுக்க புண். பசித்தாலும் வயிறு வலிக்கும். சாப்பிட்டாலும் வயிறு வலிக்கும் சாஸ்வதரணம். ரண அவஸ்தை.

என்ன செய்வது! கிடைகாவலுக்குப் போகாமல் எப்படி உயிர் வாழ? எதைத்தின்று ஜீவனம் செய்ய? வருமானம்? வேறு என்ன தொழில் செய்ய முடியும், இந்த வயசில்? உயிர் வற்றிப்போன வெறும் வயசில்.

எல்லாம் ஆயிற்று. காக்கிச் சட்டையை மாட்டி, ஸ்வெட்டர் (ஒரு பட்டாளத்தார் உபயம்தான் எல்லாம்) மாட்டி, மப்ளரையும் கட்டிக் கொண்டார். ஆட்டுக்கம்பு நுனியில் கிழடி கட்டி வைத்த கம்பளிச்சுருட்டும், காபி போடுகிற அலுமினியச் சட்டி, தண்ணீர் கேன் உள்ள தூக்குப்பையும் தொங்க... ஆட்டுக்கம்பு தோளில் பற்றியிருக்க-

அவரது நடை. இயல்பு தப்பிய தேரின் நடை.

சாயங்காலம் முடிந்துவிட்டது. அந்தி இருட்டு வந்து கொண்டிருந்தது, தானடித்த மூப்பாக. நரைத்த வெள்ளை இமைகள் 'பொசுக் பொசுக்'கென மூடி முழித்தன. எதிர்வரும் ஆளை இனம் காண முயன்று திணறின. ம்ஹூம். முடியவில்லை. குரலில்தான் ஆள் புரிகிறது.

சத்தமாகவே முகம் காட்டுகிற உலகம். காதே கண்ணாகிப் போன அவலம்.

"தாத்தா... எங்கே.. கெடை காவலுக்கா?"

"ஆமய்யா. யாரது? ராசமணி மவனா?"

"ஆமா தாத்தா... கண்ணுக்கு ஆளே தெரியலியே, நமக்கு ஆடுக எப்புடி தெரியும்? விடிய விடிய அதுகளைக் கட்டிக்கிட்டு எப்படி மாரடிப்பீரு?"

"கஷ்டந்தான்... ஆனாலும் சமாளிச்சிடுவேன்."

"எப்படி தாத்தா?"

"பத்து வயசுலே ஆட்டுக்கம்பைத் தூக்கிக்கிட்டு, ஆட்டு வாடையை ஏத்துக்கிட்டு மேய்க்க ஆரம்பிச்சவன், நா. மனுச சகவாசத்தைவிட ஆட்டுச் சகவாசம் ரொம்ப சுத்தமாய் அத்துப்படி. அதுக ரோம அசைவுலேயே ஒரசுற சலன சத்தத்துலேயே- அதுக மனசு புரிஞ்சு போகும். கள்ளத்தனம் புடிபட்டுடும். அதுக்கேத்தாப்புலே அடக்கி வச்சிரலாம்."

"ம்" கேட்டவன் பிரமித்துப் போய் அவரைப் பார்த்தான்.

"குருவையாக்கோனாரு கெடைகாவல் காத்து- தப்பு வந்ததாக நீ கேள்விப்பட்டிருக்கீயா, இதுவரை? ஆடுக தப்பிப் போய் வெள்ளாமையிலே விழுந்துச்சுன்னு இதுவரைக்கும் ஒரு தாக்கலாச்சும் உண்டா?"

அவரது கேள்வியின் கம்பீரம். நிமிர் சுடராக ஒளி வீசுகிற தன்னம்பிக்கை. நரைத்த மீசையில் ஒரு நிமிர்வு. உணர்வுப் பிரகாசம்.

அந்தக் கணம்-

அவருக்கே அவர் அருமையானவராக- உன்னத மானவராக- மொத்த வாழ்க்கையும் முழுமையாக அர்த்தப் பட்டிருப்பதாக-

ஒரு சுயதரிசனம். சுய பெருமிதம். அவர் நெஞ்சு விம்மியது.

அவரது மனசுக்குள் பூக்களின் சிரிப்பு. பூவிதழ்களின் மென்வருடல். மாயலோக போதை மயக்கம்.

தெருப் புழுதிகூட பூமெத்தையாக உள்ளங்காலை முத்தமிடுவது போலிருந்தது.

எல்லாம்... சில கணம்தான்.

அதற்குள்-

பூமனசைக் குத்திக்கிழிக்கிற முட்களாக மகன்களின் நினைவு. வளர்த்து ஆளாக்கிய மகன்கள். கல்யாணம் செய்து வைத்து, கண்டு ரசித்த மகன்கள். கஞ்சி ஊற்றாமல் வஞ்சனை செய்த மகன்கள். பாசமற்று, ஈரமற்று, பாறைகளாகிப் போன மகன்கள். இந்த சமூக அமைப்பைப் போலவே உலர்ந்து, காய்ந்து, குரூரமாகிப்போன மகன்கள்.

அவர் மனசெல்லாம் முட்கள். அதன் குத்தல்கள். அவற்றின் கிழிப்புகள். அதன் ரணம்.

அவருக்குள் கசந்து அழறியது.

மூத்தமகன் அடிஉதட்டைக் கடித்துக் கொண்டு ஓங்கிய கையோடு அடிக்கப் பாய்ந்து வந்த அந்த நாளின் பயங்கரம்.

ரெண்டாவது மருமகள் இவரது வட்டிலை தெருப் புழுதியில் கோபவசவுகளோடு வீசியெறிந்த அந்த அவமான வேதனை...

புருஷனுடன் வாய்ச்சண்டை. அடிதடி. அடிபட்ட கொதிப்பில் அழுது புலம்பிய மூன்றாவது மருமகள், "எல்லாம் இந்தக் கெழட்டுச் சனியன்களாலே வந்த வெனை. இதுக நம்ம காலைச்சுத்துன பாம்புகதான்."

முற்றி உலர்ந்த கிழட்டு மனசுக்குள் விழுந்த செருப்படிகள்-

**ம**ணிமுத்து புஞ்சை மிருதுவாக இருந்தது. உழுது புரட்டப்பட்டிருந்தது. ஈரல்கட்டி மாதிரி மினுமினுக்கிற மண். இதில் தான் கிடை.

செம்மறியாடுகளை துண்டம் துண்டமாய் (துண்டம் = ஏறக்குறைய நாற்பது ஆடுகள்) கொண்டு வந்து சேர்ப்பார்கள். மேய்ந்த ஆடுகள், இரவு முழுக்க அசை போடும். படுத்துக் கிடக்கும். மூத்திரம் பெய்யும். புழுக்கை போடும். இதுதான் புஞ்சைக்கு உரம்.

ராத்திரி முழுக்க விழித்திருக்கணும். ஒரு மணிக்கொரு தடவை படுத்துக் கிடக்கிற ஆடுகளை உசுப்பி, வட்டமடித்து இடம் மாற்றிப் படுக்க வைக்கணும். கள்ள ஆடுகள் சிலது தப்பிப்போய் பக்கத்து வெள்ளாமைகளை மேய்ந்து நாசமாக்கிவிடும். அப்படியாகாமல் காப்பதில் தான், கிடைகாவலின் முக்கியத்துவமே.

வெயில் காலத்தில் மட்டுமே கிடை போட முடியும். ஒரு கிடைகாவலுக்கு அறுபது ரூபாய் சம்பளம். மழை நாளில்...? குருவையா பாடு திண்டாட்டம்தான். பீடி வாங்கக் கூட துட்டு இருக்காது.

புஞ்சை மூலையில் மண்கட்டிகளைக் காலால் தள்ளினார். சாக்கை விரித்தார். படுத்துவிட்டார். நடுச்சாமம் வரை புஞ்சைக்காரன் பொறுப்பு. அப்புறம்தான் இவர்.

ஆகவே முன்கூட்டியே உறங்க ஆரம்பித்து விட்டார்.

**ம**ணிமுத்து அவரை உசுப்பினான், நள்ளிரவில்.

"நேரமாயிருச்சா?"

"ம்."

அள்ளியிறைத்த சோளமாக ஆகாய நட்சத்திரங்கள்.

"காப்பி போட்டுட்டியா?"

"போட்டேன் மாமா. உங்களுக்கும் வைச்சிருக்கேன். ரெண்டு தடவை குடிச்சுக்கலாம், நீங்க."

குருவையா முகத்தை அழுந்தத் துடைத்தார். உறக்கத்தையும் தான்.

"சரி- மணிமுத்து, நீ வீட்டுக்குப் போறீயா?"

"ம்."

"பேர்வையடிச்சீயா?"

"மூணு பேர்வையடிச்சேன்."

"மணிமுத்து- ஆடுகளை நல்லபடி காவல் காத்தீயா? எது ஒண்ணும் கள்ளத்தனமாய்த் தப்பிப்போகலியே?"

"இல்லே. நல்லா பாத்துக்கிட்டேன். நீங்களும் பாத்துக்கங்க.

எழுந்தார். கம்பைக் கையில் எடுத்தார். ஆடுகளைச் சுற்றிப் பார்த்தார். அதன் கொச்சை நெடி. மூத்திர வாசம். அசைபோடுகிற அழகு. மூக்குச்சளி சிதறித் தெறிக்க அதன் செருமல்கள். இவரை அடையாளம் பார்த்துக் கொண்டே அன்புக் கனைப்பு.

இரவின் கனம். தொலைதூரத்தில் கூட்ஸ் ஓடுகிற சத்தம். லாரிகளின் மங்கலான இரைச்சல். ஆலைச் சங்கின் சத்தம். இரவு நீளமாகிக் கொண்டிருந்தது.

மறுநாள். டீக்கடையில் உட்கார்ந்திருந்த இவரைத் தேடிக் கொண்டு ஒருவன் அரக்க பறக்க ஓடி வந்தான்.

"தாத்தா..."

"என்னப்பா?"

"ஊர்க் கூட்டம் கூடியிருக்கு. உங்களைக் கூப்புடுறாக."

"என்னை எதுக்கு?"

"ஒமக்கு வெஷயமே தெரியாதா? நேத்து கெடை காவல் காத்தீர்லே?"

"ஆமா..."

"அதுக்கு ரெண்டு புஞ்சை தள்ளி பருத்தி வெள்ளாமை. தண்ணி பாய்ஞ்ச புஞ்சை. பூராத்தையும் ஆடுக மேய்ஞ்சிருச்சு. ஆட்டுத்தடம் அப்படியே கெடக்கு."

"ஐயய்யோ!"

"ஊர்க் கூட்டத்துக்கு வருவீகளாம்."

அவருக்குள் கத்திக்குத்து விழுந்த மாதிரியிருந்தது. அடி மனசில் குப்பென்று பற்றிக்கொண்ட தீ. இவர் வாழ்ந்த நாட்களில் - இத்தனை வருஷ சர்வீசில் - இப்படியொரு தவறு நிகழ்ந்ததேயில்லை. ஊர்க் கூட்டத்தில் குற்றவாளியாய் நின்றதேயில்லை. தலை குனிந்ததேயில்லை.

'சாகப்போற வயசுலே இப்படியொரு அவமானமா?'

ஊர்க்கூட்டம்னா... சும்மாவா? ஊரே கூடியிருக்குமே.. எல்லாக் கண்ணும் இவரையே பார்க்குமே.. ஆள் ஆளுக்குக் கேள்வி கேட்பார்களே.. கேலி செய்வார்களே.. அழிமானம் ஆன புஞ்சைக்காரன் ஆவேசமாய் வைவானே... சபிப்பானே... ஆயிரம் ரெண்டாயிரம் என்று அபராதம் போடுவார்களே...

ஐயய்யோ... இத்தனை அவமானத்தையும் அனுபவிக்கவா? அதை விடச் செத்துத் தொலையலாமே... இனிமே இருந்து எந்த ராஜ்யத்தைக் கட்டியாளப் போறோம்..?

அவருக்குள் அடிபட்ட பறவையாகத் துடிக்கிற நினைவுகள். பயமும் திகிலுமாய் நனைந்து போகிற மனசு.

காலடித் தரையே உருவிக் கொண்டோடுகிற மாதிரி பகீர் உணர்வு. மனப்படபடப்பு, மயக்கமும் தலைசுற்றலுமாய் உலகமே சுழல்கிற மாதிரியோர் பிரமை.

அந்த நிலையிலும் அவருள் ஒரு நெருடல்.

நடுச்சாமத்துக்குப் பிறகு, இவரது காவலில் ஆடுகள் தப்பிப்போகவேயில்லையே.. ஒன்றிரண்டு கூட நழுவிப் போகவில்லையே..

அப்படீன்னா..?

மணிமுத்து காவலில்தான் தப்பு நடந்துருக்குமா? ஒப்புக் கொள்வானா? தைர்யமாய் நேர்மையாய் ஒப்புக் கொள்வானா? அந்த நேர்மையையும், நாணயத்தையும் இந்தத் தலைமுறை மனுசன்கிட்டே எதிர்பார்க்க முடியுமா?

அவன் ஒப்புக் கொள்ளாவிட்டால்... இவர்தான் பொறுப்பேற்க வேண்டும். இவர்தான் கிடைகாவல்.

மரண விளிம்பில் தடுமாறும் நம்பிக்கைச் சுடர்.

மணிமுத்துவைத் தேடி ஓடினார். அகலித்த முழங்கால்கள். இயல்பு தப்பின தேரின் சாய்வு, எலும்புத் தோலின் நகர்வு.

மணிமுத்து கள்ள முழியாக முழித்தான். தனது காவல் நேரத்தில் தப்பே நடக்கவில்லை என்று சாதித் தான்.

குருவையாக மருகி மருகிக் கேட்டார். உயிரை நாவில் வைத்துக் கேட்டார். தவிப்போடு கேட்டார்.

"சாமி சத்தியமா ஏங்காவல்லே தப்பே நடக்கலே மாமா."

'சாமிசத்தியம்' என்றதும் வாயடைத்துப் போனார், குருவையா. இதுக்குமேல் பேச என்ன இருக்கு?

மணிமுத்துவின் கள்ளமுழியை வெறுப்பும் கசப்புமாய்ப் பார்த்தார். உண்மையைத் தொலைத்த தலைமுறை. நேர்மையையும், நாணயத்தையும் இழந்த தலைமுறை. பெற்ற தாய், தகப்பனுக்குக் கஞ்சி ஊற்றிக் காப்பாற்றுகிற கடமையை வெட்கமில்லாமல் கழற்றிப் போட்ட ஈரமற்ற தலைமுறை.

அவருக்குள்.

தனது ரத்த உயிர்கள். மகன்கள்! உலகமே மகன் மயமாகிவிட்ட மாதிரியோர் பிரமை. வஞ்சனையின் விஷக்காற்றின் முற்றுகை.

*மணிமுத்துவை விட்டு விலகி நடந்தார். பாதம் கனத்தது. புகலற்ற நிலையில் ஊர்க் கூட்டத்தை நோக்கி நடந்தார்.*

*நெஞ்சுக்குள் சுருக்'கென்று ஒரு வலி. மின்சாரமாய்த் தாக்கிப் பரவிய வலி.*

*நடந்தார்.*

*எந்த இடத்தில் விழுவாரோ...*

**கல்கி (சுதந்தரப் பொன் விழா மலர்) 1997.**

# விரிசல்

ஊருக்குப் புறப்படுகிற பரபரப்பில் இருந்த விநாயகம், 'இந்தத் தடவையும் ஏதாச்சும் இடைஞ்சல் வந்து சேருமோ?' என்று பயந்து தவித்தான். பயணம் நின்று போகுமோ என்று பதைத்தான்.

மர்ம முகம் காட்டி இருட்டாக மிரட்டியது ரெண்டு நாள் அனுபவங்கள்.

திருவிழாவுக்குப் போகிற கிராமத்துச் சிறுவனின் மனசைப் போல விநாயகம் ஊருக்குப் போகப் பறந்தான். ஆவலும் ஆர்வமும் அவனுக்கு றெக்கைகளாக முளைத்திருந்தன. தரையில் கால் பாவாமல் அரக்கப் பரக்க அலைந்தான்.

அவனை ஒரு வேடிக்கைப் பொருளைப் போல பார்த்தாள் ராஜம். ஓடியாடி சேட்டை செய்யும் பிள்ளையைப் பார்த்து ரசிப்பதைப் போல, பரிகாசமும் பெருமிதமும் கலந்த குறுஞ்சிரிப்போடு பார்த்தாள், புருஷனை.

"என்ன... மதிய வண்டிக்காச்சும் போயிருவீகளா, போகமாட்டீகளா?"

"இல்லே இல்லே... இப்ப எட்டு மணி வண்டிக்குப் போயிருவேன்."

தகரப்பெட்டியைத் திறந்தான். அந்துருண்டை வாசம் 'கம்ம்'மென்று மணத்தது. வெள்ளைவேட்டியை ஒரு பூவைப்போலப் பதனமாகத் தொட்டு எடுத்தான். விரித்தான். உடுத்திக் கொண்டான்.

மறுநாள் உடுத்திக்கொள்ள ஒரு செட் எடுத்து மஞ்சள் பைக்குள் வைத்துக் கொண்டான்.

பனியனை மாட்டிக்கொண்டான். தலையில் எண்ணெய் தேய்த்தான். கால் கையெல்லாம் தேய்த்தான்.

அப்பவும்... அவன் மனசுக்குள் அதே பதைப்பு.

'ஏதாச்சும் இடைஞ்சல் வந்துருமோ... கழுத்தாம் பிடியாக ஏதாச்சும் ஒரு காரியம் காலைப் பிடித்துக் கொள்ளுமோ?'

மனசு 'திக், திக்'கென்றது. ஊரில் அகப்பட்ட எல்லாச் சாமிகளையும் மனசுக்குள் வேண்டிக் கொண்டான். 'வில்லங்கம் ஏதும் நேராமல் ஊரு போய்ச் சேரணுமே..'

நியாயமாகப் பார்த்தால், முந்தாநாளே புறப் பட்டிருக்க வேண்டிய பயணம் இது.

...பதினைந்து மைல் தள்ளி ஒரு கிராமம். இந்த ஊர் பஸ்ஸில் ஏறி உட்கார்ந்து, 2-60 டிக்கெட் வாங்கினால்... அந்த ஊரில் இறக்கி விட்டுவிடும்.

அந்த ஊரில் விநாயகத்தின் சிநேகிதக்காரன் முத்துசாமி. சிநேகிதம் என்றால், சாதாரண சிநேகித மல்ல. சின்ன வயசு முதல் உயிர் பின்னி வளர்ந்த சிநே கிதம். இவன் வீட்டுக் கம்மங்கஞ்சியை அவன் குடிப் பான். அவன் வீட்டுச் சோளக்கஞ்சியும் மோரும் கரைத்து,

இவன் குடிப்பான். ஒருநாள் ரெண்டு நாளல்ல... பல வருஷம்.

இத்தனைக்கும்... ரெண்டுபேரும் வேறு வேறு ஜாதி. ஜாதி அவர்கள் சிநேகிதத்துக்கு எந்தக் கணத்திலும் இடைஞ்சலாக இருக்க அவர்கள் அனுமதித்ததில்லை.

அவன் தங்கச்சிக்கு நாளை கல்யாணம்.

"ரெண்டு நாளைக்கு முந்தியே நீயும் ராஜமும் வந்தாகணும். இல்லேனா... எனக்குக் கேட்ட கோபம் வந்துரும். ஆமா சொல்லிட்டேன்."

சண்டைக்குக் கூப்பிடுகிற மாதிரி கோபமும் கண்டிஷனுமாகச் சீறி விழுந்தான் முத்துசாமி. 'திகிடு முகுடாய்' எச்சரித்தான். பாசத்தின் மூர்க்கம். நட்பின் மூர்த்தண்யம். நாசூக்கு, பாவலா, குளிர்ச்சிரிப்பு என்று எந்தப் போலித்தனத்துக்கும் இடமில்லாத வெள்ளந்தியான சிநேகிதம்.

இவனும் சண்டைக்காரன் மாதிரியே 'கடாபுடா' என்றுதான் பதில் சொன்னான்.

'எந்தங்கச்சி கல்யாணத்துக்கு எப்ப வரணும்னு எனக்குத் தெரியும்லே? இவரு தாம்பாளம் வெச்சு அழைச்சாத்தான் வருவோமா? எனக்குத் தெரியாதோ? போ-போ... நாங்க வருவோம்..."

முந்தாநாளே ராஜத்தைப் புறப்படும்படி துரிதப் படுத்தினான் விநாயகம். அவள் ஒரேயடியாக மறுத்து விட்டாள்.

"நிறைமாசச் சினையா ஜெர்சிப்பசு நிக்குது. இன் னிக்கோ, நாளைக்கோ கன்னுபோடும். பத்தாயிரத்துக்கு ஏவாரிக கேக்காக. அப்படிப்பட்ட பணம்பெத்த மாட்டைப்

போட்டுட்டு- கல்யாணத்துக்கும் காட்சிக்கும் நாம ஜோடி சேர்ந்து போகவா? அது நல்லாயிருக்குமா? ஊர்லேயிருக்குறவுக கைகொட்டிச் சிரிக்கமாட்டாக?"

அவள் மறுப்பில், மறுக்க முடியாத நியாயம் இருக்கத்தான் செய்கிறது. ஆனாலும், இவனுக்கு ஒப்புக் கொள்ள முடியவில்லை.

இவன் மட்டும் ஒற்றையாக எப்படிக் கல்யாணத் துக்குப் போவது? அதுவும் உரிமைப்பட்ட வீட்டுக் கல்யாணத்துக்கு. அது ரொம்ப வேற்றுமையாகத் தெரியாதா? மொய் செய்ய மட்டும் வருகிற வேற்றாளுக்கும் இவனுக்கும் வித்தியாசம் இல்லாமல் போய்விடாதா?

விடாமல் வற்புறுத்தினான். வீடு சண்டைக் காடா யிற்று. காச்சு மூச்சென்று சத்தக்காடு. வசவும் விசும்பலு மாக வீடே 'கசாபுசா'வென்று கிடந்தது

நேற்றுதான் சுமுகமாயிற்று. தான் மட்டும் புறப் படுவது என்று முடிவு செய்தான், விநாயகம்.

மதிய பஸ்ஸுக்குப் போவது என்று திட்டம். எல்லா ஏற்பாடுகளும் நடந்தன. வேலைகள் றெக்கைகட்டிப் பறந்தன. காலில் செருப்பை மாட்டிக்கொண்டு புறப்படும் தருணம்... வாசலை மறித்துக் கொண்டு ஒரு முக்கிய உறவினர்.

இவனுக்குள் மகா எரிச்சல். குப்பென்று பற்றிக் கொண்ட தீ. திகு திகுவென்று தகிப்போடு பரவுகிற தீ.

ஆனாலும், முகம் நிறையச் சிரித்தாகணும். உறவி னரை உபசாரமாகப் பேசி வரவேற்றாகணும். சிரித்தான்.

"வாங்க மாமா... வாங்க மாமா..."

"ஆமா மாப்ளே... எங்கேயோ கெளம்புன மாதிரித் தெரியுது. தூரவா?"

"ஆமா மாமா. ஒரு முக்கியமான கல்யாணம். போக லேனா சண்டைக்கு வருவான். நேத்தே போயிருக்கணும். போகலே. இப்பவாச்சும் போயாகணும்."

"நானும் முக்கியமான காரியமாத்தான் வந்துருக் கேன். நீங்க அடுத்த வண்டிக்குப் போங்க, மாப்ளே."

முக்கியம், நிஜமாகவே முக்கியம்தான். ஒரு நெருக்கமான உறவுப் பெண்ணின் குடும்ப வழக்கு பற்றிய விஷயம். வாழ்க்கையா - விவாகரத்தா என்று நிர்ணயிக்கிற அளவுக்கு முக்கிய விவகாரம். அந்த முக்கிய விவகாரம் முடிய... அன்றைய பொழுது சரியாயிற்று. ரெண்டாம் நாளும் போச்சு, நாளை கல்யாணம்.

இப்பவாச்சும் போயாகணும். போகலேன்னா... முத்துசாமி காறித்துப்புவான். 'நீயெல்லாம் ஒரு மனுஷந்தானா?னு' நாக்கைப் புடுங்கிக்கிடுற மாதிரி 'நறுக்கு'னு வேள்வி கேப்பான். கேட்டா வாங்கிக் கட்டிக்கிட வேண்டியதுதான்.

முத்துசாமி நல்ல மனசுக்காரன். இவனுக்கும் ராஜத்துக்கும் வேட்டி, சட்டை, சேலை எல்லாம் புதுசாக எடுத்துத்தர எண்ணியிருந்திருக்கிறான். கல்யாணச் செலவு கையைக் கடிக்க, அந்த எண்ணத்தை வருத்தத் தோடு கை விட்டிருக்கிறான். அதை அவனே அன்றைக்குச் சொல்லிச் சொல்லி மருகின விதம்... இயலாமை குறித்துப் புலம்பிய விதம்...

ராஜம்தான் ஆறுதல் சொன்னாள். "விடுங் கண்ணாச்சி... இதுக்குப்போய் வருத்தப்பட்டுக்கிட்டு...

நாளும் பொழுதும் கெடக்கு. நாம எப்ப வேணும்னாலும் நல்லது பொல்லது கொண்டாடிக்கலாம்."

அப்பேற்பட்டவன் வீட்டுக் கல்யாணத்துக்கு- நாலு பேரைப்போல நாலாம் மனிதரைப்போல... நாமும் கல்யாணத்தன்னிக்குப்போய் நிக்கிறதா? நின்னா... அது நியாயமா? ச்சே!

"அப்ப... நா போயிட்டு வரட்டா...?"

"போயிட்டு வாங்க..."

"பசுவைப் பாத்துக்க..."

"ஆட்டும்."

வீட்டு முற்றத்தில் காலெடுத்து வைத்தான் விநாயகம். ஒருத்தன் ஓட்டமாக ஓடி வந்தான். உயிர்தெறித்துப் போக, வெறி வேகமாக ஓடி வந்த அவன் முகத்தில் தாங்க முடியாத வெலவெலப்பும் திகிலும்...

விநாயகமும் வெலவெலத்துப்போய்-

"என்னப்பா?"

"உங்க கீழக்காடு பருத்திப் புஞ்சை இருக்கு இல்லே?"

"ஆமா..."

"ஒன்றைக் குறுக்கம் புஞ்சையும் ஒரு செடி விடாம ஆடுக மேய்ஞ்சிருச்சு. வெள்ளாமை பூராவும் சர்வநாசம், பானைஞ்சாயிரமும் படு நாசம்."

விநாயகத்துக்குள் 'திக்'கென்றது. நெஞ்சுக்குள் அடைப்பது போல ஒரு திணறல், 'இன்னது நடந்தது' என்று நிதானிக்க முடியாத மனப்பதட்டம். குருட்டுத் திகைப்பு.

"ஐயையோ... ஏங்குடியே நாசமாப் போச்சே..." என்று ராஜம் வைக்கிற ஒப்பாரி. தலையில் 'மடேர், மடேரெ'ன்று அடித்துக் கதறுகிற பரிதாபம்.

விநாயகத்துக்குள் பயப் படபடப்பு. நெஞ்சுக்கூடே வெறுங்கூடாகிப் போன மாதிரி. பகீரென்கிற சூன்யம்.

காயும் பூவுமாக நிறைமாசக் கர்ப்பிணியாகத் தளதளத்து நின்ற தன் புஞ்சையை, ஆடுகள்மேய்ந்த பிறகு- வெறும் குச்சிகளாக - எலும்புகளாக - நிற்கிற பரிதாபம். மனசுக்குள் தோன்றி மறைந்த அந்தக் காட்சியே... அவனுக்குள் தீ வைத்த மாதிரியிருந்தது.

வந்திருக்கும் நாசத்தின் கனம், அதன் பரிமாணம்.

அவன் மனசு கிடந்து துடித்தது. ஒரு வருஷ உழைப்பே நாசம். வெள்ளாமையே அழிவு.

என்ன செய்ய?

ஆட்டுக்காரனைத் தேடணும். சண்டை போடணும். பக்கத்து ஊரு டவுனுக்கு ஓடணும். போலீஸ் ஸ்டேஷன் போகணும். அததுக்கு 'செல்வாக்கான' ஆளைப் புடிக்கணும். பணம் புரட்டணும். வேனைப் புடிக்கணும். சேதாரத்தை போலீஸ் பார்க்க வைக்கணும்...

இப்படி நிறைய்ய்ய்ய்ய 'ணும்'கள்.

சூறாவளிக்குள் சிக்கிய துரும்பாக இவன் சுழன்று சுழன்று, புழுதி பறக்க ஓடித் தவித்தான். மறுநாளும் தவிப்போடு ஓடினான். சோகமும் துயரமுமாக வீடே இழவு விழுந்த வீடாகிப் போக... தகிப்பும் துன்பத் துடிப்புமாகத் திரிந்தான். கல்லெறிபட்ட மைனாவாக இவன் உயிர் துடிக்க ஓடித்திரியும் போது...

முத்துசாமியை நினைக்கக்கூட இயலவில்லை.

அதே நேரத்தில்...

பதினைந்து மைல் தள்ளிய அந்தக் கிராமத்தில்...

களைகட்டிப் பரபரத்துக் கொண்டிருந்த கல்யாண முகூர்த்த நேரத்தில்...

வாசலுக்கு வந்துவந்து பார்த்தான், முத்துசாமி. உயிரையே கண்ணில் வைத்து உற்று உற்றுப் பார்த்து அவன் கண்ணே பூத்துப்போயிற்று.

சிநேகிதனைக் காணாத முகவாட்டம். அவனது வாட்டத்தில் மனம் சோர்ந்த அவனது மனைவி.

"என்னங்க- இன்னும் வரலைல்லே, உங்க கூட்டாளி?"

"வரலே..."

"என்ன காரணமாயிருக்கும்?"

"தெரியலே..."

"புது வேட்டி புதுச்சீலை எடுக்கணும்னு நெனைச்சுட்டு, எடுக்காம வுட்டுட்டீகளே... அந்தக் கோபம்தான் காரணமாயிருக்குமோ...?"

"என்ன இழவோ தெரியலே. எம்புட்டுப் பழகி என்ன செய்ய? மனுசன் கொணத்த மனுசன் அறிய முடியலியே... எந்த நாய் வந்தாலும் வராட்டாலும் சரிதான்... நம்ம வீட்டுக் கல்யாணம் நல்லபடியா நடக்கட்டும். போய் ஆகுற வேலையைப் பார்ப்போம்."

அவன் குரலில் எல்லையற்ற விரக்தியும் வெறுப்பும் கொப்பளித்தது.

**ஆனந்த விகடன், 27-7-1997**

# ஞாபகம்

பகலின் மழலைப் பருவமாய் வைகறை. அஞ்சு மணிக்கு வழக்கம் போல் வேதக்கோவில் மைக்செட் முழக்கம்.

அந்தப் பாட்டுச் சத்தத்தில் பாண்டிக்கு முழிப்பு தட்டி விட்டது. கண்ணைத் திறக்க மனசில்லை. புரண்டு புரண்டு படுத்தான். அடித்துப் பிடித்துப் பரபரக்கிற மாதிரி புஞ்சை வேலை எதுவுமில்லை. மனசெல்லாம் நிரம்பி அமுக்கிக் கிடந்த சோம்பல். அசமந்தம்.

முற்றம் தெளிக்கிற மனைவி, புருஷனின் சோம்பலுக்காகத் திட்டுகிறாள். உறங்குகிற பிள்ளைகளையும் அதட்டுகிறாள். 'சனியன்... இழவு... நாசம்... மூதேவி' என்று மங்கலகரமான சொற்கள், அந்த வைகறை இருட்டை அடித்துத் துரத்திக் கொண்டிருந்தன.

நச்சரிப்பு தாளவில்லை. நாற வாசலில் குடியிருந்தாலும் நச்சு (அரிப்பு) வாசலில் குடியிருக்க முடியாது. இது பெரும் தொல்லை.

'எந்திருச்சிட வேண்டியதுதான். முகத்தைக் கழுவிட்டு, டீக்கடைப் பக்கம் போய் உக்காந்துட்டா... பொழுதைப் பேசியே கழிச்சிரலாம்.'

கண்ணைத் திறக்காமலேயே பெருமூச்சுவிட்ட பாண்டி. நெஞ்சுக் குள்ளிருந்து நெட்டித்தள்ளிக் கொண்டு வந்த கொட்டாவி.

வாசலுக்கு முகம் கழுவப்போனா... யார் முகம் தட்டுப்படுமோ? நல்ல சகுனம் அமையுமா? தீப்பெட்டி ஆபீஸுக்குப் போகிற சிறுமிகள்... தாவணிப் பெண்கள்... குங்குமப் பெண்கள்... சுமங்கலிகள் எதிர்ப்பட்டால் மனசுக்குத் திருப்தியாக இருக்கும்.

மனசுக்குள் வைகறைத் தென்றல் குளிர்ச்சியாய் வீசும். பொழுது முழுக்க அந்தச் சந்தோஷமும் இனிமைக் கரைசலுமாய் கரையும். நல்ல செய்திகளாக வந்து சேரும். நல்லதாகவே எல்லாம் அமையும். பாண்டிக்குள் அது பற்றிய யோசனைகள். அனுபவங்களை அசை போடுகிற நினைவுகள். அதில் கொஞ்ச நேரம் கழிய...

மனைவியின் நச்சரிப்பும் உச்சமாக-

பாண்டி நெட்டி முறித்துவிட்டு எழுந்தான். வேட்டியின் நழுவலை எட்டிப்பிடித்து... கட்டிக் கொண்டான். வாய்க்குள் நாற்ற ருசியான எச்சில்.

செம்பு நிறைய தண்ணீர் மோந்துகொண்டு... தலைவாசலுக்கு வருகிறபோது,

மனசுக்குள் தயக்கம். பூவும் பொட்டுமாய் முகம் தட்டுப்படுமா? நல்ல சகுனம் அமையுமா?

ஏதாச்சும் தாலியறுத்த அமங்கல மூஞ்சி தட்டுப் பட்டுருமா?

பாண்டிக்குள் எறும்பு கடித்த மாதிரி சுருக்கிட்டது.

வாசலில் நின்றான். படியில் கால் வைத்து எச்சிலைத் துப்பி விட்டு, செம்புத் தண்ணீரை வலது உள்ளங்கையில் சாய்த்துவிட்டு... குருட்டுக்காக்கா மாதிரி கள்ளப் பார்வையாகப் பார்த்தான். கழுத்தை 'இங்குட்டும்,

அங்கிட்டுமாக'த் திருப்பி, தூக்கச் சடவையும் மீறிய திகிலான எதிர்பார்ப்பு, மனசுக்குள்.

தீ பிடித்த மாதிரியிருந்தது. குப்பென்று பரவிய அனலின் வெக்கை. கண்ணில் தட்டுப்பட்ட முகம்-

அமங்கல முகம். தாலியறுத்தவள். வாழ்க்கை முழுவதும் நார்ப் பறிந்து... சீப்பட்டவள். துன்பத்தையே தின்று ஜீவிக்கிற துர் அதிர்ஷ்டக் கட்டை. வெறுவாய்க் கட்டை மூஞ்சி. ஆவுடைச்சி.

மிளகாயை அரைத்துக் கன்னத்தில் அப்பிய மாதிரி யிருந்தது பாண்டிக்கு. மனசெல்லாம் கிடந்து காந்தல் எடுத்தது. எரிச்சல் எரிச்சலாக வந்தது. சண்டாளமாய் வந்த ஆத்திரம்.

கடுப்பேறிய முகம். வெறுப்பின் மடிப்புகளோடு கோணலான முகம். அருவருப்பும் அசூயையுமாய் மனசுக் குள் குமட்டல்.

கூச்சமற்ற குரூரமாய்த் திட்டினான்.

"வெறுங்கழுதை. மூதேவி மூஞ்சியைக் காட்டிக் கிட்டு வீதியிலே வரணுமாக்கும், விடியக்காலையிலே? ச்சே. இவா... மொகரையிலே முழிச்சா... வெளங்குன மாதிரித்தான். இன்னிக்குப் பொழுது பூராவும் அமங்கலம் தான்."

மனசின் வெக்கை, நீர்க்கொப்பளிப்பின் சத்த அதிர்வில் முகம் காட்டியது. காறிக் காறித் துப்பினான்.

பாண்டிக்குள் திகில். 'இன்னிக்கு என்னென்ன கெட்ட செய்தி வருமோ? எவன் எவன் கூட எல்லாம் சண்டை சத்தம் வருமோ? என்னென்ன கூத்து நடக் குமோ?'

அவனுக்குள் நினைக்க நினைக்க பகீர் என்று வந்தது. அடிவயிற்றில் சொருகின மாதிரி ஒரு சூன்யம். பயப் படபடப்பு. பிடறி நரம்பெல்லாம் பாய்ந்தோடிய பயச்சிலிர்ப்பு.

பாண்டிக்கு நிஜமாகவே பயமும் வெறுப்புமாக இருந்தது. மாறி மாறி- ஆவுடைச்சி முகம். பொட்டில்லாத வெற்று முகம். மூக்குத்தியில்லாத வெறும் நாசி. கம்மல் இல்லாத வெறும் காது. கறுப்புக் கயிறு இல்லாத வெறும் கழுத்து. எல்லாமே... 'வெறும்.'

'ச்சேய்...' என்று வந்தது.

வீட்டுக்குள் போனான். துண்டைத்தூக்கித் தோளில் போட்டுக்கொண்டு விருட்டென்று வெளியேறினான். கதவை இழுத்து அடைத்த சத்தத்தில் அவனது கோபம். தரையே 'தக் தக், தக்' கென்று அதிர்கிற மாதிரி நடந்த நடையில் அவனது ஆத்திரம்.

"ச்சேய்... இன்னிக்கு விடிஞ்ச நேரமே சரியில்லே. என்னென்ன வினைகள் வந்து சேருமோ..." என்று பயத்தில் உலர்ந்த உதடுகளில் முணுமுணுத்துக் கொண்டான்.

டீக்கடை ஜே ஜே என்றிருந்தது. காலை நேரத்து சம்சாரிகள். நாலா விஷயங்களையும் நாலாவிதமாகப் பேசிக்கொண்டு, பொழுதைக் கரைக்கும் ஆட்கள்.

"ஒரு டீ போடப்பா" என்று சலிப்பான குரலில் சொல்லிவிட்டு- இவனும் ஓர் இடத்தில் உட்கார்ந்தான்.

பாண்டியும் வந்து பேச்சைப் பிடித்தால்... இள மதியம் வரைக்கும் பேசுவான். இருந்த இருப்பில் மூன்று டீ குடிப்பான். மாறி மாறி பீடியைப் பற்ற வைத்து தரை யில் தேய்ப்பான்.

அப்படிப் பேசிப் பொழுதைக் கழிக்கின்றவன் தான்ஃ இன்றைக்கு ‘கம்ம்’மென்றிருக்கிறான். ‘உர்ர்ர்’ ரென்று கடுவன் பூனை மாதிரி சிடுசிடுப்பான பார்வை பார்க்கிறான். வம்புக்கு இழுத்து, வாய் கொடுத்தவர் களுக்குக் கூட– பதில் சொல்ல மனசில்லாமல் மௌனச் சோகத்தில் புதைந்து போனான்.

பாண்டிக்குள்– வெறும் ஆவுடைச்சி. ‘பகீர், பகீர்’ என்று பற்றுகிற தீயாக அந்த முகம். அச்சமும் கிலியுமான நினைவுகள். அமங்கலமான கற்பனைகளாய் படை யெடுத்து, அவன் மனசில் பீதியை உண்டாக்கின.

பயத்தில் உறைந்து போய்க் கிடந்தான்.

டீக்கடை வழக்கம்போல கலகலத்துக் கொண் டிருந்தது. இவன் மட்டும் அந்நியமாய்– மௌனமாய்–

புஞ்சையில் ஒன்றும் வேலையில்லை இன்றைக்கு. இருந்தாலும் ‘சும்மாவாச்சும்’ போனான், சுற்றிப் பார்த்தான். கம்பம் பயிர் ஆள் உயரத்துக்கு வளர்ந்திருந் தது. கதிர் நிறைய தேன் நிறப் பூக்கள். இன்னும் ‘மணி’ பிடிக்கவில்லை. ரெண்டு தண்ணி பாயணும்.

கிணற்றை எட்டிப் பார்த்தான், கோடை காலத்தை கிணறு சொல்லியது. அடியில் கொஞ்சமாய் தண்ணீர்.

பார்வை ஓரிடத்திலும், மனசு வேறு இடத்திலும், நினைவுகள் தாறுமாறாக மற்றொரு இடத்திலுமாய் பாண்டியே முறுக்கேறிப் போய்க் கிடந்தான்.

ஆயாசத்தோடு வீடு வந்து சேர்ந்தான்.

மதியக்கஞ்சி குடித்தவுடன், ஊர் மடத்துத் திண்ணையில் துண்டை விரித்துப்படுத்து விட்டான். உண்ட மயக்கம். அசந்த உறக்கம். கோடை வெயிலுக்கும்,

ஆடிக் காற்றுக்கும், மடத்துச் சிமெண்டுக் குளிர்ச்சிக்கும் உடம்பு 'அப்படி' மயங்கிக்கொண்டு வந்தது.

நிம்மதியான நல்ல உறக்கம். குறட்டைச் சத்தம் ஏழு ஊரை உசுப்பியது.

கண்ணைத் திறந்து பார்த்போது -

வெயில் மஞ்சளாகியிருந்தது, தெருப்புழுதியைக் கிளப்பிக் கொண்டு, டக்கர்கள் டீசல் நாற்றமாய் ஓடின. எருமைகள்... செம்மறி ஆட்டு மந்தைகள்... விறகுப் பாரவண்டிகள்.

பாண்டி எழுந்தான். வெள்ளை பஸ் வந்து திரும்புகிற மைதானத்திற்கு வந்தான். இன்னும் கண்ணில் உறக்கச் சடவு. எச்சிலை 'புளிச், புளிச்' சென்று துப்பினான்.

அங்கே ஒரு கடை, நாளிதழ் கிடக்கும். எடுத்துப் படித்தான். பக்கம் பக்கமாய் கண்கள் பாய.... மனசு எங்கெங்கோ தாவ-

வீட்டில் கிடக்கிற மிளகாய் வற்றல் அம்பாரம். சித்திரையிலேயே துட்டாகியிருக்க வேண்டிய வற்றல். மூன்று குவிண்டால் தேறும். விலை இறங்குமுகமாகவே இருக்க- விற்க முடியாமல் போயிற்று.

ரத்தச் சிவப்பாக இருக்க வேண்டிய வற்றல்... கறுத்துப் போய்- வீடு முழுக்க கமறல் வாசம் நாசியைத் துளைக்க- துட்டாகாமல் 'சும்மாவே' கிடக்கிறது.

'மார்க்கட்' என்ற பகுதியில் நாளிதழ் இவன் கண்ணைச் சுண்டியிழுத்தது. ஆவல் பறப்பாய் பார்த்தான். மனசு கிடந்து துடித்தது. 'வற்றல் விலை ஏறுமுகம்' என்ற உபதலைப்பில் ஒரு செய்தி.

வற்றலைத் துட்டாக்கிவிடலாம். அடகு கிடக்கும் பொண்டாட்டி நகையைத் திருப்பிவிடலாம்.

அவனுக்குள் ஒளிச்சிமிட்டல்கள். மகிழ்ச்சி மின்னல்கள். ஆசை ஆசையாக அந்தப் பத்தியையே திரும்பத் திரும்பப் படித்தான்.

அவனுக்குள் குதூகல ஊற்று. மரத்துக் கிடந்த நரம்புகளெல்லாம் சட்டென்று ரத்தம் பாய்ந்த மாதிரி அவனுள் ஓர் உற்சாகப் பெருக்கு. ஒரு மகிழ்ச்சியான வெள்ளச் சூழல்

தெருவில் நடந்தான். நடையில் ஒரு துள்ளல். வீசுகிற கைகள், சற்று தாராளமாய் நீள்கின்றன. கைவீசி நடந்தான். மேல் துண்டைப் பிடித்து இழுக்கும் காற்றை ஒரு சந்தோஷ வசவு வைது கொண்டான். துண்டை தலையில் வட்டக்கட்டாகக் கட்டிக் கொண்டான்.

அவன் மனசுக்குள் ஒரு துடிப்பு. அறுந்து கொண்ட கன்றுக் குட்டியின் கும்மாளம். மயிலிறகின் உரசலால் வருகிற மகிழ்ச்சியான - புல்லரிப்பான கூச்சம் மனம் முழுக்க ததும்பியது.

வீடு வந்து சேர்ந்தான். பொழுது அடைந்துவிட்டது. இன்னும் இருட்டவில்லை. மேகத்து வெளிச்சம் மிச்சமாக இருந்தது.

வீட்டுத் திண்ணையில் -

வேறு யாரோ… ஓர் ஆள்.

யார் இது?–

யோசனையோடு நெருங்கிப் பார்த்தால்…

'அடடே! இந்த ஆளா' என்று மனசுக்குள் வியப்புணர்ச்சியின் வியாபிப்பு.

மூன்று மாதத்துக்கு முன்பு-

பாண்டியிடம் ஒரு ஜெர்சிப் பசுவை எண்ணாயிரம் என்று விலை பேசி- ஆயிரம் ரூபாய் பாக்கி வைத்துவிட்டுப் பிடித்துக் கொண்டு போனவன்.

அந்த ஆயிரம் வருகிற மாதிரி தெரியவில்லை.

பாண்டியும் ஆள் மூலமாக - தரகர் மூலமாக கடனை 'கேட்டுப்' பார்த்தான். வருகிற மாதிரியான நல்ல பதில் எதுவும் வந்து சேரவில்லை.

'சரி... போய்த் தொலையுது' என்று மனசளவில் வராத கடனாக நினைத்து, வரவு வைத்து தலை முழுகி விட்டான்.

'ஆயிர ரூபாய் வெலை கொறைச்சு வித்ததாக நெனைச்சுட்டுப் போவோமே' என்று மனசைத் தேற்றிக் கொண்டான். சமாதானமாக்கிக் கொண்டான்.

அந்த ஆள்தான் இப்போது...

இவனுக்காகக் காத்திருக்கிறான்.

"என்ன அண்ணாச்சி.. எப்ப வந்தீக?"

"வந்து அரை மணி நேரமாச்சு. ஓங்களுக்காகத்தான் காத்திருக்கேன்.."

"என்ன வெஷயம்?

"நல்ல வெஷயந்தான்"

"மாடு நல்லா பால் கறக்கா?"

"உங்க புண்ணியத்துலே ஒரு கொறையில்லே. நேரத்துக்கு ஆறு லிட்டருக்குக் கொறையாம.. கறக்குது."

"சந்தோஷம். நல்லாயிருந்தாச் சரி..."

"உங்களுக்குத் தரவேண்டிய ரூவா, குடுக்காமப் போட்டுட்டேன்லே. கைக்கும் மெய்க்கும் துட்டு அமை யலே. வரும்னு நெனச்ச பணமெல்லாம் வழுகிக்கிட்டுப் போயிருச்சு... இப்பத்தான் பணம் கை வந்து சேர்ந்துச்சு."

"ம்"

"இந்தாங்க ஒங்க ரூவா. தாமதமானதுக்கு மன்னிக் கணும்."

"பரவாலே பரவாலே... இதெல்லாம் சகஜம்தானே."

உபசாரம், சாப்பாடு எல்லாம் முடிந்து அந்த ஆள் புறப்பட ராத்திரி மணி எட்டாகி விட்டது.

வராத கடன் வந்த சந்தோஷத்தில் ததும்பித் தத்தளிக்கிற மனசோடு மனைவியைப் பார்த்தான். பெருமிதமும் பூரிப்புமாக- 'வற்றல் விலை ஏறுமுகம்' பற்றி விலாவாரியாகப் பேசிக் கொண்டிருந்தபோது-

'வெறும்' ஆவுடைச்சியின் முகம் மட்டும் ஞாபகத் துக்கே வரவில்லை பாண்டிக்கு.

**19-9-97 குங்குமம்.**

# பேய்கள்

'எப்படி வந்து சேர்ந்துச்சு இந்தக் காய்ச்சல்ச் சனியன்' என்று தெரியவே மாட்டேன் என்கிறது சன்னாசிக்கு. தடுமனும் பிடித்த மாதிரித் தெரியவில்லை. நெஞ்சுச் சளி இருக்கிற மாதிரியும் தெரியவில்லை.

அப்பவும்... காய்ச்சல் ரெண்டு நாளாய் எள்ளாய்ப் பொரிகிறது. திரேகத்திலிருந்து வெளியேறுகிற அனல் வெக்கையை அவராலேயே உணர முடிகிறது. நாசியில் வருகிற வெப்பக்காற்று. நாசித்துளைகளே காந்து கின்றன. கண்ணெல்லாம் கிடந்து எரிகிறது, 'திகு, திகு' வென்று.

உதடுகளெல்லாம் உலர்ந்து போய்... முகமே வெளுத்துப் போயிற்று. வாய்க்கசப்பு, முகக் கோணலில் அசூயைச் சுளிப்பாகத் தெரிகிறது.

சன்னாசிக்கு உட்கார்ந்திருக்கவும் மனசில்லை. 'படுத்தால், அமுக்கிரும். எந்திரிக்க விடாம, ஆளை ஒரேயடியாச் சாய்ச்சிரும்' என்ற பயம். எழ முடியா விட்டாலும் களைப்பும் அயற்சியுமாய் உடம்பு துவண் டாலும்... பல்லைக் கடித்துக்கொண்டு எழுந்தார். குறுக் கெலும்புகள் குத்திக் குடைந்தன. வெட்டுப்பட்ட மாதிரி தொடைகளில் வலி.

கூதல் தாங்கவில்லை. 'சிலீர், சிலீரெ'னப் புல்லரித்து நடுங்குகிற திரேகம். கனத்த சமுக்காளத்தை எடுத்து விரித்து 'நிறைய்ய' மூடினார்.

உள்ளிருந்து ஆத்ம பங்காளியின் சலிப்பும், கண்டிப்புமான குரல்.

"பேசாம படுத்துருக்க வேண்டியதுதானே? இந் நேரத்துலே எங்குட்டுப் போறீக?"

"படுத்தா... அமுக்குற பேய், இந்தச் சனியன். காலார நடந்து மடத்துப் பக்கம் போய்ட்டு வாரேன்."

"உப்பில்லாக் கஞ்சிதான் குடிச்சிருக்கீக. தலை சுத்தும், பார்த்துப் போய்ட்டு வாங்க."

"ம்... மாடுகளுக்கு கூளத்தைப் போடு. பருத்தி விதையை நனையப் போட்டு வை. சாயங்காலம் ஆட்டி தண்ணி காட்டணும்."

"ஆட்டும். கஷாயம் போட்டு வைக்கவா?"

"ம்- போட்டு வை."

அவ்வளவு பேசியதே சன்னாசிக்கு அயற்சியாக இருந்தது. போதும் என்ற சோர்வுடன் முற்றத்தில் கால் வைத்தார். தெருவுக்கு வந்தார்.

உச்சி மதியம். சுள்ளென்று அறைகிற கோடை வெயில். ஆனால், அந்த உஷ்ண வெயில், அவருக்குக் காலை வெயிலின் பனிக் குளிர்ச்சியாக... சுகப்பரவசமாக இருந்தது.

எதிர்ப்படுகிற ராசபாண்டி

"என்ன அண்ணாச்சி, உச்சி வெயில் சுட்டுப் பொசுக்குது. நீங்க சமுக்காளத்தை வைச்சு இப்படி மூடியிருக்கீக?"

"காச்சலு தம்பி..."

"பனியுமில்லே. மழையுமில்லே. வங்கோடை இப்பப் போய்- எப்படி... தடுமன்?"

"தடுமனுமில்லே... ஒண்ணுமில்லே... எப்படியோ பேய் மாதிரி வந்து, அமுக்கிக்கிடுச்சு..."

"ஊசி கீசி போட்டீகளா?"

"நேத்துப் போட்டேன். மாத்திரைகளையும் முழுங்குனேன். போட்ட நேரத்துக்கு காச்ச கொறையுது. பெறகு- வந்துருது."

"அப்ப..?"

"கண்டங்கத்திரி... இண்டு.... தூதுவளை போட்டு, கஷாயம் வேகப் போடச் சொல்லியிருக்கேன்.... போய்க் குடிக்கணும்"

"இங்கிலீஷ் மருந்துக்குப் பயப்படாத காச்சலு, கஷாயத்தைக் கண்டா.. கழிஞ்சிக்கிட்டு ஓடிரும்."

"பாப்பம்" என்று நகர்ந்த சன்னாசியின் காய்ந்த உதடுகள், மெல்ல விரிய முயன்றன. அவனது வார்த்தை களும்- அதைச் சொன்ன விதமும்... அவருக்குள் மலர வைத்த ஒரு மென்னகை.

"எப்படியோ... சனியன் விட்டுத் தொலைஞ்சா.. சரிதான்" என்று முணுமுணுத்துக் கொண்டார். பத்து

பி.கு.: "இண்டு" என்பது முள்முள்ளாக இருக்கும் ஒரு மூலிகை. சளிக் காய்ச்சலுக்கானது.

நாள் ரோமக்கட்டை கன்னத்தில், ஒரு வறண்ட பெரு மூச்சோடு அதைத் தடவினார். ஐம்பது வயசு, பாதி ரோமங்களை நரைக்க வைத்திருந்தது.

மடத்துத் திண்ணையில் வந்து உட்கார்ந்தார். அவருக்கே அந்நியமாக உறுத்தியது. மடத்தில் அவர் உட்கார்ந்ததேயில்லை. இதுநாள் வரை. மடத்தில் துண்டு விரித்துப் படுத்திருக்கும் 'சோம்பேறி'களை- 'கிழி, கிழி' என்று அப்படிக் கிழிப்பார்.

"துப்புக்கெட்ட நாய்க... ஒடம்பை வளைக்காம, சுருண்டு கெடக்குற எச்சிலை நாய்க."

உழைப்பு என்பது சன்னாசிக்கு சுவாசம். அதைச் செய்யாமல் ஒரு கணம்கூட இருக்க மாட்டார். காட்டில் இருந்தாலும் சரி... வீட்டில் இருந்தாலும் சரி... கை எதையாச்சும் நோண்டிக் கொண்டேயிருக்கும். சும்மாவே இருக்காது.

எல்லாச் சம்சாரிகளும் அப்படித்தான் என்றாலும்- சன்னாசி சற்றுக் கூடுதல். அவருக்குப் பிடித்த வாசமே வியர்வை வீச்சம்தான். குளித்து முழுகி அலைகிற மைனர் களை, ஒரு நாயைப் பார்க்கிற மாதிரி அருவருப்பாகப் பார்ப்பார்.

தண்ணீர் பாய்ச்சல், களைவெட்டு, உழவு, பாத்தி கட்டு, நடுவை எல்லா வேலைகளுமே அவர்தான். அவரது வியர்வைப் பிசுபிசுப்பு படாமல், அவர் தோட்டத்தில் ஓர் அங்குலம்கூட இருக்காது. இது போக...

வாரா வாரம் வியாழக்கிழமை சந்தைக்கு ராச பாளையம் வண்டி போடுவார். வண்டியில் ரெண்டு நீள தேக்கு வாரி கட்டியிருப்பார். பருத்தி மருகைகளோ,

மிளகாய் வத்தல் பாரமோ ஏதாச்சும் ஒரு லோடு, போகும் போது. வரும்போது... பல சரக்குக் கடைக்காரர்கள் போடுகிற கடைச்சரக்குகள், வெல்லமூடை, விதைமூடை, அரிசிமூடை.. புளிச்சிப்பம் என்று பாரம்.

மூடை சுமக்கப் பயப்படமாட்டார். குவிண்டால் மூடைகளைக்கூட முதுகில் ஏந்தி... அனாயசமாகத் தூக்கிப் போடுவார். திரேகமும் அப்படி. ஓங்குதாங்கான திரேகம். வைரம் பாய்ந்த சதைத் திரட்சிகள். தாட்டிய மான ஆள்.

'வேழக்கெழமை'ச் சந்தைக்கு வண்டிப் பாரத் துக்கப் போய் வந்தவர்தான். வெள்ளிக்கிழமை காலையில் வந்தார். கடை கடைக்குப் போய் மூடைகளை இறக்கிப் போட்டார். பாரக்கயிற்றைச் சுருட்டி வண்டியில் போட்டுக் கொண்டு வந்து நிறுத்தினார். மாட்டைக் கட்டினார். காலைக் கஞ்சியையே மதியத்தில்தான் குடித்தார். எங்கிருந்துதான் வந்ததோ... சனியன்-

சாயங்காலமே காய்ச்சல் வந்துவிட்டது. சும்மா சாதாரண காய்ச்சல் இல்லை. குளிரும் காய்ச்சலும், திரேகமே கிடந்து 'கிடு, கிடு' வென்று நடுங்கியது. மூன்று சமுக்காளத்தைப் போட்டு மூடிய பிறகும் நடுக்கம் குறையவில்லை.

அப்படி வந்த காய்ச்சல்தான்...

'அலுப்புனாலே காய்ச்ச வந்துருக்குமோ'ன்னு ஒரு நினைப்பு. அதற்கான கை வைத்தியம். ம்ஹூம்... ப(ரு)ப்பு வேகிற மாதிரித் தெரியவில்லை. அப்புறம்.. ஊசி மாத்திரை கள். அதிலும் கட்டுப்பட மாட்டேன் என்கிறது. 'என்ன தான் செய்ய?' என்ற சலிப்பு. சன்னாசி மனசில்.

திங்கட்கிழமையாயிற்று. சன்னாசிக்குள் வந்து போகிற புஞ்செய், உழ முடியாமல் கிடக்கிறது. குப்பை அடிக்க வேண்டும். கிடைபோட வேண்டும்.

"பாடுசோலிக மலைபோல குமிஞ்சிக்கிடக்கு. ஓடியாடிப் பாடுபட வேண்டிய நாள்லே, கொக்கு நோய் கண்ட கோழியா மொடங்கிக் கெடந்தா.. எப்படி? என்ன வேலை நடக்கும்? எப்படி வெள்ளாமை செய்றது?"

காய்ச்சல் வெறியில் சத்தமாகவே முணுமுணுத்துக் கொண்டார். மடத்துத் திண்ணையிலிருந்த ஒன்றிரண்டு பேரும் இவர் தலையைக் கண்டதும் பதறிப் போய் ஓடி விட்டனர். இவர் தான் 'மடத்துவாசிகள்' என்றால்– நாற வசவாக வைவாரே...

பெரிய மடம். விரிந்து நீண்ட திண்ணை. ஒற்றை யாளாக இவர் மட்டும். தனிமையும் தேவைதான். சுள் ளென்று சுடுகிற வெறுமை, நெஞ்சைத் தாக்கினாலும்– பேசத் சீவனில்லாத நேரம். தனிமைதான் தோது. யாரும் வாய் கொடுத்து, 'நைய்.... நைய்' என்று நச்சரித்தால்– இச்சிலாத்தியாக இருக்கும். உயிர் வாதை.

இப்படி ஒற்றையில் இருப்பதுவும் நல்லதுதான். கை விரலை மடக்கி எண்ணினார். 'வெள்ளி ஒண்ணு, சனி ரெண்டு, ஞாயிறு மூணு, திங்கள் நாலு... 'அடேயப்பா– நாலு நாளா காய்ச்ச அமுக்கிருச்சா...? நாலு நாளா புஞ்சையை மிதிக்காம இருக்கோமே... இப்படியிருந்தா புஞ்சைதான் வெளையுமா? வீடுதான் விளங்குமா?'

சன்னாசிக்குள் கிடக்கிற சம்சாரி மனசின் தவிப்பு. தகிக்கிற காய்ச்சல். கண்பட்டையெல்லாம் கோழி கொத்திப் பிடுங்குகிற புண்ணாக, ரணம். மொத்தத்

தலையும் வலி தாங்க முடியவில்லை. அதிலும் பிடறி வலி, உயிரைப் பிடுங்குகிறது.

கண்ணைத் திறக்க முடியவில்லை. மூடினால்.... இமைக்குள் கலர் கலராக மிதக்கிற ரேகைகள். குறுக்கெலும்பின் வலி, உட்கார விடமாட்டேன் என்கிறது.

'ம்ஹூம்- படுத்துரக் கூடாது-' மனசின் வைராக்யம்.

ரெண்டு கைகளையும் பின்பக்கமாக ஊன்றி, மெல்லச் சாய்ந்து... இடுப்பாற்றிப் பார்த்தார். கால்களை விறைப்பாக நீட்டிப் பின்னிக் கொண்டார். இந்த விறைப்பான பின்னலில் உளைச்சல் மட்டுப்படுகிற மாதிரியோர் பிரமை.

'அப்படியே... மல்லாக்கப்படு' என்று உடம்பின் ஒவ்வொரு அணுவும் அவரைப் போட்டு பாடாய்ப் படுத்தியது. அவர் பல்லைக் கடித்துச் சமாளித்தார். இடுப்பு கடுக்கிறது. தொடையெல்லாம் உளைச்சல். நாசிக்காந்தல். அனலாய்க் கொதிக்கிற திரேகம்.

மூடிய இமைகளை மேலும் அழுத்தினார். அது கொஞ்சம் சுகமாக இருந்தது.

...வியாழக்கிழமை ராத்திரி. மூடைகளை வரிசைப் படுத்தி, அடுக்க வேண்டிய முறைப்படி அடுக்கி... பாரக் கயிறைப் போட்டு இறுக்கி (சக வண்டிக்காரரின் உதவியுடன்), அரிக்கேன் லைட்டைப் பொருத்தி அடியில் கட்டி- மாட்டை வண்டியில் பூட்டுகிற போது... மணி பத்து. சந்தைக் கூட்டம். ரோட்டில் விலக இடமில்லை.

சமுசிகாபுரம் தாண்டி- சத்திரப்பட்டி வருவதற்குள் வண்டிச் சட்டத்தில் படுத்து ஒரு உறக்கம் போட்டு விட்டார்.

வழக்கப்படி மாடுகள் ஓரம் கட்டி நின்ற பிறகுதான்.. முழித்தார். முறுக்கு, முட்டைக்கோஸ் என்று ரெண்டைப் பொறுக்கி வாயில் போட்டு... டீயடித்து.. வெத்தலை பாக்கும் வாங்கிக் கொண்டு... வண்டியில் 'ம் ம்...' என்று ஏற..''

மாடுகள் சுழற்றிக் கொண்டு பாரவண்டியோடு நகர்ந்தன. சத்திரப்பட்டி கழித்து... அய்யனாபுரம் வந்த வுடன்.. வண்டி வலது பக்கமாய்த் திரும்பியது.

மெட்டல் ரோடு. எப்போதோ ஒரு காலத்தில் போட்டது. விழுந்த பள்ளங்களை, பிடுங்கிய ஓடைகளை சரள் அடித்து நிரப்பியிருந்தார்கள். நத்தம்பட்டி வழி, இது. குறுக்கு வழி.

கரிசல் குளம் சுற்றிப் போகிறதைவிட.... இது 'எட்டிப்பிடித்த' மாதிரி. நேர்ப்பாய்ச்சல். பழகிய வழி. பழகிய தடம். மாடுகள் தன் போக்கில் செல்ல... மென்று துப்பிய வெத்தலைச் சுவையோடு தலைசாய்த்தவர் தான்... சன்னாசி. நன்றாகத் தூங்கிவிட்டார். ஓடி ஓடி மூடை சுமந்த அலுப்பு. அசந்த உறக்கம்.

மாடுகளின் கழுத்துமணிச் சலங்கை... அதன் ஒரு சீரான குளம்புச் சத்தம்... வண்டிப் பைதாவின் 'க...டக், பு...டக்' கென்கிற தாளலயமான சத்தம் எல்லாம் சேர்ந்து அவருக்கு ரோராட்டு (தாலாட்டு) மாதிரியிருந்தது. தென்திசைக் காற்றின் மென் தழுவல் வேறு. சொல்லவா வேண்டும். சொக்கிப் போவதற்கு.

மாடுகளுக்கு அவரது குறட்டைச் சத்தம் வழித் துணை. தேய்பிறை நிலா, உடைந்த அப்பளமாய். மூளி வெளிச்சம் கண்ணை மூடிக்கொண்டு அழுது வழிகிறது. மங்கலான வெளிச்சம்.

உறங்கிய சன்னாசிக்குள் என்னவோ கனா.

வண்டி நத்தம்பட்டியைத் தாண்டியது. நத்தம் பட்டியின் மேல்புறத்தைத் தழுவி... ரோடு கிழக்காகத் திரும்புகிறது. ஊரின் தென்புறத்தில் வண்டி போய்க் கொண்டிருக்கிறது. ஊரைத் தாண்டி விட்டது. ஆனால் ஊர்க் காட்டைத் தாண்டவில்லை. நத்தம்பட்டிக்காரர் களின் காட்டில்தான்போகிறது. ஒரு சீராய்... தாளலயம் தப்பாமல்... எல்லாம் வழக்கப்படி... போய்க் கொண் டிருந்தபோதுதான் -

அந்த விபரீதம்

ஏதோ களேபரச்சத்தத்தில் பதறிப்போய் முழித் தார்.

வண்டி நின்று போயிருந்தது. மாடுகள் முன்னே எட்டு வைக்க முடியாமல்... பின்னேயும் போக முடியாமல் தறிய முறிய விழுந்தன. பின்னோக்கி நகர்வதற்குப் பகீரத யத்தனிப்பு. மாடுகளின் கழுத்து உள் ஒடுங்கி, பின்னே திரும்ப... மருண்டுபோய்... அரண்டு போய்க் கதறு கின்றன. அபஸ்வரமாய் குழம்பிப் போய் சலங்கை மணி. ஒரே இடத்தில் காலை மாற்றி மாற்றி வைப்பதால்... "தக்... தக்க்...தக்....தக்க்..." கென்கிற மாறுபட்ட சத்தமாய் குளம்புகள்.

'என்னாச்சு...?' என்று திகைத்துப் போனார். அனிச்சைச் செயலாய் மூக்கணாங் கயிற்றை அழுத்திப் பிடித்தார். அதற்குத் தேவையில்லை.

மாடுகள் எதைக் கண்டு மிரள்கின்றன. மருண்டோட முயல்கின்றன?

ஒன்றும் புரியவில்லை, உறக்கச்சடவில். கண்ணைக் கசக்கிவிட்டு- வாயிலிருந்த எச்சிலைத் துப்பிவிட்டு உற்றுப் பார்த்தார்.

பாதைக்குத் தெற்கே -

வெறும் சிதைத்தீ. 'சட்... சட்... சடார்' ரென்கிற தெறிப்புச் சத்தங்களோடு வெறுமனே எரிகிற தீ. கனன்று எரிகிற தீ. 'ஆமா... இது... நத்தம்பட்டிச் சுடுகாடுதான்' என்று நினைத்துக்கொள்கிறார்.

கழுத்தைத் தூக்கி... எம்பி... மாட்டுக்கு முன்னால் பார்க்கிறார். கன்னங்கரேலென்று ஓர் உருவம், பாதையின் நடுவில் - மாடுகளை மறித்துக் கொண்டு அந்தக் கரிக் கட்டையான தோற்றம்.

பார்த்த கணத்தில் -

இவரது நெஞ்சுக்குள் ஊசியைச் சொருகின மாதிரி சுருக்கிட்ட வலி. முதுகின் பாதிவரை பாய்ந்து பரவிய வலி.

குப்பென்று உடம்பெங்கும் வியர்வை. வியர்வைக் காடு. பயத்தில் நாக்கு ஒட்டிக் கொண்டது. 'தொப், தொப்' பென்று நனைந்து போன வியர்வைத் திரேகம்.

"ஏய்க்... ஏய்க்...ஏய்க்" என்று தொண்டை, மூளிச் சத்தமாய் உடைந்து கதறுகிறது. உயிரே 'போய் வந்த மாதிரியிருந்தது, ஒரு கணத்தில்.

அதற்குள் சுதாரித்துக் கொண்ட அறிவு; சாமம், ஏமம் என்று பாராமல் காடு கரைகளில் அலைந்து திரிந்த சம்சாரி அறிவு; அதற்கேயுரிய முரட்டுத் துணிச்சல்.

"அட.... இதுதானா?" என்று சுய பரிகாசமாய் வியந்து கொண்டார். "பேயா... பிசாசா? பிரேதம் தானே...?

வேகாத பிரேதம் தானே, இதுக்குப் போயா.. இம்புட்டுப் பயப்படுதே..?"

மாடுகளுக்குச் சொன்னாரா, தனக்கே சொல்லிக் கொண்டாரா? ரெண்டும்தான்.

மாடுகளின் முதுகில் தட்டுவதும், தடவுவதுமாய் அவரது உள்ளங்கைகள். ஆசுவாசப்படுத்தி தைர்யமூட்டு கிற ஸ்பரிசமொழி.

மாடுகளை மறித்துக் கொண்டு கிடப்பது, பாதி வெந்த பிரேதம். நரம்புக் கொடிகள் வெந்து நிணம் கசிகிற போது... மொத்தப் பிரேதமே விம்மி விறைக்கும். அப் போது, நெஞ்சுக்கூட்டை அமுக்குகிற கனத்த பாரம் இல்லாவிட்டால்... விறைக்கிற பிரேதம்... விடைத்து... துள்ளித் தெறித்துவிடும்.

அப்படித் தெறித்த கரிக்கட்டைதான்- எதிரில்.

'வெட்டியான்கள் ஒறங்கிட்டாங்களா...?' என்று முணு முணுத்த சன்னாசி- அவர் நெஞ்சுக்குள் இன்னும் 'திக், திக்'கென்கிற அதிர்வு, உள்மார்புச் சவ்வை யாரோ கசக்கி இறுக்குவதைப் போல ஒரு மூச்சுத் திணறல்.

அதையெல்லாம் உணர முடியாத மனநிலையில்... பயத்தை மறைக்கிற சவடால்த்தனச் சத்தத்தோடு... கத்தினார்.

"டேய்- டேய்- எவண்டா- விட்டியான்?"

ரெண்டு பேர் பதறியடித்துக் கொண்டு ஓடி வந்தனர். கவட்டைக் கம்பால் அடித்து, தூக்கிக் கொண்டு சென்றனர், பிரேதத்தை. சிதைத் தீக்குள் போட்டு அமுக் கினர்.

"சாமி... தெரியாம நடந்து போச்சு... சாமி யாரு கிட்டேயும் சொல்லிடாதீக... சாமி... புண்ணியமாப் போகுது சாமி..."

மருகி மருகி மன்னிப்புக் கோருகிற வெட்டியான்கள்.

"போங்கடா- போங்க" என்று பெருந்தன்மையாகச் சொல்லிவிட்டு- மாடுகளை அதட்டிப் பார்த்தார்.

மாடுகள் நகர்ந்தன. ஒரு பெரீ... ய்ய்ய கண்டத்திலிருந்து தப்பித்த மாதிரியிருந்தது, சன்னாசிக்கு. ஆனாலும், மனசுக்குள் தனக்குத் தானே தைரியம் சொல்லிக் கொள்கிறமாதிரி அடிக்கடி சொல்லிக் கொண்டார், சத்தமில்லாமல்.

'பேயா... பிசாசா? பிரேதம்தானே?'

அஞ்சுவதற்குரிய பேயல்ல... பிசாசல்ல... ஒரு பௌதீகப் பொருளான அரைப் பிரேதம்தானே என்கிற தொனியில்- அவரது மனக்குரல்.

மாடுகளின் கழுத்துமணிச் சலங்கை. அதன் சங்கீதம். ஒரு சீரான குளம்புச்சத்தம். வண்டிப் பைதாவின் 'கடக், புடக்' கென்கிற தாளலயம் தப்பாத சத்தம். தென்திசைக் காற்றின் மென்தழுவல்.

ஆனாலும், சொக்க முடியவில்லை. கண்ணைச் சொருக முடியவில்லை. அதற்குப் பிறகு உறக்கம் ஒட்டவேயில்லை.

வாய்க்கு வந்த பாட்டுகளையெல்லாம் சத்தம் போட்டுப் பாடிப்... பாடி 'அதை' மறக்க முயன்றார், சன்னாசி.

மறந்தும் விட்டார்- நிஜமாகவே-

மற்றவர்களிடமும் இதைப் பற்றிப் பேசிக் கொள்ளவுமில்லை.

மடத்தில் கண்ணை மூடிக்கொண்டு சாய்ந்த நிலையில் உட்கார்ந்திருந்த சன்னாசிக்கு, இடுப்பு தாங்கவில்லை. ரொம்பக் கடுத்தது. காய்ச்சல் ரொம்பக் கூடிவிட்டது. குளிர் தாங்க முடியாமல் 'வெட, வெட' வென்று நடுங்கினார். உதடுகள் வெடவெடத்தன. மேல் பல்லும் கீழ்ப் பல்லும் மோதிக் கொள்கிற சத்தம்.

அந்தக் காய்ச்சலின் உக்ரத்தில்... கண்மூடிய நிலையில்- பிரக்ஞை தவறிய கணத்தில்.. காய்ந்துலர்ந்த உதடுகள் முணுமுணுத்தன.

"பேயா- பிசாசா? பிரேதம்தானே?"

மடத்து சிமெண்டுத் திண்ணையில் மயங்கிக் கிடந்தவரை நாலைந்து பேர் கூடித் தூக்கிச் சென்றனர், வீட்டுக்கு.

அன்றைக்கு ராத்திரி பூராவும் -

கண்ணைத் திறக்காமல் கிடந்தார், சன்னாசி. எதை எதையோ புலம்பினார். போனது - வந்தது - நடந்தது - நினைத்தது என்று சகலத்தையும் குழம்பிக் குழம்பிப் புலம்பினார், காய்ச்சல் வெறியில்.

அந்தப் புலம்பலுக்கு நடுவில் -

சம்பந்தமற்ற தனித் தொனியில் -

"பேயா... பிசாசா? பிரேதம்தானே?" என்றும் தைர்யம் சொல்லிக் கொண்டார்.

அவரைச் சுற்றிலும் உறவுகளின் ஒப்பாரி சத்தம்.

மறுநாள்-

சன்னாசி செத்தே போனார்.

எப்படிச் செத்தார் என்று அவருக்கே தெரியாது. பிறருக்கும் தெரியாது. தெரியாவிட்டாலும்... கற்பனா சக்திமிக்க பிறர், எப்படிச் சும்மாயிருப்பது?

"சன்னாசின்னா.. லேசுப்பட்ட ஆளா? பத்தாளுக கூடி அடிச்சாலும் சாய்க்க முடியாதே... அம்புட்டுத் தாட்டியமான ஆளாச்சே.. நாலுநா காச்சலா அவரைக் கொல்ல முடியும்? அதெல்லாமில்லேப்பா... 'காத்தோ, கறுப்போ' அடிச்சிருக்கும்.."

"இருக்கும் இருக்கும்... தேரைவிட்டு எறக்கி, குழிக்குள்ளே கொண்டு போறப்ப ரெண்டு கண்ணாலே பாத்தேன்.. அவரு முதுகுலே.. அஞ்சுவெரலு அப்படியே பதிஞ்சிருஞ்துச்சு."

**ஓம்சக்தி தீபாவளி மலர் 1997**

# லங்கேஸ்வரர்கள்

மூச்சாமி மிளகாய்த் தோட்டத்திற்குள் நுழைந்தவுடன் முகத்தில் பனிக்காற்று மோதியது. போர்வை போர்த்திய உடலை நடுக்கியது. பொழியில் மெத்தென்று வளர்ந்திருந்த அருகம்புல் உள்ளங்காலை சிலீரென்று சுட்டது. பனிமழையில் நனைந்து ஈரமாயிருந்தது.

கீழடி வானத்தில் சோம்பலாய் உறங்கிக் கொண்டிருந்த மலட்டு மேகங்களை மீறிக் கொண்டு, உஷ்ணக் கிரகணம் வெளிப்படாதா என்று ஏங்குவதைப் போல மிளகாய்ச் செடிகள் தோற்றமளித்தன.

கிராமத்திலிருந்து வானொலி அலறிய மாநிலச் செய்தி முச்சாமியின் காதில் விழுந்தது. நடக்க இருக்கும் நாடு தழுவிய பொதுவேலை நிறுத்தத்தில் யார் யார் கலந்து கொள்ளப் போவதில்லை என்ற பட்டியலை மட்டும் வரிசைப்படுத்தி ஒப்பித்தது.

முச்சாமிக்கு இது ஒன்றும் மனதில் பெரிதாகப் பாதிக்கவில்லை. அவர் மனம் மிளகாய்ச் செடிகளின் பசுமையில் கரைந்து திருப்தியில் ததும்பிக் கொண்டிருந்தது.

அட, இந்த மிளகாய்ச் செடியைத்தான் பாரேன்... கொப்பும் கிளையுமாய்... மரகதப்பட்டாக இலைகள் மூடியிருக்க.. அதுக்குள்ள சரம் சரமா காய்காய்ச்சு பாரமா

இழுக்க... வெள்ளி மூக்குத்திகளை அள்ளிச் சிதறுன மாதிரி சின்னச் சின்னப் பூக்களும் சிரிப்பாய் சிரிக்கிற அழகும்-

தலைப் பிரசவத்துக்குக் காத்திருக்கிற நிறைமாசக் கர்ப்பிணி மாதிரி என்ன அழகா.. மினுமினுப்பா.. என்ன மாய் ஜொலிச்சி நிக்குது...

பார்க்கப் பார்க்க முச்சாமி மனசுக்குள் பரவச மானார். சந்தோஷ எண்ணங்கள் சங்கீதமாய் எழும்பி, பரவி, மனசெல்லாம் நிறைந்தன.

முறுசெல் (முறைசால்) வாய்க்காலில் நடந்தார். இருபுறமும் கடலாய் விரிந்திருந்த பசுமைச் செழிப்பை மாறி மாறிப் பார்த்தார். காய்களின் மினுமினுப்பையும், நடுநடுவே தீச்சுடராய்க் கிடந்த பழங்களையும் பார்த்தார்.

சூரியன் சந்தன வண்ணத்தில் தகதகத்தது. அள்ளிச் சொறிந்த வெளிச்சத்தில், கொடிய பனிகூட, இதமான சுகமாக மாறியது. மேற்குத் தொடர்ச்சி மலைகளில் சில இடங்களிலும் ஒளிர்ந்தும், சில இடங்களில் நிழலுமாகத் தோற்றமளித்தன.

சூரிய வெளிச்சத்தில் உலகமே ஜோதிமயமாக மாறி விட்டாற் போலிருந்தது, அவரது நெஞ்சுக்கு.

மிளகாய்ச் செடிகளின் செழித்த விளைச்சலின் அழகு, அவருள் உற்சாக ராகத்தை இசைத்தது.

'இந்த ரெண்டு குறுக்கத்துலே (2 ஏக்கர்) 18 குவுண்டால் வருமா' என்ற யோசித்தார்...

'ஊம்.. வரும்.. வரத்தான் செய்யும்' என்று மனசுக்குள் யூகத்தை முடித்துக் கொண்டார்.

இதே தோட்டத்துலே முன்னுக்கும் பின்னுக்கும் மாடு போய் வர... கீச்சு மூச்சுன்னு கமலை எறைச்ச ஐயா காலத்துலே... ஆறு பொதிக்கு மேலே வெள்ளாமை எடுத்ததுல்லே...

இப்போ... காலம் கொண்ணாந்த பம்ப்செட், உரம், உப்பு, பூச்சிமருந்து எல்லாம் சேர்ந்து... வெளைச்சலை எம்புட்டு அதிகப்படுத்துது-

முன்னைப் போலவா காலம் இப்ப இருக்கு? ஜனங்க பொழைப்புதான் தேஞ்சு போயிருக்கு-

முச்சாமி, புஞ்சையின் முக்கால் பகுதிக்கு மேல் சுற்றி வந்து விட்டார். வாய்க்கால்களிலும், செடிகளுக்கு நடுவிலும் தென்பட்ட பசலிகளைப் பொறுக்கி மடியில் வைத்துக் கொண்டார். படரக்கூடிய தன்மை கொண்ட அந்தப் பசலியைப் பொழிக்கு அப்பால் போட வேண்டும்-

நோயுற்றிருந்த ஒன்றிரண்டு செடிகளைப் புரட்டிப் பார்த்தார். உடைப்பு கண்டிருந்த பாத்திகளில் கையாலேயே மண்ணைச் சுரண்டி அடைத்தார்.

பனியின் சீதம் இப்போது முற்றிலும் போய்விட்டது. பசி இலேசாக அடி வயிற்றைக் கிள்ளியது. கிணற்றை எட்டிப் பார்த்தார்.

'ஹும்... அடுத்த வருஷம் மழைபெய்யாட்டாலும் சமாளிச்சுடலாம்...' என்று மதிப்பிடும்போது மனசுக்கு நிறைவாக இருந்தது.

போர்வையை எடுத்து பம்ப்செட் ரூமின் மேல் போட்டு விட்டு, ஓடைக்குள் இறங்கும் போதுகூட, செடிகளின் செழுமையைப் பெருமிதத்துடன் நினைத்துக் கொண்டார்.

காயும் பூவுமாக நிறைமாதச் கர்ப்பிணியாக அழகின் முழுமையோடு நிற்கிற காட்சிதான் குதூகலத்தின் ஊற்றாக விளங்கியது.

'ஆடி மாதத்திலேயே ரவ்வுன்னும் பகலுன்னும் பாராம கம்மா மண்ணு அடிச்சது' ஞாபகத்துக்கு வந்தது.

'ஆவணி மாதத்துலே நாற்றுப்பாவி, தண்ணி யிறைச்சது' நினைவில் மின்னியது. 'அதே மாதத்துலே திரும்பத் திரும்ப மூணு உழவு போட்டு, பூமியைப் புரட்டிப் பருவம் பண்ணுனது'-

ஓடி ஓடி குப்பையடிச்சு நிரத்துனது-

நிலா வெளிச்சத்துலே பாத்தி கட்டினது-

பணத்தைப் பணம்னு பாராம தண்ணியா இறைச்சு கூலியாளுகளுக்குக் குடுத்து நடுவை நட்டுனது, களை வெட்டுனது-

வகை வகையாப் பூச்சி மருந்து வாங்கி அடிச்சது-

உர உப்பு மூடைமூடையாய் வாங்கிக் கொட்டினது, தண்ணிவிட்டது-

எல்லா நினைவுகளும் வாய்க்கால் நீர் பாத்தியில் வந்து மோதுவதைப் போல வரிசையாக மனசுக்குள் மோதியது.

பட்ட பாடுகளில் மலர்ந்த இந்த மண்ணின் மலர்ச்சி அவருக்குப் பெருமிதமாக இருந்தது.

என்னோட ரத்தம், எங்க குடும்பத்தோட வேர்வை.. இங்க, இப்போ, இப்படி பூத்துக் குலுங்குது...

இந்தப் பூரிப்பில் முச்சாமியின் மனம் துள்ளியது.

'உழைக்கிறவன் மனசு வைச்சு காரியத்துலே இறங்கிட்டான்னா, இந்த மிளகாத் தோட்டம் மட்டுமா... இந்த ஒலகத்தையே அழகு மயமாக்கிட முடியாதா, என்ன!'

முச்சாமி வீட்டுக்கு வரும்போது வயிறு ரொம்பக் கிள்ளியது. தா(ழ்)வாரத்தில் மாடுகள் கூளத்தை குதூ கலமாக வளைத்துப் பிடித்துக் கொண்டிருந்தன. அவற் றின் அசைவுக்கேற்ப, கழுத்து மணிகள் ஒலித்து, அவற்றின் சந்தோஷத்தை வெளிப்படுத்தின.

எருமைமாடு படுத்துக் கிடந்தது. இவரைக் கண் டதும் மாடுகள் திரும்பிப் பார்த்தன. கண்கள் விரிந்து, செவிகள் விடைத்து நட்பைக் காட்டின.

வீட்டுக்குள் நுழைந்தார். மூத்த பெண் தோட்ட வேலைக்கு புறப்பட்டுக் கொண்டிருந்தாள். சாப்பிடுவதில் அவசரம் தெரிந்தது.

"என்ன... பொழுது உச்சிக்கு வந்துருச்சு. இந்நேர வரை எங்க போயிருந்தீக?"

"ஓடைக்கு..."

"அதுக்கு இம்புட்டு நேரமா?"

"அப்படியே புஞ்சைக்குள்ளே போயிட்டு வந் தேன்..."

"மாட்டுக்கு அகத்திக் கொழை ஒடிச்சுட்டு வரக் கூடாது?" வெறுங்கையை வீசிக்கிட்டு வந்தீராக்கும்?"

மௌனமாயிருந்தார். 'ஒடிச்சிருக்கலாம்' என்று மனசுக்குள் சொல்லிக் கொண்டார். அந்த யோசனை அந் நேரம் வரவில்லையே!

கஞ்சியில் கை அலைய, ஏறிட்டுப் பார்த்தாள் ராசம்மா. பார்வையில் சிறிது கண்டிப்பு முள்ளாக நின்றது.

"சொன்னது காதுலே நுழைஞ்சதா? ஊமைக் கோட்டான் மாதிரி உம்முன்னு இருந்தா எப்படி?"

வார்த்தை அவருக்குள் சுரீர் என்று சுட்டது. 'கழுதை, சவம்' என்று மனசுக்குள் ரோஷமாய் வார்த்தைகள் பீறிட்டன. உதட்டுக்குள்ளேயே நின்று கொண்ட ரோஷம் வழிமாறி கண்களில் கோபமாக அனல் வீசியது.

இதை உணர்ந்து கொண்ட ராசம்மா பார்வையைத் தாழ்த்திக் கொண்டாள். குரலில் கனிவைச் சேர்த்துக் கொண்டாள்.

"சரி சரி... பல்லைத் தேச்சு, கஞ்சியைக் குடிங்க..."

"பல்லெல்லாம் தேச்சாச்சு... கஞ்சியை ஊத்து" கோபத்தின் தூவானம் தெறித்தது.

அவசியமாய் சொல்ல வேண்டியவற்றை மறந்து போனது போல - சட்டென்று நினைவுக்கு வந்தவள் போல்..."ஆ...ங்" என்ற சப்தத்துடன் நிமிர்ந்தாள்.

"சொசைட்டி 'கிளாக்கர்' வந்துட்டுப் போறாரு. பெறகு வாரேன்னுட்டு போயிருக்கார்..."

எளிய பதத்தில் சொல்லப்பட்ட அந்தத் தகவல் அசுர வலிமையுடன் அவரைத் தாக்கியது. விக்கலுக்குத் தண்ணீர் குடிக்க அதுவும் விக்கிக் கொண்டால் நெஞ்சை யடைக்குமே... அந்த அடைப்பு உள்ளுக்குள் திக்கென்று நிகழ்ந்தது.

முகத்தில் ஒரு இருள் நிழலாகப் படர்ந்து விலகியது. கண்கள் தாழ்ந்து - தயங்கி - நோக்கின்றி நிமிர்ந்தன.

விவசாயக் கூட்டுறவு நாணய சங்கத்தின் செயலாளர் நினைவுக்கு வந்தார். கடந்த இரண்டு வருஷமாய் அலட்சியப்படுத்தப்பட்டு, புண்படுத்தப்பட்டு - குரோத வடிவமெடுத்துள்ள அவரது கருத்த முகமும், ஆபீஸர் தோரணை மின்னும் சிறிய கண்களும் மனசில் தெரிந்தது.

தன் பெயரில் ஒரு கடனும், ராசம்மா பெயரில் ஒரு கடனுமாக 14 ஆயிரம் கடன் இருக்கிறது. வட்டியும் குட்டியும் போட்டு அது என்ன உயரத்தில் ஏறி நிற்கிறதோ!

சாப்பிட்டு முடித்துவிட்டு, வாய்த் தண்ணீரைக் கொப்பளிக்க வாசலுக்கு வந்தபோது, பேரேடும் கையுமாக செயலாளர் வந்தார்.

"வாங்க செக்கரட்டரி அய்யா...." முச்சாமிக்கு ஏனோ மனது அச்சத்தில் படபடத்தது. பசியெடுப்பது போன்றதோர் பதைப்புணர்வு.

"ம்-ம்-கே. முத்துச்சாமிங்கிறது தானே உங்க பேரு?"

"ஆமாஞ் சார்..."

"உங்க அப்பா பேரு...?"

"ஐயோ பேரா...? கிட்டணத்தேவர்"

"கிருஷ்ணசாமித் தேவர்னு இதுலே போட்டிருக்கே..."

"அதான் சரி.... கூப்பிடுறது கிட்டணத் தேவர்தான்"

"சரி... உங்களுக்கு ரெண்டு லோன் இருக்கு. ரெண்டும் தவணை கடந்ததுதான். ரெண்டு வருஷமாய் ரசீதே போடலே. எப்படி.... இந்த வருஷ்மாச்சும் போடு றீங்களா?"

அவரது போலிப் பணிவு முச்சாமிக்குத் தன்னைக் கேலி செய்வது போலிருந்தது. தனது வீழ்ச்சியால் மகிழ்ச்சி காணுகிற எக்காளமும், குரூரமும் செக்ரட்டரியிடம் வெளிப்படுவது போலிருந்தது.

இயல்பாகப் பீறிட்ட ஆவேசத்தைச் சிரமப்பட்டு அடக்கிக் கொண்ட முச்சாமி, சிரிக்கக்கூட முயற்சித் தார். சிரிப்பின் போலித்தனம் அசட்டுத் தோற்றத்தைத் தந்தது.

“இந்த வருஷம் பச்சைப் போர்டெல்லாம் காட்ட முடியாது... சென்ட்ரல் கவர்மெண்ட் வசூல் பண்ணச் சொல்லி ஸ்டிரிக்ட்டா ஆர்டர் போட்டிருக்கு- ஸ்டேட் கவர்மெண்ட்டும் வாயைப் பொத்திக்கிட்டு காரியத் திலே இறங்கப் போகுது... ரசீது போடுறது உங்களுக்கு நல்லது..”

செக்ரட்டரியின் இகழ்ச்சியும் மிரட்டலும் முச்சாமி யின் மனசில் ஆத்திரத்தை மூட்டியது. வெளம் வெள மாய் வந்தது. அடக்கிக் கொண்டார்.

“போட்டுருவோம் சார்... ஆண்டவன் புண்ணியத் துலே வத்தலுக்கு நல்ல விலையிருக்கு. இந்த வருஷம் போட்ருவோம் சார்”

“சொன்னபடி செய்யணுமே...”

“செய்யாமெ என்ன சார்... வாங்குன கடன் அடைஞ் சாகணும். வழி நடந்தாகணும். எங்களுக்கு இல்லாத அக்கறையா!... உங்க புண்ணியத்துலே வத்தலுக்கு நல்ல விலையிருக்கு. இந்த வருஷம் போட்டுருவோம் சார்”

“என்னமோ நா சொல்றதை சொல்லிட்டேன். நல்லபடியா நடந்துக்குங்க. இல்லேன்னா... இந்த வருஷம்

போலீஸ் வந்துதான் வசூல் பண்ணும்” கடுமையான மிரட்டல் ஒன்றை கடைசிக் குண்டாகத் தூக்கிப் போட்டு விட்டு நடந்தார். அவரது மடிப்புக் கலையாத பேண்ட்டும், கட்டம் போட்ட ஸர்ட்டும், வலது கை ரிஸ்ட் வாட்சும்... பார்க்கப் பார்க்க முச்சாமிக்கு வெறுப்பாக இருந்தது.

ஹ¬ம்... உழைச்சுக் குடுத்த எங்களுக்கு அழுக்கு வேட்டி, உங்களுக்கு கோட்டு, சூட்டு... காலம் இப்படியேவா போயிடும்?

இனம் புரியாத குருட்டுக் கோபத்தில் சிந்தனை தடம் மாறித் தாறுமாறாக ஓடியது.

அரிவாள் கம்பு ஒரு கையிலும், மீசையில் ஒரு கையுமாக எதிரில் ஒரு கொடிய உருவம் நெருங்கி வருவதைப் போன்ற பிரமை! மனசைப் பிடித்து குலுக்குகிற பயம்.

“அட, அரசாங்கம் அம்புட்டு மோசமாகவா போயிடும்” அப்படியொரு நம்பிக்கை பயத்தைச் சற்றுத் தணியச் செய்தாலும் ஒரு அயற்சி கவ்வியது.

‘சம்சாரிகளைப் பிடிச்ச இந்தக் கடன்சள்ளை எப்பத்தான் தொலையப் போவுதோ... சாவோட சேர்ந்து தொலையுமா, அதுக்குப் பிறகு பிள்ளைகளை நசுக்குமோ-ஹ¬ம்- எம்புட்டுக் கடன்!’

கிணறு வெட்ட வாங்கிய எல்.எம். பேங்க் கடன் ஞாபகத்திற்கு வந்தது. சுருக்குப் பைக்குள் சுருண்டு, பாண்டியன் பேங்க் லாக்கருக்குள் கிடக்கிற மனைவியின் நகைகள் மனசில் தோன்றின.

கமிஷன் கடையில் வாங்கிய கடன் - பலசரக்குக் கடை லோன்... போதாக் குறைக்குக் கைமாத்தும்

கால்மாத்துமாய் வாங்கிய 'அல்லுச் சில்லு' கடன் வேறு!

இம்புட்டுக் கடன் எப்படித்தான் வந்து சேர்ந்துச்சு? வருஷத்துக்கு வருஷம் வெளச்சல் கூடித்தான் விளையுது. ஆனாலும் கடன் ஏறிக்கிட்டே போகுது. எப்படித்தான் இந்த மாயம் நடக்குதோ!

இம்புட்டுக் கடனையும் எப்படி கட்டி முடிக்கப் போறோம்?

நினைத்தாலே முச்சாமிக்கு மலைப்பாக இருந்தது. நடு வெள்ளத்தில் சிக்கிச் சோர்ந்து போனவனைப் போல மிரட்சியில் தவித்தார்.

நேற்றிரவு 'உழவர் உலகம்' முடிவதற்கு முன்பாக மார்க்கெட் நிலவரத்தில்... 'மிளகாய் வற்றல் சன்ன ரகம் ரூ. 1600 முதல் 1700 வரை"... என்று டிரான்சிஸ்டர் முழங்கிய அறிவிப்பு நினைவுக்கு வந்தது. மனசுக்குள் குளிர்ந்த நீர் ஓடியது. சற்றுத் தெம்பும் உற்சாகமும் ஏற்பட்டது.

வற்றல் களத்துக்கு வரும்போது விலை குறையத்தான் செய்யும். 1600 விக்கிற விலை குறைஞ்சாலும் 1200-க்கும் கீழேயா போயிடப் போகுது? அந்த விலை வித்தாலும் போதும்... எப்படியும் கடன் சுமையிலே பாதிக்கு மேலே இறக்கிடலாம்!

நினைத்துப் பார்க்கிறபோது மனம் இப்போது சுமை குறைந்து இலேசாகியிருந்தது.

கனவுகளும் எதிர்பார்ப்புகளும் நெஞ்சில் புதிது புதிதாகப் பூத்துச் சொரிய, திகிலை மென்று விழுங்கிக் கொண்டே நாட்கள் மெதுவாக நகர்ந்தன.

ஊருக்கு மேற்கேயுள்ள களத்தில் நின்றார். மாசி மாதத்துப் பனி மச்சியைத் துளைக்குமாமே! இப்போது உடலைத் துளைத்தது. ரத்தத்தைப் பூமியில் சதுரம் சதுரமாய்ப் பூசி வைத்திருப்பார்களா!

இதோ, மிளகாய்ப்பழம் காயப் போடப்பட்டிருக்கிறது. அவரவர்கள் பழத்தைத் தனித் தனியாக சதுரமிட்டு விரித்துள்ளனர்.

இளஞ்சூரியனின் மஞ்சள் வண்ண ஒளியை மிளகாய்ப் பழம் வாங்கி எதிரொளித்தபோது... ஈரம் உலராத புது ரத்தம் போல பிரகாசித்தது.

முச்சாமி நெஞ்சில் பொங்கி நிறையும் பூரிப்புடன் நின்றார்.

இந்த ரத்தப்பெருக்கை - அழகுச் செல்வத்தை - கமிஷன் கடைகளில் விற்பனைக்குக் கொண்டு போனால்- ஏதேதோ வியாபாரச் சூதாடிகள் எருமைகளாக மிதித்து துவைத்து... எங்களை அள்ளி விழுங்கிவிட்டுப் போய்விடுவார்களே...

'குவிண்டால் 1200 ரூபாய் விக்குதாம்... இந்த விலை நிலைச்சாக் கூட, பாதிக் கடனை அடைச்சுப் போடலாம்...'

'மூத்த பெண் பருவத்துக்கு வந்து இந்த மாசியோட ஏழு வருஷம் முடியப் போகுது... அவளுக்கும் ஒரு வழி பண்ணியாகணும்' என்று நினைத்தவுடன் நெஞ்சில் ஒரு கனம் ஏறித் திணறடித்தது.

வகை பண்ணுறதுன்னா- சுலபமா? மூக்குத்தி, கம்மல் செய்யணும், ஒன்று ரெண்டாச்சும் நகை வேணும்...

கல்யாணச் செலவுக்குப் பணம் வேணும்... இதெல்லாம் எப்போ செய்ய?

இந்த வருஷமே செஞ்சுட்டா... என்ன! சொஸைட்டிக் கடனையும் மற்ற கடனையும் 'அப்படியும் இப்படியுமா இழுவி, அடுத்த வருஷத்துக்கு நகட்டி விட்டுட்டா என்ன... ஹூ...!'

இந்த நினைவு சுகமாக இருந்தது. மூச்சு சீராகப் போய் வந்தது. வழி பண்ணி முடித்து விட்டாற்போன்ற சந்தோஷம் மனசை மெல்லிசாகத் தாலாட்டியது. கல்யாணக் கோலத்தில் மகளை மனசுக்குள் பார்க்கிற போது தந்தை உள்ளம் தத்தளித்தது.

அரிவாள்கம்பு ஒரு கையிலும், கிடா மீசையில் ஒரு கையுமாக ஒரு அசுர உருவம் வன்ம வெறியுடன் நெருங்கி வருவதைப் போன்ற பிரமை! "ம் ம்... உடம்புக்கு எப்படி இருக்கு" என்று கரகரத்த உறுமலில் மிரட்டுவதைப் போன்று மனதில் ஒரு தோற்றம்!

பயத்தில் இதயம் ஜில்லிட்டு நடுங்கியது.

மகள் எண்ணெய் வழியும் முகத்துடன் களைச் சுரண்டியுடன் புஞ்சைக்குப் போய்க் கொண்டு இருந்தாள்.

❑❑❑

**அ**ந்தச் சிறிய நகரமே தூக்கத்தில் ஆழ்ந்தது, அமைதி கொண்டிருந்த நேரத்தில் - அந்தக் கமிஷன் மண்டிகளில் மட்டும் திருவிழாக் கோலமும், ஆர்ப்பாட்டக் கூச்சலும் தெரிந்தது.

பட்டியில் ஆடுகள் அடைக்கப்பட்டிருப்பது போல், வரிசையற்ற கும்பலாக - நெருக்கமாக வற்றல் மூடைகள்

அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. விவசாயிகள் கூதலுக்குத் தலைத் துண்டைப் போர்த்திக்கொண்டு நோக்கின்றி அலைந்தனர். முச்சாமி கவலையுடனும், திகிலுடனும் திரிந்தார். திரும்பத் திரும்ப தனது வற்றல் மூடைகளைத் தொட்டுப் பார்த்துக் கொண்டார். வற்றலை அள்ளிப் பார்த்துக் கொண்டார்.

ஆஸ்பத்திரியில் கிடக்கும் பிள்ளையைப் பார்க்கிற தந்தையைப் போல 'என்னாகுமோ' என்கிற திகிலும் வருத்தமும், முச்சாமி மனசை அலைக்கழித்தன.

கமிஷன் மண்டியில் பரபரப்புடன் அலைந்தனர். வேலையாட்கள் ஓடிச் சாடினர். வியாபாரிகள் வெள்ளையும் சொள்ளையுமாக வட்டமாக உட்கார்ந்திருந்தனர்.

மூடையிலிருந்து ஒரு சௌகில் நாலு கை வற்றலை அள்ளிப்போட்டு கடைப்பையன்கள் அந்த 'வட்டத்'திற்குள் வைக்கின்றனர்.

ஒவ்வொரு 'வெள்ளை'யும் வற்றலை அள்ளி நசுக்கிப் பார்க்கிறது. மடித்துப் போட்ட துண்டுக்குள் கை கொடுக்கின்றனர்.

விரல்களுக்குள்ளே விலைகள் நிர்ணயமாகின்றன.

வற்றல்காரனின் பெயருடன் 'தீர்ந்த' விலை அறிவிக்கப்படுகிறது-

முச்சாமிக்கு திகில் நெஞ்சைப் பிடித்துக் குலுக்க.. விதம் விதமான நினைவுகள் உள்ளுக்குள் ஓடிச் சாட - பதைப்போடு காத்திருந்தார்.

வட்டமிட்டு உட்கார்ந்திருக்கும் அந்த வெள்ளை வேங்கைகளைப் பார்க்க அவருக்குப் பயமாக இருந்தது.

"இந்த வெள்ளை வேங்கைககிட்ட விவசாயிகளை ஒப்படைச்சுட்டு, சர்க்கார் என்ன மயிரா பிடுங்கப் போகுது? வசூலுக்கு மட்டும் அருவாக் கம்பும், மீசையுமா வந்து நிக்குறானுவ- சாவாடு செத்த பயக-"

இப்படி முச்சாமி முணு முணுத்துக் கொண்டிருந்த போதே... அவரைக் 'கடித்துக் குதறி முடிக்கப்பட்ட' விஷயம் பெருமையுடன் பிரகடனப்படுத்தப்பட்டது.

"-முத்துச்சாமி எழுநூத்தி இருபத்தெட்டு"

ஆம், அவரும் குடும்பமும் சேர்ந்து உழைத்த ஒரு வருஷப்பாட்டுக்குக் கிடைத்த மதிப்பு 728தான்!

முச்சாமிக்கு வெடித்து விடுவதைப்போல இதயம் விம்மியது. 'அடக் கொலைகாரப் பாவிகளா-' என்று கத்த வேண்டும் போல ஆவேசம் பொங்கி ஆர்ப்பரித்தது.

காயும் பூவுமா இருந்தபோது 1600 என்று வானொலி அறிவித்தது. பழமாகி கடைக்கு வரும்போது 728. இதென்ன கொடுமை? இந்தக் கூத்துதானே வருஷமெல்லாம் நடக்குது?

இதை வைச்சு எப்படிக் கடன் கட்டுறது? மானத் தோட வாழ்றது? இந்த இழவெடுத்த கூத்தாலேதானே வருஷா வருஷம் கடன் ஏறிக்கிட்டே போகுது. எவ்வளவு பாடுபட்டாலும், எவ்வளவு விளைஞ்சாலும்... கடன் கூடிக்கிட்டே போறது, இதனாலேதானே!

கடன் வசூலுக்குப் பட்டாளமா பாய்ஞ்சு வர்ற சர்க்கார். இதுக்கொரு நியாயமா விலை நிர்ணயம் பண்ணியிருந்தா- சம்சாரிக கடனைக் கட்டியிருக்கலாமே-

விலை நிர்ணயம் பண்ணாததாலே- எங்க விளைச்ச லெல்லாம் வியாபாரிக வீட்டுக்குள்ளே போய்ச் சேர்ந்து

டுச்சு. சம்சாரிக பட்ட கடனை ஞாயமாப் பார்த்தா... சர்க்கார் ஏவாரிககிட்டே வசூல் பண்ணனும். பண்ண முடியாட்டா-விட்டுட்டு விரலைச் சூப்பிட்டுப் போகணும்- ஏழை சம்சாரிகிட்டே வந்து மீசை முறுக் குறது, என்ன ஞாயம்?

முச்சாமியின் மனசில் நெருப்பாக நினைவுகள் ஜுவாலை விட்டெரிந்தன.

வெறும் தாட்டுகளைச் சுருட்டித் தலையில் வைத்துக் கொண்டு, பஸ் ஏறினார் முச்சாமி.

அரிவாள்கம்பும் மீசையுமாய் நெருங்கி வருகின்ற சர்க்கார்.... களை சுரண்டியுடன் அந்த வருஷமும் காட்டுக்குப் போகும் மகள்-

சுற்றி மொய்க்கும் யதார்த்தம் அவரைச் சுட்டது.

போரில் சகலத்தையும் இழந்து நிராயுதபாணியாக நின்ற லங்கை வேந்தன் கலங்கினானே... அதைவிடவும் கொடிய கலக்கம், கடன்பட்ட முச்சாமியின் நெஞ்சத்தைக் கலக்கியது.

கடன் அடைஞ்சாகணும், வழி நடந்தாகணும். எப்படியும் மகளுக்கு ஒரு நல்லது செய்யணும். அது எப்படி?

கேள்விகள் நெஞ்சைக் கவ்வி, பாரமாகித் தொங்கி இழுக்க, அந்த லங்கேஸ்வரன் குமுறலுடன் ஊருக்குள் நுழைந்தார்.

**- செம்மலர், 1982 மார்ச்.**

# என் கனா

சட்டென்று கண்ணை மூடிக்கொண்ட சாயங்கால வெயில். வெள்ளி நிற மேகமெல்லாம் கூடிக் குழைந்து கர்ப்ப வேதனையில் முகம் கறுத்தன. அதன் கோபத்தில் சூரியன் மறைந்து கொண்டது. தரையில் மேக நிழல்களாகக் கனத்த இருட்டு!

எனக்கு ஒரே புழுக்கம். நசநசப்பு. மூச்சே போக வில்லை. மயக்கப் படபடப்பில் மனத் திணறல். ஆனாலும், மனசின் ஒரு மூலையில் முகம் தெரியாத மகிழ்ச்சி! 'எனக்குப் பிரியமான மழைக் காதலன் வரப்போறானே_?'

ஒரு மாயத்தோழி பிசாசாக வந்து மோதினாள், "அடியே ஒன்னோட ஆள் ஆசை வெறியோட வாராண்டி" என்று கேலியும் கிண்டலுமாக உடம் பெல்லாம் கிச்சலம் காட்டினாள்! வெட்கத் திணறலோடு தவித்த என் திரேகத்துக்குள் அவளது விளையாட்டுச் சேட்டைகள்! என் பச்சையாடைக்குள் புகுந்து கொண்டு செய்த அலைக்கழிப்புகள். அவளது மூர்க்க விளை யாட்டில் எனது மஞ்சள் மேலாடைகள் நழுவி உதிர்ந்தன! பரவசம் தாளாமல் தோழியின் குதூகலத்தில் கூத் தாடினேன்!

"ச்சீ_போடி" என்ற என் போலிச் சிணுங்கல், 'ஊய்ய்-ஊய்ய்...' யென்று பேரோசைகளாகச் சீறியது.

'வந்துட்டாண்டி' என்ற கூச்சலோடு விட்டு விலகிப் போன தோழி. அவளது சட்டென்ற விலகலில் திகைத்துப் போன நான், 'எங்க போய்ட்டா இந்தச் சிறுக்கி?' என்ற திகைப்பில் ஸ்தம்பித்துப் போனேன். என்னைப் பிடித்துக் கொண்ட தனிமை- பரவசத் தனிமை- 'காதலன் முன்னால் தனித்து விடப்பட்டோமே' என்கிற இன்பத் திணறல்!

ஒரு சுகச் சூன்யத்தில் திகைத்துக் கிடந்த என் மேல் பொட்டென்று விழுந்த முதற் துளி. என் மழை நாயகனின் ஈர ஸ்பரிசம்! என்னுள் புல்லரிப்பு! என் நரம்பெல்லாம் பாய்ந்து, பரவிய இன்பச் சிலிர்ப்பு! என் திரேகமே குழைந்து... விறைத்து... தடுமாறித் தத்தளித்து...

என் காதலனின் மழைத்துளி முத்தங்கள். மோக வெறி நிறைந்த முத்தங்கள். கிறுகிறுத்துப் போய்க் கண்ணை மூடிய என் உடம்பெல்லாம் ஈரமாக்கும் மேக முத்தங்கள்.

என் காதலனின் மோகக் கொஞ்சல்கள்! காம மிழற்றல்கள்! காதுக்குள் இறங்கிய முழக்கங்கள்! குமுறிக் குமுறி முழக்கங்கள். மூடிய கண்ணுக்குள்ளும் என் நாயகனின் மின்னல் புன்னகைக் குறும்புகள், ஒளிக் கோபமாக ஊடுருவிப் பாய்ந்தன. எனக்குள்ளும் மோக வெறி!

வெக்கரித்த வெயிலிலும்... அழுக்கான தூசியிலும் திணறிப்போய் விரகதாபப்பட்டுக் கிடந்த என் நெருப்பு முழுவதையும் அணைத்து, சாம்பல் தண்ணீராகக் கரைத்துக் கழுவிய என் நாயகனின் மூர்க்கத் தழுவல்கள்! தரையெல்லாம் தண்ணீர்க்காடு. என் உடம்பெல்லாம் என் நாயகனின் நீர்க்கோடுகள்! மழையின் முரட்டுக் காதல்!

இன்பச் சுமையின் ஈரத் ததும்பலில் மூழ்கிக் களைத்த மோக மயக்கம். துவண்டு, கிறங்கிக் கிடந்த என்னைவிட்டு

விலகிய என் காதலன். கண்ணைத் திறக்க முடியாமல் பரவசத்தில் கிடந்த என்னுடன் இன்னும் சரசவிளையாட்டுப் பேச்சில் சிணுசிணுக்கிற சிறு தூறல்கள். பிரிய மனமில்லாமல் விட்டுவிட்டு ஓடிவந்து தழுவிக் கொள்கிற தூவானம்!

காதலன் போய்விட்டான். அவனது ஈரச் சுவடுகளை இழக்க விரும்பாமல் இன்னும் என் இலைகளில் ஏந்திக் கிடக்கிறேன். அவன் முத்து முத்தான முத்தங்கள். என் இலைகளில் ஈர ஒளித் துளிகளாக இன்னும் தொங்கி நிற்கின்றன! அசையக்கூட விரும்பாமல்... அப்படியே அடித்துப் போட்ட மாதிரி சலனமற்று மயங்கிக் கிடந்தேன்.

- வந்து நின்ற தென்றல் தோழியின் குறும்புச் சீண்டல். அந்தக் குளிர்ச் சீண்டலின் மென்மையான கேலியில் அதிர்ந்து போனேன்! அந்தத் திடுக்கிடலில் ஆடைகளைச் சுருட்டிக் கொண்டு பதறிப் பதைத்து எழ முயன்றபோது -

பொலபொலவென்று உதிர்ந்த என் நாயக ஈரச் சுமைகள்... ஒளித் துளிகள்!

என் காதலனின் வெறியாட்டத்தில் அரண்டு போய் வீடுகளுக்குள்ளும், தாழ்வாரங்களிலும் ஒதுங்கி நின்ற மனிதர்கள் வெளியே வந்தார்கள்!

பெய்த மழையில் திரண்டோடிய தெருத் தண்ணீர், ஊர்ப் புழுதியின் எல்லா சுவடுகளையும் கழுவித் துடைத்திருந்தது. ஈர நெகிழ்வில் குழைந்திருந்தது!

அழுக்கு உடைகளும் சவரம் செய்யாத முகமுமாகத் தலையில் துண்டைப்போட்டு மூடிக்கொண்டு வந்த

கிராமத்தாட்கள்! தெருவில் புதுத் தடங்கள். அவர்கள் பாதம் பதிய, விரலிடுக்குகளில் பிதுங்கி வழியும் சகதி!

உற்சாகமும் மகிழ்ச்சியுமாக அவர்கள் குரல், புதுமுகம் காட்டியது.

"கோடை மழைங்கற கொணத்தைக் காட்டிருச்சே. 'திடுதிப்' புனு வந்து பெரும் போடாப் போட்டுருச்சே..!"

"ஆமா சமயத்துக்குக் கை குடுத்த மழை. தவிச்ச வாய்க்குத் தண்ணி ஊத்துன புண்ணிய மழை!"

"கோடை வெள்ளாமை குதிபோட்டு வரும் இனிமே. கெணத்துக் காட்டுகள்லேயும் நீர்க்கண் தெறக்கும்"

"ஆமா... வறட்டிழுப்பா இழுத்த கெணறுகள்லே இனிமே தண்ணி 'கெத்து' ன்னு கெடக்கும்"

"அதைவிட முக்கியம்... வாயில்லாச் சீவனுக மாடு கன்னுகளுக்குக் குடிதண்ணிப் பஞ்சம் இருக்காதே.."

"ஆமா, நமக்கும்தான்..."

- அந்தக் குரல்களின் புதிய உணர்வு முகம். அவர்கள் மனதுகளில் மகிழ்ச்சித் ததும்பல். எனக்குச் சந்தோஷமாக இருந்தது! என்னைப் பார்க்க என் காதலன் வந்தால்... அந்த வருகை, எத்தனை உயிர்களுக்கு உற்சாகம்! பூமிக்கே புது மிருது! பயிர் பச்சைகளுக்குப் புதிய வெளிச்சம்!

எனக்குள் பெருமிதம்... பூரிப்பு..! அதிலும் மனுஷங்களுக்கு நன்மைன்னா... எனக்கு ரொம்பப் பெருமை. பிறந்த வீட்டுக்கு ஒரு நன்மை என்றால்... மகளுக்கு ரொம்பச் சந்தோஷமாகத்தானே இருக்கும்?

இன்னும் நாலைந்து பேர் என்னைக் கடந்தனர். அவர்களை எதிர்ப்பட்ட ஒருவன், வேகமும் பதைப்புமாக வந்தவன்-

"ஒங்களுக்கு வெஷயம் தெரியாதா?"

"என்ன வெஷயம்?"

"நம்ம சின்னக்கனி நாடாரு மண்டையைப் போட்டுட்டாரு!"

"அடப் பாவமே- அதுவும் அப்புடியா? பத்துநாளா சட்டடியா படுத்துக் கெடந்தாரு, போய்ச் சேர்ந்துட்டாரா..?"

"ஆமா-"

எனக்குள் அதிர்வு! என் நாடி நரம்பு எல்லாம் அதிர்ந்து நடுங்கியது. அந்த நடுக்கத்தில் என் பச்சையாடைகளில் மிச்சம் மீதியாக ஒட்டியிருந்த நீர்த்துளிகள், கண்ணீர்ச் சிதறலாய் சோக மௌனமாய் உதிர்ந்தன!

'அடப்பாதரவே- அவரு செத்துப் போய்ட்டாரா?' - எனக்குள் நம்ப முடியாமல் ஓடிய ஒரு நினைவு. நம்பித்தான் ஆகவேண்டும்.

அவர்தான என்னை இந்த இடத்தில் ஊன்றியவர். குழிதோண்டி- கரிசல் மண் போட்டு- சாணமும் போட்டு- என்னைநட்டார். என் பாதுகாப்புக்காக வட்டமாக முள் வேலி போட்டார். தினம் தினம் வந்து பார்ப்பார். பாசத்தோடு. என் வளர்ச்சியின் ஒவ்வொரு அணுவிலும் மகிழ்வார்! ஒரு ஆடு குட்டியை நெருங்கவிட மாட்டார்!

என்னைக் கண்ணுக்குள் வைத்து, பிள்ளை மாதிரிக் காப்பாற்றினார். அவர் போய்ட்டாரா...? செத்துப்

போய்ட்டாரா? இனி என்னைக் காப்பாத்தறது யாரு? எனக்கு யாரு நாதி? நா நாதியத்துப் போய்ட்டேனா...?

எனக்கு அழுகை அழுகையாக வந்தது. தலைவிரிக்கோலமாக நெஞ்சில் அடித்துக்கொண்டு கதறணும் போலிருந்தது. துக்கம் துக்கமாக வந்தது.

ரூல் தடியளவுதான் அப்ப என் கால், ஒரு குடையளவுக்குத்தான் என் உடம்பு- அப்ப நான் பூக்கக்கூட செய்யவில்லை.

அப்ப வந்து ஒருவன் என் பிஞ்சு விரல்களை ஒடிக்க நினைத்து... என்னை வளைத்தான்.

"அது எவண்டா... மரத்தை வளைக்குறது?" - அதட்டலாக சின்னக்கனி நாடார். அவர் முகமெல்லாம் கோபக் கடுப்பு."

"சும்மாதான்... பல்குச்சி ஒடிக்கணும்..."

"பல்குச்சியா? மடையா... இந்தச் சின்னக்கன்னுலே போயா ஒடிக்கிறது? பச்சைப்புள்ளே விரலை ஒடிக் கறதுக்கு ஒனக்கு எப்படிடா மனசு வர்றது?"

"என்ன, மாமா... பல்குச்சி ஒடிக்கிற சின்ன சிஷயத் துக்கு, பெரிய பெரிய வார்த்தைப் பேசுறீரு!"

"பெரிய வேப்ப மரத்துலே போய் ஒடி, யாரு வேண்டாம்னு சொன்னாக...? இதுலே ஒடிக்கக் கூடாது."

சின்னக்கனி நாடார் எனக்கு அடிக்கடி தண்ணீர் ஊற்றுவார். அவ்வப்போது வந்து என்னைத் தடவிப் பார்ப்பார்! என் சொறசொறப்பான திரேகத்தில் அவரது மென்மையான ஸ்பரிசம். எனக்கு ஒரே குதூகலம்...

சந்தோஷம்! தினம், தினம் வருட மாட்டாரா என்று ஏங்குகிற அளவுக்கு சுகமான தடவல்!

அவரது பார்வை பிடிக்கும்- பாசம் பிடிக்கும்- அன்பு பிடிக்கும்- அவரை மாதிரியான மனிதர்கள் எல்லோருமே எனக்குப் பிடிக்கும். மனிதர்கள்தான் என்னைப் பயன் படுத்தி, என் பிறவிப் பயனையே எனக்கு உணர்த்து கிறார்கள்!

அப்ப நான் கொஞ்சம் வளர்ந்து விட்டேன். மார்கழி, தை மாசம்எனக்குக் குதூகலமான மாசங்கள். நிறையக் கொழுந்துகள் கண் விழிக்கும். பங்குனி பிறந்துவிட்டால், கொத்துக் கொத்தாகப் பூப்பேன்; என் பூ வாசம் கம் மென்று பரவும். பூப்பூத்து விட்டால் போதும்- எங்கிருந்து தான் வருமோ- சிற்றெறும்பு, கூட்டம் கூட்டமாக வரும். அதுகளுக்கு என் பூ மேல் ஒரு மயக்கம்! என் காயைத் தான் யாரும் சீந்த மாட்டார்கள்! கசப்புக்கே என் காய் தான் உதாரணம். என் காயையும் சில சிறுமிகள் பறிப் பார்கள்! காயின் தோலை விரல் நகத்தால் கிழிப்பார்கள். உள்ளிருக்கும் திரவத்தில் ஊசி மாதிரியான குச்சியால் தொட்டுத் தொட்டு அவர்களது சின்னக் கைகளில் பெயர் எழுதுவார்கள்.

“அய்ய்... பச்சைக் குத்திக்கிட்டேன்” என்று சிறுமி களின் குதூகலம் என்னையும் பற்றிக்கொள்ளும்!

இப்ப எனக்கு இருபது வயதாயிற்று. என் பிர மாண்டமே எனது அழகு. எல்லோருமே அண்ணாந்து பார்ப்பார்கள்!

“பெரிய மரமாயிருக்கே... ஒரு கொழையோ குச்சியோ ஒடிக்கலே போலிருக்கு. படு லட்சணமா இருக்கே-”

"சின்னக்கனி நாடாரு கவனிப்பு. யாரும் கை வெச்சிர முடியாது."

"தூர் ரொம்ப அகலமாயிருக்கே. ஓர் ஆள் சேர்ந்து கட்டினாலும், கட்ட முடியாது போலிருக்கு."

"ஆமா... அவரு ஆள் முறுக்காயிருந்து வெவசாயம் பண்ணுன காலத்துலே வெச்ச மரம். இப்ப ஆள் தளர்ந் துட்டாரு. காடு - கரை, மாடு-கன்னு எல்லாத்தையும் மகன்கிட்டே ஒப்படைச்சிட்டு ஒய்ஞ்சி உக்காந்துட்டாரு. 'அந்தா, இந்தா'னு இருவதுவருஷம் இருக்கும்லே?"

"ஒரு கோணல்மாணல் இல்லாம, நேரா நிமிர்ந்து நிக்குது... தூரு வெட்டி ஆறப்போட்டு... பலகையா அறுக் குறதுக்குத் தோதான மரம்..."

என் அழகே எனக்கு எமன். பார்க்கிறவர்களுக் கெல்லாம் வாயில் எச்சில் ஊறியது. 'வெட்டணும், வெட்டிரணும்' என்று அலை பாய்ந்தார்கள். எனக்குள் நடுக்கம். மரண நிழலின் பயங்கரம்.

ரெண்டு தடவை எனக்கு விலை பேசிவிட்டார்கள். கோடாரி, கடப்பாரைகளோடு எமன், காலன், தூதன் களாக வந்துவிட்டார்கள். நல்லவேளை! சின்னக்கனி நாடார் வந்து என்னைச் சேர்த்துக் கட்டிக் கொண்டார்.

"என்னை வெட்டிட்டு இந்த மரத்தை வெட்டுங்க..." என்று வைராக்கியமாகப் போராடினார். அவர் மகனுக்கு, அய்யாமேல் எரிச்சல் என்றால்... மகா எரிச்சல்.

"பாடுபட்டுச் சம்பாரிச்ச சொத்துப் பத்தெல்லாம் வுட்டுக் குடுத்தீரே... இந்த வேப்பமரத்தை மட்டும் தர மாட்டேங்கிறீரே... ஏன்ய்யா...? என்னய்யா...?"

“ஏலேய் நாங்குடுத்த மாடு - கன்னு, காடு - கரை நல்லா இருக்கணும்னா... மழைத் தண்ணி வேணும்னா- மரம், கன்னுக இருக்கணும். மாரித்தாய்க்குப் பிடிச்ச மரம்டா இது... மாரித்தாய்ன்னா யாரு...? மழைதாண்டா-”

- கோபமும் கொதிப்புமாக மல்லுக்கு நின்று ஜெயித்துவிட்டார். நான் உயிர் தப்பிவிட்டேன்.

மைனாக்கள், கிளிகள், காகங்களுக்கு நான் தான் புகலிடம், நானே அதன் உலகம். நிழலும் உணவும் தருகிற உலகம். மைனாக்களின் பொய்ச்சண்டைகள் எனக்கு ரொம்பப் பிடிக்கும். நல்ல கூத்து மாதிரியுமிருக்கும். அதன் ‘கீச்சுமூச்சு’ என்ற கத்தல்... நல்ல சங்கீதம். கேட்கச் சுகமாக இருக்கும்.

என் காலடியில் குழந்தைகள் விளையாடும். கிழடு கட்டைகள் காலை நீட்டி உட்கார்ந்து, ஊர்ப் புறணிகள் பேசுவர், உழைத்துக் களைத்தவர்கள் துண்டை விரித்துக் குறட்டைப் போடுவார்கள்.

ஊரில் யாருக்காச்சும் ஜன்னிக் கோளாறு என்றால், என் பட்டைகளை உரித்துப் புகை போடுவார்கள். குடல் புண் என்றால்... என் கொழுந்துகளை அரைத்துக் குடிப் பார்கள். படையே நடுங்கும் பாம்பைக் கண்டு... அந்தப் பாம்பின் விஷம் என்னைக் கண்டால் பயந்தோடும். வைசூரி, அம்மைக்கட்டு, பல்வலி என்றால்... நான்தான் மருந்து.

இதில் எனக்கு ஏகப்பெருமை. மாரியாத்தா கோயில் திருவிழா என்றால்- எனக்கு ஏகப்பட்ட மரியாதை. மஞ்சள், குங்குமம் வைத்து என்னைக் கும்பிடுவார்கள். ஆடு மேய்ப்பவர்களுக்கு நான்தான் குலதெய்வம் மாதிரி.

என் காலடி நிழலில் பொங்கல் வைத்து எனக்கு மரியாதை செய்வார்கள்.

எல்லாம் போய்விடும். இனி எனக்கு நாதியில்லை. என்னைப் பிள்ளை மாதிரி அணைத்துக் கொண்டு... 'வெட்டாதீங்கடா' என்று மல்லுக்கட்ட சின்னக்கனி நாடார் இல்லை, என்னை உயிரென நினைத்துத் துடிக்கிற இதயம் நின்று போயிற்று. என்னைக் காப்பாற்ற ஆளில்லை.

என்னை விற்றுவிடுவார்கள். வெட்டி ஆறப் போட்டுப் பலகை பலகையா அறுத்துப் போட ஆள் தயார். எமன் ரெடி. நான் என்ன செய்ய...?

நான் இல்லாவிட்டால், என் நாயகன் வரமாட்டானே... மழையில்லாவிட்டால் மண் என்னாகும்...? மனிதன் என்னாவான்...? மரங்கள் இல்லாத உலகத்தில் சுத்தமான காற்றே இருக்காதே... காற்று இல்லாமல் மனிதன் எதைச் சுவாசிக்க...? எப்படி உயிர் வாழ...?

எனக்குள் பயம். வேரின் நுனிவரை அச்ச நடுக்கம். பயத்தின் படபடப்பில் என் பூக்களெல்லாம் உதிர்ந்தன. என் கண்ணீராக... துருத்தி நின்ற பிசின்.

என்னைச் சுற்றி வட்டமாகக் குழி தோண்டுகிறார்கள். முழங்கால் உயரத்துக்கும் மேலான ஆழக்குழி. குழிக்குள் நின்று... எனது கணுக்காலைப் பார்க்கிறார்கள். ஆணிவேர் முடிச்சு. அதுதான் என் உயிர் முடிச்சு.

அங்கே கோடாரியால் போடுகிறார்கள். டங்... டங்கென்று, அலறித் துடிக்கிற உயிர். என் ரத்தச் சதைகளாகத் தெரிகிற சந்தன நிறச் சிறாய். ஈர ரத்தம் மின்னுகிற சிறாய்த் துண்டுகள். உயிர்த்துளிகள். சதைச்

சிதறல்கள். கூடார வீடு போன்ற என் திரேகமே நடுங்கிக் குலுங்குகிறது. என் மனம் மரண வேதனையில் தவிக்கிறது. எனக்கான தவிப்பு மட்டுமல்ல.

எனக்காக அல்ல... என்னைப் படைத்த மனிதர்களுக்காக, பிறவிப் பயனை எனக்கே உணர்த்திய என் ஞானத் தந்தைகளுக்காக. நீரும் பாதுகாப்பும் தந்து உயிர் வளர்த்த ஆத்மாவுக்காக, ஆசையும் பாசமுமாக என்னைப் பார்த்து, தொட்டு வருடிய இதயங்களுக்காக.

"மழையில்லாம நீங்க தவிக்கக் கூடாதே... என்னைப் பெத்த அய்யாமார்களே... நல்ல காத்து இல்லாம நீங்க நாசமாயிடக் கூடாதே... மரங்களை வெட்டி நாசமாக்கிட்டா, மரங்களுக்கு நட்டமில்லே... உங்களுக்குத்தான் நட்டம். உங்க உசுருக்கு நட்டம், உடம்புக்கு நட்டம். எதிர்கால வாழ்வுக்கு நட்டம். அய்யாமாரே... என்னைக் காப்பாத்துங்க. என் மூலமா உங்களையும் காப்பாத்திக்கோங்க... அய்யாமாரே... அப்பன்மாரே... என்னைப் பெத்த தங்கப் பெட்டிகளா..."

என் அலறல் யாருக்கும் கேட்கவில்லையே.. ஐயோ.. என் ஆத்ம துடிப்பு. காலத்தின் குரல் என்று புரியவில்லையே... ஐயையோ... கோடாரி வெட்டு மாறி மாறி விழுதே..

ஒரு சங்கு ஊதுகிற சத்தம்... திடுக்கிட்டு விழித்துவிட்டேன். என்னைச் சுற்றி குழி வெட்டவில்லை. கோடாரி வெட்டும், விழவில்லை. 'சின்னக்கனி' நாடார் செத்துப் போனாரே.. என்ற பயத்தில் வந்த கெட்ட கனா...

சங்குச்சத்தம் தொடர்ந்து, இளவட்டங்களின் ஆரவாரக் கூச்சல். அலங்கரிக்கப்பட்ட தேரில் சின்னக்கனி

நாடாரை வைத்துத் தூக்கி வருகிறார்கள். அவரது கடைசிப் பயணம்.

என்னைக் கடக்கிற ஊர்வலம். நாடிக் கட்டோடு உட்கார்ந்திருக்கிற நாடார்– அழுது கதறுகிற என்னை ஏக்கமாகத் திரும்பிப் பார்ப்பதைப் போல் ஒரு பிரமை.

என்னால் தாங்க முடியவில்லை. என் கிளைக் கைகளும் இலையாடைகளும் வாடைக் காற்றுக்குக் கூத்தாட– மாரடித்துக் கதறினேன். "ஐயோ– என் ராசாவே– என் அய்யாவே–"

ஒரு வாரம் ஆயிற்று. மண்வெட்டி, கடப்பாரை, கோடாரியோடு நாலு பேர் வந்தனர் என்னிடம். என்னுள் படபடப்பு– பயப் படபடப்பு. என் கடைசி நேரம் நெருங்கி விட்டது. மரணதேவனின் சுவாச உஷ்ணம் என்னைத் தகித்தது.

என்னைக் காப்பாற்ற நாடார் இல்லை. கட்டிச் சேர்த்துப் போராட ஆத்மா இல்லாத சூன்யச் சூடு. வெறுமைப் பகீர்–

அப்போது–

மொட்டை அடித்த தலையோடு அவரது மகன். அண்ணாந்து என்னைச் சோகம் ததும்ப பார்த்தான் கண்ணில் ஒரு நீர்க் கசிவு. அய்யாவையே என்னில் பார்த்தானோ–

"மரத்தை வெட்ட வேணாம்–"

"எதுக்கு–?"

"காடுகரை குடுத்த எங்க அய்யாவை கடைசிக் காலத்துல நானும் புள்ளைகளும் நல்லபடியா நடத்தலே–

புத்தியைக் கடன் குடுத்துட்டேன் அவரைத் தான் கௌரவமா காப்பாத்த முடியலே... அவரு உயிரா நினைச்ச இந்த மரத்தையாச்சும் காப்பாத்தனும். ஏன்னா இது அவரோட உயிர். இது, அவரேதான்..."

"நாங்க குடுத்த அட்வான்ஸ்..."

"பத்து நாள்ல திருப்பித் தர்றேன்..."

எனக்குள் பரவசம். மழை நாயகன் வந்து தழுவிய மாதிரி இன்பப் பரவசம், சின்னக்கனி நாடார் சாகவில்லை, சாகமாட்டார்."

**20.04.98 ஆனந்தவிகடன்.**

# அண்டாது

**றெ**க்கையடிக்கிற சேவலின் உற்சாகச் சடசடப்பு, தொடர்ந்து எல்லாரையும் உசுப்பி விடுகிற 'கொக் கொரக்கோ' கூவல்.

கர்வமாய் கூவிய சேவலை யாரோ அதட்டுகிறார் கள். 'கேர்... கெக்கேர்... கேர்' என்று பயத்தில் வீறிடுகிறது. குதித்துத் தாவி ஓடுகிற சத்தச் சலனம்.

அந்தச் சேவலின் றெக்கையடிப்பிலேயே முழிப்பு தட்டிவிட்டது வடிவுக்கு. எந்திரிக்கவே மனதில்லை. பகலிலும் ரவ்விலும் பட்ட பாடுகள். காட்டிலும் வீட்டிலும் உழைத்த அலுப்பு. உறங்கிய களைப்பு.

அப்படியே நினைவின் மடியில் மனசு கண் சொருகி, துவண்ட உடம்பின் மயக்கத் திளைப்பில் கிறங்கிக் கிடக்கணும் போல ஏக்கமாய் இருக்கிறது. உறக்கச்சடவில் முகம் புதைத்து, சர்க்கரைப் பாகுக்குள் சிக்கிய எறும்பாக மயங்கிக் கிடக்க ஆசை.

சேவலின் ரெண்டாவது கூவல். கோழியின் ஆச்சர்யத் தொனியிலான கத்தல்கள், குஞ்சுகளின் மகிழ்ச்சியான 'கீச்... கீச்...' பால்கேன்கள் குலுங்கிக் கிலுகிலுக்க, விரைகிற டி.வி.எஸ். 50ன் இரைச்சல். எருமை மாடுகளின் 'தகக், தக், தக்...' இயங்கும் புற உலகத்தின் சத்த முகங்கள். லௌகீக வாழ்வின் சாட்டைக் குத்தல்.

நெட்டி முறித்தாள் வடிவு. திரேகத்தை நெளித்து, முறுக்கேற்றி... விறைப்பின் உச்சத்தில் நரம்புகளெல்லாம், 'விண்ண்'னென்று விடைக்க... அப்படியே சன்னஞ்சன்ன மாய்த் தளரவிட்டு... துவளச் செய்து... நனைந்த சணல் கயிறாகப் பாயில் கிடக்கிறபோது -

எந்திரிக்கணும். முத்தம் தெளிக்கணும்... காப்பி போடணும்.. பால் வாங்கணும் என்று நினைவில் உரசுகிற ஞாபகம்.

'முத்தம் தெளிக்கணும்' என்ற ஞாபகம் வந்தவுட னேயே முள் குத்தின மாதிரியிருந்தது உள்ளுக்குள். வெளியே போகணும். முகத்தைக் காட்டணும். வெற்று நெற்றியை.. மிஞ்சிகள் இல்லாத வெறும் கால் விரல்களை.. வளையல் சத்தம் இல்லாத மூளிக் கைகளை வெளியே காட்டணும்.

'முண்டச்சி மூஞ்சியிலா முழிக்கணும்' என்று வெறுப்பும் எரிச்சலுமாய்ச் சீறுகிற எவனோ ஒரு காட்டான்.

நினைத்தாலே அருவருப்பாக இருக்கிறது, வடிவுக்கு. அந்தக் கணத்து அவமான உணர்வுகள் ஊசி ஊசியாகக் குத்திச் சொருகின ரண அனுபவங்கள்.

பறிகொடுத்த புருஷனின் இழப்பு. அதன் கொடூர மும், கனமும் சம்மட்டியடியாக நெஞ்சுக்குள் விழ... கண்ணோரங்களில் மனத்துளி. வேதனைக் கசிவு, பாயை விட்டு விலகிப் படுத்துக்கிடக்கிற மகனைக் கையால் துழாவினாள். அவனது உலர்ந்த முதுகு. புழுதியின் சொர சொரப்பு. இவளது ஒரே பிடிமானம்.

-நாலைந்து நாட்களுக்கு முன்பு.

நடுத்தெருவில் மைக் செட் அலறிக் கொண்டிருந்தது. மூலை மூலைக்குக் கட்டப்பட்டிருந்த பெரிய பெரிய குழாய்கள். எல்லார் செவிகளும் அதிர்ந்து கொண்டிருந்தன. பேய்க்கூச்சல், காட்டுக்கத்தல்.

இப்படி மைக்செட் பாடினாலேயே சிறுவர், சிறுமிகளுக்கும் ஒரே கொண்டாட்டம் குதூகலம். ஆவலும் ஆசையுமான எதிர்பார்ப்பு.

பந்திச் சாப்பாடு சாப்பிடலாம். இலைபோட்டுச் சோறு வைப்பார்கள். ரெண்டு, மூன்று கூட்டுகள்... பொரியல்- சாம்பார்... ரசம்- அப்பளம் எல்லாவற்றையும் விட இனிப்பான விஷயம், பாயாசம் வேறு ஊற்றுவார்கள். வழித்து வழித்து சாப்பிடலாம். தித்திப்பாக இருக்கும்.

கிராமத்துப் பிள்ளைகளுக்கு அனுதினமும் குழம்புக்குக் கூட வழியிருக்காது. விறைப்பான ரேஷன் அரிசிப் பருக்கைகளைத்தான் 'ருசி பாராமல்' அள்ளி முழுங்க வேண்டியிருக்கும். இதுதான் கதி.

இந்தப் பிள்ளைகளுக்குப் பந்திச்சோறு என்றால்- தனிக் கொண்டாட்டம்தான்... குஷிதான்... அரிதான அதிசயம்தான்.

மைக்செட் பாட ஆரம்பித்துவிட்டாலே, பிள்ளைகளின் தொண்டைக்குள்ளும் மைக்செட் பாடும். உல்லாசப் பாட்டு. அம்மாவை நச்சரிக்கத் தொடங்குவார்கள்.

"எம்மா- எம்மா- நாம 'அந்த' வீட்டுக்குப் போறமா?" என்று ஆசை ஆசையாகக் கொஞ்சுவார்கள்.

வடிவையும் ராமசாமி நச்சரித்தான்.

"எம்மா- எம்மா-"

"என்னடா?"

"ரேடியோ பாடுற வீட்டுக்கு நாம போவமா?"

"எதுக்குடா?"

"சாப்புடத்தான்."

"இந்த வீட்லே பந்தி இல்லேப்பா."

"ஏம்மா?"

"நிச்சயதார்த்தம் மட்டும்தான் பண்ணப் போறாக. கல்யாணத்தன்னைக்குத்தான் பந்தி வைப்பாக."

அம்மாவை நம்பாமல் பார்த்தான் அண்ணாந்து. 'ரேடியோ படிச்சா... சோறு இல்லாமலா?' என்று சந்தேகமாக யோசிக்கிற ராமசாமி, 'அம்மா பொய் சொல்றாளோ' என்ற நமைச்சல். அம்மாவின் கண்ணையே 'துருதுரு'வென துருவித் துருவிப் பார்த்தான்.

அப்போது -

நாலு பெண்கள், நல்ல பூப்போட்ட கலர்ச்சேலை உடுத்தி... சீவிச் சிங்காரித்து... பொட்டு வைத்து... 'பளிச்' சென்று வந்தார்கள். வீடு வீடாகச் சொல்லி அழைக் கிறார்கள். நிச்சயதார்த்த விழாவுக்கு வரும்படியான ஊர் அழைப்பு.

பக்கத்து வீட்டில் 'தப தப'வென்று நுழைகின்றனர். வீட்டுக்காரர்கள் தடபுடலாக உபசரிக்கின்றனர்.

"எத்தே... எத்தே..."

"யாரடியம்மா? அடடே... வாங்க வாங்க..."

"எங்க வீட்லே தங்கச்சிக்கு நிச்சயம் பண்ணப் போறோம். வந்துருங்க."

"எந்நேரத்துக்கு?"

"சாயங்காலம் பொழுதடைஞ்சு 'கரு, கரு'ன்னு மயங்குற நேரத்துக்கு, ஏழு மணிக்கு."

"அப்படியா? நல்ல காரியம். காலாகாலத்துலே நடக்கட்டும். நா வந்துருதேன்_"

"வந்துருங்க, அத்தே."

"வராம இருப்பேனா? நம்ம புள்ளைக்கு மாலை பூத்து வருதுன்னா... எம்புட்டுச் சந்தோஷம். நா வராம இருப்பேனா_? வாரேன்_"

அங்கே சிரிப்பும் மகிழ்ச்சியுமாக பேச்சு கல கலத்துக் கொண்டிருந்தது. வாசலில் நிற்கிற வடிவு. அவளது கால்மாட்டில் நிற்கிற ராமசாமி_

"ஏம்மா_"

"என்னய்யா கண்ணு?"

"அந்த ஆச்சியை கூப்புடுதாகளே... நம்மளையும் கூப்புடுவாகளா?"

ராமசாமி குரலில் ஒரு துள்ளல். கூப்பிடணும் என்று ஆசைப்படுகிற மனசின் பரபரப்பு. ஆவல் பறப்பான அவனது ரெக்கையடிப்பு. வடிவுக்கு வாயடைத்துப் போயிற்று. என்ன சொல்ல? எப்படிச் சொல்ல?

நெஞ்சடைத்துக் கொண்டு வந்தது.

அந்த வீட்டைவிட்டு வெளியேறி வருகிற அந்தப் பெண்கள். இந்த வீட்டை நெருங்குகின்றனர். வீட்டு முற்றத்தில் நடக்கின்றனர்.

ஆவல் வெளிச்சம் கண்ணில் மின்ன அவர்களையே பார்க்கிற ராமசாமி. அம்மா சேலையைப் பற்றியிருந்த

அவனது உள்ளங்கையின் மெல்லிய நடுக்கத்தில் உணர முடிகிற அவனது மனசு. முற்றத்தில் நடக்கிற அந்தப் பெண்கள். நிமிர்ந்து கழுத்தைத் திருப்பி இவளைப் பார்க்கின்றனர். ஏறிட்டுப் பார்க்கிற பார்வையில் தெரிகிற அம்மா, தர்மசங்கடமான புன்முறுவலோடு கடந்து போகிற அவர்கள், அசட்டு முறுவல்.

மங்களகரமான வீட்டுக்கு அமங்கலியை எப்படி அழைப்பார்கள்?

'வா' என்று அழைக்கவில்லை. அடிமனசில் சப் பென்று அறைகிற ஏமாற்றம். கடந்துபோகிற அவர்கள் எதையோ பறித்துக் கொண்டு போகிற மாதிரியோர் வேதனை.

இந்த நிராகரிப்பு. புறக்கணிப்பு. கல்லெறிபட்ட குருவியாகத் துடிக்கிற மனசு. வடிவுக்குள் தவிக்கிற தவிப்பு. அவமானப்படுத்தப்பட்ட அவஸ்தை. இழிவுப்படுத்தப் பட்ட கொதி உணர்வு.

'ஒழுக்கரிசி சீவன், அந்த ஆளு. அவரு சாகப்போய் எம்புட்டு மரியாதை போயிருச்சு? பொட்டு, பூ, போச்சு, ஆதரவு, அரவணைப்பு போச்சு. மனுச மக்க மத்தி யிலே நிக்குற உரிமையுமில்லே. போயிருச்சு? 'நல்லது' எதுலேயும் நாயகமா இருக்க முடியலியே... அட, ஓரத் துல ஒதுக்கத்துலே கூட ஒண்டி நிக்க வழியில்லாமப் போச்சே...'

அவலப்புலம்பலாக அழுது நீள்கிற சோக நினைவு கள்.

"எம்மா..."

"ம்"

“ஏம்மா, அந்த ஆச்சியைக் கூப்புட்டாக, நம்மளைக் கூப்புடலை?”

“அய்யா செத்துட்டாருல்லே...? அதான்”

“நாம சாகலைல்லே? நம்மளை ஏன் கூப்புடலை?”

அந்தப் பிஞ்சு மனசின் சோகக் கேள்வி. இவளுக்குள் தீக்கோலைச் சொருகி உருவிய மாதிரியிருந்தது.

சின்னஞ்சிறுசின் வெள்ளந்தியான அந்தக் கேள்விக்கு என்ன பதில் சொல்ல? எப்படிச் சொல்ல?

அவளுக்குள் குலை கொதித்தது. பொங்கித் திமிறிக் கொண்டு வந்த அழுகை, ‘கோ’வென்று தலையில் அடித்துக்கொண்டு கதற வேண்டும் போலிருந்தது.

அடக்கிக் கொண்டாள்.

‘சின்னப்பய, பதறிப் போவான். அழுகையை அடக்க உஷ்ணக் கண்ணீரை உள்ளேயே நிறுத்த - ரொம்பச் சிரமப்பட்டாள் வடிவு..

... சொரசொரப்பான மகனின் முகம். புழுதியில் விளையாடி விட்டு அப்படியே படுத்திருக்கிற ராமசாமி. “சின்னப் பயலாக இருந்தாலும் அறிவான பய. அம்புட்டு வெவரமாகேக்கானே... ‘நாம சாக லேல்லே’ன்னு. எங்க அய்யாவைப் போல கூரான பயல்” என்று சோகத்தில் நனைந்த ஒரு பெருமிதத்தில் சொல்லிக் கொண்டாள்.

திறந்த கண்ணுக்குள் நிறைந்திருந்த இருட்டு. அடுப்போரத்து கையகல ஜன்னலில் தெருவிளக்கின் வெளிச்சத்துண்டு.

இருட்டு விலகாத விடியல். நெட்டி முறித்து, உறக்கச் சடவைக் கழுவிக் கொண்டு இயங்கத் தொடங்கிவிட்ட கிராமத்துச்சலனம். சத்த சலனம்.

கூத்துவன் பண்ணிய அலங்கோலத்தையும், கோண எழுத்தையும் எண்ணிய மனவிசாரம். அதிலேயே நனைந்து துவண்டு கிடந்த வடிவு.

"வடிவு.. ஏய்.. வடிவு"

கதவைத் தட்டுகிற சத்தம். ஒரு பெண்ணின் குரல்.

"என்னக்கா?"

"இன்னும் எந்திக்கலியா?"

"ம்ள்ச்சூ! எந்திரிக்கணும்"

சோர்வும் சலிப்புமாய் சரிந்த குரல்.

"என்ன வடிவு, ஆறுமணி வேலைக்குப் போவ னும்லே? வரல்லியா? புஞ்சைக்கார நாயக்கரு நாற வசவு வையப்போறாரு"

நிஜமாகவே அதிர்ந்து போனாள். சட்டென்று மூளையில் தாக்கிய நினைவு.

"ஐயய்யோ! அந்த ஆவுகமே (ஞாபகம்) இல்லேக்கா. இந்தா வந்துட்டேன்க்கா"

பதைத்துப் போய் 'தடபுட'வென்று எழுந்தாள், வடிவு.

நாயக்கர் புஞ்சையில் பருத்தி விதை ஊன்றப்போக வேண்டும். காலைக் கரண்டு. ஆறு மணி முதல் மதியம் வரை 'த்ரீ' பேஸ் மோட்டார் ஓடும். வாய்க்கால் நிறைய ஊர்ந்து வருகிற தண்ணீர். பாத்தி பாத்தியாகப் பாயப்

பாய... ஈரச்சகதிக்குள் விதை ஊன்றணும். சாணத்தில் புரட்டி, உலர வைத்த பருத்தி விதை.

விதை ஊன்றுகிற முதல் நாளிலேயேதாமதமாய்ப் போனால்- அம்புட்டுத்தான். ஆகாயத்துக்கும் பூமிக்குமாக 'தங்கு, புங்கெ'ன்னு குதிப்பார் நாயக்கர்.

சும்மாவே எல்லாரையும் வைவார். பேர் சொல்லியே கூப்பிடமாட்டார். ஏதாச்சும் வசவுதான். அவருக்கு இவர்கள் வைத்திருக்கும் பட்டப் பெயரே 'நாறவசவு நாயக்கர்'தான்.

"நல்ல நாள் பார்த்து, விதை ஊனுற மொத நாளு. இன்னிக்கே லேட்டாய் வர்ற. வெள்ளாமை விளங்குன மாதிரித்தான்" என்று சீறிச் சினந்து தெறிப்பார்.

நினைத்தாலே- நடுக்கமாக வருகிறது வடிவுக்கு.

அவசர அவசரமாகத் தலையை அள்ளி முடிந்தாள். கதவைத் திறந்தால், வந்து மோதிஅப்புகிற இருட்டு. பொழுதுக் காலைக் கண்ட பயத்தில் முகம் வெளுக்கிற வைகறை இருட்டு.

சொஸைட்டியிலே போய் பால் வாங்கணும். காப்பி போடணும். சோற்றுக்கு உலை வைக்கணும். ஒரு குழம்புப் பாடு பாக்கணும். ஓடைக்குப் போய்விட்டு வரணும். அள்ளி வயிற்றில் கொட்டணும். அரக்கப் பரக்க ஓடணும்.

இத்தனை 'ணும்'களும் முக்கால் மணி நேரத்திற்குள் முடிந்தாகணும், காலில் சக்கரம் கட்டிப் பறக்கணும்.

சாட்டைச் சுழற்சியாக அவளை முடுக்குகிற புற உலக நிர்ப்பந்தம். சுவிட்சைத் தட்டினால் சுழன்றோடுகிற பம்ப் ஷெட் மோட்டாரைப் போலச் சுற்றியாக வேண்டும்.

எல்லா வேலைகளும் றெக்கை கட்டிக்கொண்டு பறந்தன. அவள் கைகளில் ஒரு துரித கதி. பரபரப்பு.

'வெளியே ஓடைக்குப் போகணுமே' என்ற நிஜம் நினைவில் வந்தது. அதில் முட்டிக்கொண்ட மாதிரி திகைத்துத் தேம்பினாள்.

வீட்டுக் கதவைத் திறந்து, வெளியே தலைகாட்டு வதற்கு முன்பு, ரொம்ப யோசிக்க வேண்டும். எதிர் வீட்டுக்கு அடுத்த ரெண்டாவது வீட்டுக்காரன், உறங்கி முழித்தவுடன் செம்புத் தண்ணீரோடு முகம் கழுவ வருவான். அவன் பார்வையில் இவள் தலை தட்டுப்பட்டு விடக் கூடாது.

இவள் முகத்தைப் பார்த்துவிட்டால்... அம்புட்டுத் தான். தாட்சண்யமில்லாமல் வெறுப்பைக் கக்குவான். அசூசையில் முகம் குரூரமாகக் கோணலாகும். சப்பழிந்த முட்டை ஓடாகக், கண்கள் கோபத்தில் குறுகிச் சிறுக்கும்.

கூச்சநாச்சமில்லாத அடாவடித்தனமாக முணு முணுப்பான். "வெறுவாய்க் கெட்ட கழுதை! விடிஞ்ச வுடனே வெறும் மூஞ்சியை கொண்ணாந்து காட்டணு மாக்கும்? ச்சேய்... இன்னிக்கு பொழுது வெளங்குன மாதிரித்தான்."

அக்கினித் துண்டுகளான வார்த்தைகள். ஊசி ஊசியாகப் பாய்ந்து சொருகும். அவமானம் அவளைப் பிடுங்கித்தின்னும். 'நாக்கைப் புடுங்கிக்கிட்டு செத்துத் தொலையலாமே' என்று மனசு கிடந்து கசக்கும்.

புருஷனை நானா கொன்றேன்? தாலியில்லாமல் போனதற்கு நானா பொறுப்பு? வெறும் நெற்றியும், வெறும் கால்விரலும், பூவில்லாத வெறும் கூந்தலுமாய்

இருக்க நானா பிரியப்பட்டேன்? என் வாழ்க்கையே வெறும் வாழ்க்கையாகிப் போன கொடுமைக்காக இரக்கப்படக்கூடாதா? நாதியற்றுப் போன பாவத்துக்குப் பரிதாபப் படக்கூடாதா? ஆண் துணையே அற்றுப்போய் வயதும் உடம்பும் காட்டு நிலாவாக வீணாகிப் போகிற விதிக்கொடுமைக்குக் கருணை காட்டக் கூடாதா?

மனுசத்தன்மையில்லாத மனுசங்களா? கருணை காட்டவேண்டிய பரிதாபத்திற்குரிய பலவீனமான ஜீவனை... சகுனம் பார்த்து வெறுப்பது என்ன நியாயம்? என்ன மனுசத்தனம்? ச்சேய்!

இப்படியெல்லாம் நினைத்து... இப்போது ஆத்திரப் பட முடிகிறது. கோபப்பட முடிகிறது. ஆனால்...

அந்தக் கணத்தில்...

‘வெறுவாய்க்கட்ட கழுதை’ என்ற வசவுச்சொல்லை வெட்கங்கெட்ட துணிச்சலோடு அவன் சொல்கிறபோது-

சீறிச் சினந்து, காறிக் காறித்துப்புகிற அத்துமீறலான அந்த நிமிஷத்தில்...

அவமானமாக உணர்வாள். பிறந்த பிறப்பின் மீதே கசந்து வரும். உயிர் வாழ்வதில் அர்த்தமேயில்லை. மானம் கெட்டு வாழணுமா? மாண்டு மடியலாமே... என்று விரக்தியில் மனம் கசந்துபோய் அழுவாள் வடிவு.

இப்படிப் பல நாட்கள். பல கத்திக் குத்துகள். பல காறித்துப்பல்கள்.

‘மகன் ராமசாமிக்காக உயிர் வைத்து வாழணுமே!’ என்ற ஒற்றை இழையில்தான் அவளது பிழைப்பே தொடர்கிறது.

வடிவு கதவில் கைவைக்க நடுங்கினாள். திறக்கப் பயந்தாள். தலைகாட்டத் தயங்கினாள். உள்ளுக்குள் மருகி மருகித் தவித்தாள்.

'அந்தப் பாவி வந்து நிப்பானோ!' என்ற திகில், 'திக், திக்' கென்று அடித்துக் கொள்கிற மனசு. பயத்தில் வியர்த்துக் கொட்டுகிறது.

'நாயக்கரு நாற வசவு வைவாரே' என்கிற நினைவு.

வேறு வழியில்லை. கதவைத் திறந்தாள். மெல்ல மெல்ல தலையை நீட்டினாள். தயக்கமும் நடுக்கமுமாய் அந்தச் சகுனக்காரன் வீட்டைப் பார்த்தாள். பார்வையை நிமிர்த்துவதற்குள் அவள் மனசுள் பதைப்பு. பீதியின் அலைக்கழிப்பு.

அப்பாடா!

அவன் இல்லை.

அவள் மனசே பாரமிழந்து, பஞ்சாயிற்று. சுலப மாகச் சுவாசிக்க முடிந்தது. மூச்சுத்திணறல் மாயமாகி யிருந்தது.

அப்போதுதான்...

மண்டைக்குள் ஒரு ஞாபகம் சுரீரென்று வந்து சுட்டது. அந்தச் சகுனக்காரன் ஊருக்குப் போய் ரெண்டு நாளாயிற்று. அவன் ஊரிலேயே இல்லை. முற்றத்தில் இறங்கிய வடிவுக்குள் சாட்டையடியாய்ச் சுளீரிட்ட நினைவு.

'ஊர்லேயே இல்லாத அற்பப் பயல் ஒருத்தனுக் காகவா... இம்புட்டு நேரமும் பயந்து செத்தோம்?' என்று நினைத்தவுடன் மனசெல்லாம் பரவிய கசப்பு. குமட்ட

லெடுக்கிற கசப்பு. அவமானத் தகிப்பு. உள்ளுக்குள் குத்திக் கிழிக்கிற வெட்க உணர்வு.

'ச்சேய்' என்று வந்தது.

மங்களகரமான பொதுக்காரியத்துலே கூடிக் கலந்து நிக்கற கொடுப்பினை இல்லை. தெருவுலே முகம் காட்டி நடமாடவும் கூடாதா? அதுவும் பயந்து பயந்து சாகணுமா?

நாளெல்லாம் இப்படிக் கேவலப்படுத்தி, கிழித்துப் போட்டு சீப்படுத்தணுமா? இதைவிட தாலியறுக் குறதுக்குப் பதிலா... அன்னைக்கே உயிரை அறுத் துருக்கலாமே-

ச்சேய்... இனியும் உசுரு வைச்சு வாழறதுலே அர்த்தமேயில்லை. சாகணும். அரளிக்கொட்டையை அரைச்சுக்குடிச்சுச் சாகணும்.

அவளுள் ஒரு கோபம். ரௌத்ரச் சீற்றம், அவலமாய நிறம் காட்டும் பத்ரகாளி வீரம்.

'தக், தக்'கென்று தரையதிர நடக்கிற அவள் நடையில் முகம் காட்டுகிற மனத்தகிப்பு.

மகனை உசுப்பி விபரம் சொல்லி, எல்லா வேலையும் முடிந்து தெருவில் இறங்குகிறபோது -

பால் வண்டி வந்து திரும்புகிற சத்தம்.

அப்படீன்னா- மணி ஆறரை.

'அய்யய்யோ... லேட்டாயிருச்சே. நாயக்கரு நாற வசவுவைவாரே-'

பதற்றமும் பதைப்புமாய் ஓடினாள். பொழுது ரத்த ஜொலிப்பாக முகம் காடியது.

'என்ன மாதிரி வசவு வையப் போறாரோ...' என்ற பயத்தில், 'வெக், வெக்' கென்று நடையை எட்டிப் போட்டாள்.

புஞ்சைக்கு வந்தாள் -

ஒரே ஆச்சரியம்.

குளிர்ந்த முகம் காட்டி, மனச் சிரிப்போடு

"இப்பத்தான் வாரீயா?" என்று கனிவாகக் கேட்கிற நாயக்கர். முகத்தில் புன்முறுவலின் ஒளிக்கீற்று. கோபமுமில்லை. நாறவசவுமில்லை.

நாலைந்து பாத்திகள் தண்ணீர் பாய்ந்து கிடக்கிறது. யாரும் இன்னும் விதை ஊன்றக் குனியவில்லை. ரெண்டு பெண்கள் பாத்தியின் ஈரச்சகதிக்குள் சும்மா நிற்கின்றனர்.

"என்ன... இன்னும் ஊன ஆரம்பிக்கலியா?" என்று கேட்டுக் கொண்டே இவள் ஈரப்பாத்திக்குள் கால் வைத்தாள். நனைந்து, குழைந்து, மண்ணே மிருதுவாகி-பொதுக்கென்று இறங்கியது, பாதம்.

"நீ வரட்டும்னு பாத்துக்கிட்டிருந்தேன்"

"என்னத்துக்கு?"

"நீதான்-மொத வெதையை மாரி மூலையிலே ஊனி-நடுவையை ஆரம்பிச்சு வைக்கணும்"

"ஐயய்யோ... நானா?"

"ஆமா, நீதான். ராசியான பேர்க்காரி. ஒம் புருஷன் பேரு வடிவேலு. ஒம்பேரு வடிவு. ஒரு பேர்க்காரவுக. அதுவே ஒனக்கு ஒரு கைராசி..."

"சும்மா இருங்கய்யா... நீங்க போய்... என்னை... போயும் போயும்"

கூச்சத்தில் திணறினாள். குழப்பத்தில் தடுமாறினாள். வார்த்தை வராமல் தத்தளித்தாள்.

"வடிவு, வருஷா வருஷம் எங்கம்மாதான் வெதைப் பெட்டியை தூக்கிக் குடுத்து மனசார வாழ்த்தி அனுப்பிச்சு வைப்பா. இந்த வருஷம் அவுங்க இல்லை. போய்ச் சேர்ந்துட்டா... இந்த வருஷம் பேர் பொருத்தமான நீ மனசார வாழ்த்தி... மொத வெதையை ஊனு"

"நா மாட்டேன்...போயும் போயும் வெள்ளைச் சீலைக்காரி நா. நா மொத வெதையை ஊனவா? ம்ஹூம்."

"வடிவு, எங்கம்மா வெள்ளைச் சீலைக்காரிதானே? வெள்ளைச் சீலை, கலர்ச் சீலையிலே என்ன இருக்கு? எல்லாம்... வாழ்த்துற மனச் சுத்தம்தான் முக்கியம். மனுசத்தன்மைதான் முக்கியம்."

வாய்க்காலில் ஊர்ந்து வந்த தண்ணீர் முழுவதும் அவளுள் பாய்ந்து... ததும்பி...

மனப்பாத்தியே நனைந்து, குழைந்து, மிருதுவாகி-வாழ்ந்த - வாழும் - வாழ்க்கையே அர்த்தம் நிறைந்து- தனக்குள்ளும் ஓர் அருமை இருப்பதை உணர்ந்து-

உள்ளுக்குள் பரவசமாகிப் போன வடிவு. சந்தோஷப் பெருக்கில் கனிந்த மனசு, கண்ணில் நீராகக் கோர்த்து-வாய்க்கு வார்த்தை வராமல் தத்தளித்து-

"நெசமாகவா...? நாந்தான் மொத வெதை ஊனணுமா?"

"ஆமா... ஆமா- ஆமா..."

அடித்துச் சொன்ன நாயக்கர் முகத்திலும் ஒரு மலர்ச்சி. அடுத்த பாத்திக்கு வாய்மடையை மம்மட்டியால் கொத்தினார்.

தன்னையே - தன் வாழ்வின் அர்த்தத்தையே - உணர்ந்த பூரிப்பில்... உணர்வுகளையெல்லாம் ஒருமுகப் படுத்தி... குல தெய்வத்தை மனதில் நினைத்து...

“வெள்ளைஞ்சு செழிக்கட்டும். வீடு நிறையட்டும்” என்று வாழ்த்தி விட்டு...

முதல் விதையை ஊன்றுவதற்காகக் குனிந்தபோது அவள் அவளுக்குள் கம்பீரமாய் நிமிர்ந்து நின்றாள். இனி-

‘செத்துத் தொலையலாமே’ என்ற நினைப்பு, கிட்டத்தில் கூட அண்டவே அண்டாது.

# அதிகாரி

**ஆ**ட்டுக்கம்பை ஊன்றிக்கொண்டு வேப்ப மரத்து நிழலில் வெக்கையாக நின்றான், சில்லாண்டி. மனசு கிடந்து கொதித்தது. பொங்கிப் பொங்கி வந்த அழுகையை ரோஷத்துடன் அடக்கிக் கொண்டான்.

"இந்தப் பய சொன்னதுக்கெல்லாம் அழு கணுமோ..? நா என்ன சின்னப் பப்பாவா?" சிடுசிடுப்பான முணுமுணுப்பு. சீறிச் சினந்த ஆங்காரத்தில் கோவிந் தனைத் திட்டினான். அனல் பறக்கும் திட்டுகள். நாற வசவுகள். கேட்டால்... நாண்டுக்கிட்டுத்தான் சாகணும்.

இவனுக்கு எதிரே விரிந்து பரந்த கரிசல் தரிசு. அருங்கோடை. ஒரு பச்சையோ பசப்போ கண்ணில் தட்ட வில்லை. உலர்ந்து காய்ந்து சருகாகிப் போன கோரைப் புல், கரட்டுப் புல்லை நக்கித் திரிந்தன வெள்ளாடுகள். வெக்கரித்த வெயில். ஏக்கமும் நப்பாசையுமாய் நிமிர்ந்து நிமிர்ந்து கள்ளப் பார்வை பார்த்துக் கத்துகிற ஆடுகள், பச்சைக்கு ஏங்குகிற ஆடுகள்.

இவனது ஆங்காரத்தில் அதன் ஏக்கமான கதறல்கள் கூட எரிச்சல்படுத்துகிறது. குனிந்து கல்லை எடுத்து எறிகிறான். எறிகிற கற்கள் 'விர்ர்ர்... விர்ர்ர்ங்' என்ற விசை இரைச்சலோடு பாய்கின்றன. குறிப்பாக கோவிந்தனின் ஆடுகளை நோக்கியே பாய்கிற அவனது மனக்கற்கள்.

நீல டவுஷர் சாயம் போய்... நூல் நூலாய்த் தொங்கியது. அழுக்கான சீசன் துண்டு தலையில் வட்டக் கட்டாகக் கட்டப்பட்டிருந்தது. இன்னும் பூனை ரோமம் அரும்பாத பிஞ்சுப் பருவம்.

இவனது முதுகுக்குப் பின்னால்...

கோலாகலச் சத்தம். பொங்கல் வைத்து மொட்டை எடுத்து, காது குத்த சாதிசனத்தோடு வந்தவர்களின் மகிழ்ச்சியான ஆரவாரக் கூச்சல்.

"அடுப்பை மூட்டுங்கடா..."

"அரிசியை அரிச்சுப் போடுங்க"

"பொங்கப்பானையிலே சந்தனம் பூசி... குங்குமம் வை"

ஏகமாய் மனிதக் கூச்சல், உத்தரவிடுகிற – எகிறுகிற- கிண்டலடிக்கிற வெறுமனே கெக்கலிக்கிற சத்தங்கள்.

இவன் அந்தப்பக்கம் திரும்பவேயில்லை. மன செல்லாம் கிடந்து கசக்கிறது. சத்தமுகங்களோடு மனசுக்குள் தெரிகிற அந்தக் கோவில், கோலாகலம், இவனுள் வெறுப்பனலை அலை அலையாக எழுப்புகிறது.

காட்டுக்கோயில், பெரிய கோயில், மூன்றாள் உயரத்துக்கு கல்கோட்டைச்சுவர். அதற்கும் மேலே நெஞ்சையும், தலையையும் பயங்கரக் கண்ணையும், மீசையையும் காட்டிக் கொண்டு, சாட்டையேந்திய, உ... சத்தியான வீரபாண்டிச் சாமி.

வாசல்படியில் நாலு பேர் படுக்கலாம். அத்தனை நீள அகலம்.

சில்லாண்டிக்குள் குதறப்பட்ட அவமான ரணம். ஒரு பிடிவாதத்தில் கழுத்தை அந்தப் பக்கம் திருப்பாமலிருந் தான். ஆனால்... மனசின் ஆழத்தில் ஆசை.

அந்தக் கோலாகல ஆரவாரக் கூச்சலில் தனது குரலும் கலந்து நிற்க வேண்டும் என்ற ஆசை. பொங்கல் வைப்பதை... மொட்டை போடுவதை... சந்தனம் தடவிய சின்னத் தலையைப் பார்க்க ஆசை. அந்த மகிழ்ச்சியான மனிதக் களேபரத்தில் தானும் சமதையாகக் கலந்து மகிழ்ந்து குலாவிக் கிடக்கணுமென்னும் ஆசை. வெள்ளை யும் சொள்ளையுமாக கிராமத்துப் பெண்கள்... சந்தோஷ மாய்ப் பேசிச் சிரித்து... மனக்கொண்டாட்டமாய்க் குதூகலிக்கிற அழகைப் பார்க்க ஆசை-

என்ன செய்ய...?

இவன் எப்ப... எதுக்கு... என்ன ஆசைப்பட்டாலும் நிறைவேறாது. அதோடு மட்டும் வெறுமனே போகாது. மனசின் ஆழம் வரைக்கும் ஓர் அரிவாள் வெட்டு விழும். காயமாக்கும். அவமான ரணம், சாகும்வரைக்கும் மாறாத தழும்பாகிப் போகும்.

இப்பவும்- அப்படித்தான்-

நின்ற நிலையில் நிற்பது கஷ்டமாக இருக்கிறது. கால்கடுக்கிறது. தொடைச் சதையெல்லாம் உளைச்சல் எடுக்கிறது. சற்று விலகி, விலகி கள்ளத்தனமாய் நழுவ தருணம் பார்க்கும் ஆடுகளைக் கல்லால் எறிகிறான்.

"ஹைய்க்... ஹைய்க்... ஏய் மூஞ்சி வெள்ளை, எங்க பாயப் பாக்கே?" என்று ஆடுகளின் பேர் சொல்லி அதட்டுகிறான்.

வேப்பமரத்து நிழலிலேயே ரெண்டு சுற்று சுற்று கிறான். காலார நடக்கிறான். அப்புறம்... ஆட்டுக்கம்பை சாய்வாக ஊன்றி, அதன் மேல் இடது கட்கத்தைப் போட்டு- விறைத்த இடது கால் பாதத்தில், வலது காலைத் தளரச் செய்து ஊன்றிக் கொண்டு... உடம்பின் பாரம் முழுவதையும் கம்பின் மேல் போட்டு...

பசுக்களை மேய்க்கும் கோகுலகிருஷ்ணனைப் போல நின்றான் சில்லாண்டி.

தூரத்தில் ஊருக்குள் பள்ளி மணியோசை ஒலிப்பின் மங்கலான இரைச்சல். இவனுக்குள் இனம்புரியாத ஏக்கம், இழப்புச் சோகம்.

கோவிந்தன்கூடச் சுத்தித் திரியலாம்கிற விருப்பத் துக்காக - ஏழாப்பு அரைப் பரிட்சை முடிந்த கையோடு, அய்யாவிடம் சண்டை போட்டு அடம்பிடித்து ஆட்டுக் கம்பைப் பிடித்த அந்த நாள்.

ரெண்டு வருஷமாயிற்று.

இப்போது படித்தால்... ஒன்பதாம் வகுப்பில் இருப் பான். காக்கி டவுசரும், வெள்ளைச் சட்டையுமாக இருந் திருப்பான். வகுப்பில் நாலாவது... ஐந்தாவது ரேங்க்கில் இருப்பான்.

எல்லாம்... போச்சு. இந்தக் கோவிந்தன் பயலோட நட்பைப் பெரிசா நெனச்சு வந்தது தப்பாப்போச்சு... ஆயுசுக்கும் தீராத மானக்கேடாகிப் போச்சு.

ஒண்ணாப்பிலிருந்து கூட்டாளி கோவிந்தன் பக்கத்திலேயே ஒட்டியிருப்பான். சிலேட்டில் இவன்

எழுதியதைப் பார்த்துப் பார்த்துத் தான் கோவிந்தன் எழுதுவான். படிப்பில் ரொம்ப மக்கு.

கோவிந்தன் ஏழாப்பு வரைக்கும் வந்தான். கால்ப் பரீட்சை எழுதி முடிந்தவுடன்- படிப்புக்கும் 'கோவிந்தா' போட்டுவிட்டான். ஆட்டுக்கம்பை எடுத்து அவனது அய்யா கொடுத்துவிட்டார். அவனும் ஆனந்தக் கூத் தாட்டம் போட்டுக்கொண்டே ஆடுகளைப் பத்திக் கொண்டே காடுகரைக்குப் போய்விட்டான். கூண்டு விட்டுப் பறந்த குருவி. ஆகாயம் முழுக்க ரெக்கையடித்த சுதந்திரக் குருவி.

ரெக்கையொடிந்த மாதிரியிருந்தது, சில்லாண்டிக்கு. ஏழு வருஷச் சிநேகிதன். இல்லாமற் போன இழப்புச் சூன்யம். பழகுவதும் சிரிப்பதும்- கேலி கிண்டல் பண்ணு வதும்- நையாண்டி பண்ணிக் கூத்தடிப்பதும்- கோவிந்தன் கூட இருந்தாலே... கும்மாளம்தான். குதூகலம்தான். குறும்பும் குசும்புமாய் மனசே போங்கி வழியும். சந்தோஷ மாயிருக்கும். உயிர் சிநேகிதத்தை உணராமலேயே அனுபவித்தான்.

இதெல்லாம்... கோவிந்தன் இல்லாமற்போன பிறகுதான், சில்லாண்டிக்கே புரிந்தது. பிரிவின் வேதனை தாளாமல் ஏங்கினான். கோவிந்தனைப் பிரிந்து வாழ, சில்லாண்டிக்கு மனசில்லை. படிப்பிலிருந்த ருசியே போயிற்று. வகுப்பே சப்பென்று ஆகிவிட்டது. 'அறுத்துக் கொண்டு ஓடிவிடலாமா' என்று அவன் மனசுக்குள் துடிப்பு, தவிப்பு, ரெக்கையடிக்க ஆசைப்படுகிற மனசு, கோவிந்தனுக்குள்போய் விழுந்துவிட ஆசை.

அய்யாவிடம் சண்டை போட்டான். அடம்பிடித்தான். ஆடு மேய்க்கப் போவதாக ஆலாய்ப் பறந்தான். பாவம், அய்யா!

நாயக்கர் வீட்டில் சாணி, சகதி அள்ளி, பழைய கஞ்சியை மாட்டுத்தொழுவத்தில் வைத்துக் குடிக்கிற அய்யா. 'ஆடுமேய்க்கப் போகணும்'னு ஆலாய்ப் பறக்கிற மகனின் அக்கறையில் குளிர்ந்து போன அய்யா. பூரித்து மகிழ்ந்த அய்யா.

அரைப்பரீட்சை முடிந்த கையோடு ஆட்டுக் கம்பைத் தூக்கிவிட்டான் சில்லாண்டியும்.

கோவிந்தன் கூட்டுக்காகப் படிப்பையே தூக்கியெறிந்தான் சில்லாண்டி. ஆனால், கோவிந்தன்? கோவிந்தன்?

சில்லாண்டிக்குள் தீக் கோலைச் சொருகின மாதிரியிருந்தது. "அடப்பாவி- காறித்துப்பிட்டியேடா- நம்பி வந்த ஜீவனோட நரம்பை அறுத்துட்டியேடா-"

மனசின் கனல் வார்த்தையாகாமல்... முகமற்ற உணர்வுத் தகிப்பாக உள்ஜவ்வையே சுட்டுப் பொசுக்க-

ரெண்டு மாசத்துக்கு முந்தி, ஆடுகள், ஊருக்குள் நுழைகிற சமயம். ஆடுகளை இனம் பிரித்தனர். அவரவர் ஆடுகளைத் தனியாக்கிப் பத்திக்கொண்டு வந்தனர். கோவிந்தன் ஊருக்குள் போனான்.

சில்லாண்டி ஊரைத்தாண்டியிருக்கிற சேரிக்குப் போயாகணும்.

"போய்ட்டு வாரீயா- டா கோவிந்தா?"

"ம்"

"நீ வாரீயா-டா, நா வரட்டா?"

"கொழை ஒடிக்கப் போவணும்லே?"

"ம். நானே வாரேன்"

சிரிப்பின் வெளிச்சம் சில்லாண்டி முகத்தில் மின்னியது. மனசின் சிரிப்பு. மனநட்பின் நெகிழ்வு. பூரிப்பின் மலர்ச்சி.

ஆனால்- கோவிந்தன் முகம் சிரித்தது. அது முகச் சிரிப்புதான். மனச்சிரிப்பாகத் தெரியவில்லை. ஏதோ தர்மசங்கடமான தவிப்பை வேப்பெண்ணையை மாதிரி விழுங்கிக் கொண்டு சிரிக்கிறான்.

ஆடுகளைக் கொண்டு போய், வேலிப்படலுக்குள் அடைத்தான். வேலிப்படலின் மூலையில் ஆட்டுச் சாணிக் குப்பை. அதன் கொச்சை வாடை குப்பென்று நாசியைத் தாக்குகிற சாணியின் நெடி. அந்தக் குப்பைக் குமியிலிருந்து 'கத கத' வென்று வெக்கையான ஆவி வந்து கொண்டிருந்தது. வேலிப்படலின் கதவை இழுத்து மாட்டிவிட்டு -

வீட்டுக்கு ஓட்டமும் நடையுமாய் வந்தான். மனம் முழுவதும் ஓர் இனம்புரியாத பரபரப்பு. அவன் ரத்த அணுக்களில் பரவியிருந்த மனத்துரிதம். 'கோவிந்தன் எப்ப வருவான்?' என்று அலைபாய்கிற மனசு.

"எம்மா-எம்மா-"

கத்திக்கொண்டே ஓடிவருகிற சில்லாண்டி

"எம்மா-சோறு வை- வவுறு பசிக்கும்மா-"

"ஏண்டா சனியனே, வந்து நிக்குறதுக்குள்ளே வவுத்தைக் காட்டுதே? கால்லே வெண்ணியை ஊத்திக் கிட்டு நின்னா... என்ன செய்ய?"

"இப்ப, சோறு வைக்கப் போறியா, இல்லியா_?"

"இருடா... எடுபட்ட பயலே"

உச்சஸ்தாயியில் கத்தி வெடிக்கிற அம்மா.

அள்ளிப் போட்டமாதிரி 'அவுக், தொவக்' கென்று உண்டு முடித்தான். ஈரக் கையை டவுசரில் கழுவிக் கொண்டே வந்தான், தெருவிளக்கின் வெளிச்சம். நுனி சுருண்ட வாலோடு சோம்பலான அசமந்தமாய் அலைகிற பன்றிகள்.

எட்டிப் பார்வையை எறிந்தான். கோவிந்தன் தட்டுப்படவில்லை.ஆவல்பறப்பில் ரெக்கையடிக்கிற மனசின் துள்ளல். பரபரப்பு. நிலைகொண்டு நிற்க முடியவில்லை.

'இந்தக் கணமே கோவிந்தனைப் பார்த்தாகணும்' என்று துடிக்கிற மனசு.

பொறுமையில்லாதவனாக சில்லாண்டி ஊர்த் தெருவை நோக்கிப் புறப்பட்டான். இல்லை, பாய்ந்தான்.

ரெண்டுபேரும் ஊர் மைதானத்தில் உட்கார்ந்து ஊர்க்கதைகள் பேசினர். கொழை களவுக்குப் போக ணும். 'ஊர் அடங்குகிற' வரைக்கும் பம்மிப் பதுங்கணும். ராத்திரி பூராவும் ஆடுகள் கடிக்க பசுங்கொழை வேண்டுமே_

நேரம் ஊர்ந்தது.

"கோவிந்தா_ போவமடா?"

"ம், நேரம் எம்புட்டு இருக்கும்?"

"பத்துக்கு மேலே இருக்கும்டா... சரி, கொழைக்கு எங்க போறம்?"

"ராமையா நாடாரு புஞ்சைக்குடா" என்று கோவிந்தன் குசுகுசுத்தான், ரகசியமாக,

ரெண்டு பேரும் போய்க் கொண்டிருந்தனர். ஒருவர் மற்றவருக்குக் கரிக்கட்டையான வடிவமாகத்தான் தோன்றினர். கனத்த இருட்டு. கிள்ளிவிட்டு ஓடுகிறவனைக் கூட காணவிடாத இருட்டு.

அப்போதுதான்-

கோவிந்தன் "டேய் சில்லாண்டி" என்று ரொம்பக் கனிவாகக் கூப்பிட்டான். 'பேசவா வேண்டாமா' என்று பலநாள் மனத் தயக்கத்திற்குப் பிறகு, பேசப் போகிறான், இன்றைக்கு. குரலில் அந்தத் தயக்கம், தடுமாற்றம். குழைவு, வெட்டுவதற்கு முன் ஆட்டின் கழுத்தில் போடுகிற மாலை மாதிரியான ஒரு குழைவு.

"என்னடா.... கோவிந்தா?"

"நாம ரெண்டு பேரும் ஒண்ணாப்புலேயிருந்து கூட்டாளிக. உசுருக்கு உசுரா பழகுறோம்... போடா, வாடான்னு சர்வ சாதாரணமா பேசிக்கிறோம், இல்லியா?"

"ஆமா... அதுக்கென்ன?"

"எங்க தெருக்காரங்க என்னை வைதாக. தாறுமாறா இழிவாப் பேசுதாக"

"என்னன்னு?"

"என்னதான் கூடப் படிச்சாலும், சாதி இல்லேன்னு போயிருமா? எளிய சாதிக்காரன் வந்து 'ஏலேய்... ஒலேய்'னு ஒன்னைக் கூப்புடுதான், நீயும் பல்லைக் காட்டிக்கிட்டு 'ஈ,ஈ'ன்னு இளிக்கீயே.... ஒனக்கு மானா பிமானமில்லியா? சாதி ரத்தம் ஓடலியா'ன்னு ரொம்ப மானக்கேடாப் பேசுதாக, அதட்டுதாக..."

உயிரில்லாமல் 'ம்' கொட்டுகிற சில்லாண்டி. அவனைச் சுற்றி நின்ற இருட்டு, இப்போது மனசுக்குள் பய இருட்டாக... பீதி இருட்டாக.... கிலி இருட்டாக....

மனசுக்குள் அரிவாள் வெட்டு விழுந்த மாதிரியோர் அதிர்வு. உலந்து போன உயிரற்ற உதடுகள். "அதுக்கு நா என்ன செய்யணும்?" என்று ஹீனமாய்க் கேட்டான். மனச்சாட்சியின் குற்ற உணர்ச்சியின் உறுத்தலில் தடு மாறுகிற கோவிந்தனின் குரலைத் திகிலுடன் எதிர்பார்த் தான், சில்லாண்டி.

"அவுக சொல்றதுலேயும் ஞாயம் இருக்குல்லே?"

சம்பந்தமற்ற - தொடர்பற்ற கோவிந்தனின் பதில், சில்லாண்டிக்குள் ஏதோ ஒன்று நொறுங்கி உதிர்கிற உணர்வு. அடி வயிற்றில் பகீரென்கிற திகில். மௌனம். சில்லாண்டிக்குள் கனத்த மௌனம்.

"மத்த எடங்கள்ளே நீ 'வாடா, போடா'ன்னு கூப்புட்டுக்க. ஊருத் தெருவுக்குள்ளே மட்டும்..."

"ம்? மட்டும்? 'வாங்க சாமி, போங்க சாமிங் கணுமா?"

"வேண்டாம். 'வாங்க... போங்க'ன்னு கூப்ட்டாப் போதும்"

அப்போது அவர்கள் மயானத்தைக் கடந்து கொண்டிருந்தார்கள். இறந்தவர்களைப் புதைக்கிற - எரிக்கிற இடம்.

இவர்களது ஏழு வருஷ நட்பைப் புதைக்கவா, எரிக்கவா?

சில்லாண்டியின் வெள்ளை மனசில் - கள்ளமற்ற பாலக மனசில் - பதிகிற சமூகத்தின் கூர் நகங்கள். குத்திக் கிழிக்கிற குரூர நகங்கள். மனித நீதிக்குப் பொருந்தாத கொடிய நகங்கள்.

'தடுமாற்றமும் தயக்கமுமாய் தர்மசங்கடப் பட்டாலும், கோவிந்தனும் சாதி பார்த்துவிட்டானே.... நட்பைவிடச் சாதி பெரிசு என்று நினைத்துவிட்டானே" என்ற உணர்வுதான்... நினைக்க நினைக்க அவனுள் ஒரு குண்டுபோல வெடித்தது.

**இ**ப்பவும் அப்படித்தான், ரெண்டுபேரும் ஆடு களைப் பத்திக்கொண்டு ஆடுகளைப் பத்திக்கொண்டு கரிசல்தரிசில் விட்டனர். பக்கத்தில் எந்த வெள்ளாமையு மில்லை. ஆடுகளைத் தன்போக்கில் விட்டுப்புட்டு... சற்று சுதந்திரமாக விட்டாற்றியாக இருக்கலாம்.

கோயிலுக்குள் நடந்த கோலாகலம். எப்போதும் வெறிச்சென்று கிடக்கிற கோயிலுக்குள் இன்றைக்கு நடந்த கோலாகலம். மனித நடமாட்டம். சந்தோஷக் கூவல்கள். ஆரவார இரைச்சல். சில்லாண்டித்தான் ஆர்வமும், குதூகலப் பரபரப்புமாய்க் கேட்டான்.

"ஆடுக மேயட்டும்... நாம வேணும்னா கோயிலுக் குள்ளே போவமா?"

"எதுக்கு?"

"பொங்க வைப்பாக, மொட்டை எடுப்பாக.... கொலவை போடுவாக.... நாமளும் பொங்கச் சோறு வாங்கித் திங்கலாம்"

"அப்ப.. நா மட்டும் போறேன். நீ ஆட்டைப் பாத்துக்க"

"ஏன்? நா வரக்கூடாதா?"

"நீ உள்ளே வரமுடியாது. நா வேணும்னா, ஒனக்கும் சேத்து பொங்கச்சோறு வாங்கிட்டு வாரேன்.."

"ஏன் - நா வந்தா என்ன? எனக்குச் சாமியில்லியா?"

"அது என்னமோ... எனக்குத் தெரியாது.... இந்தக் கோயிலுக்குள்ளே நீ காலெடுத்து வைக்க முடியாது சொன்னாப் புரிஞ்சுக்க."

அலட்சியமாகச் சொல்லிவிட்டு ஒரே ஓட்டமாய் ஓடிப்போய்விட்டான், கோவிந்தன். வெட்டுப்பட்ட வெள்ளாடாய்த் துடித்த இவன் முகத்தை - கண்களை - மனசை - பார்க்கவேயில்லை, கோவிந்தன்.

எந்தவித மன உளைச்சலுமில்லாமல், ஆர்வமும் ஆசையுமாய்ப் பரபரத்த இவனை - இவனது உணர்ச்சி களை - வெட்டிவிட்டுப் போய்விட்டான். அலட்சியமான புறக்கணிப்பு. அவமானகரமான நிராகரிப்பு.

காயம்பட்ட மனசில் உப்பையள்ளிப் போட்ட மாதிரி காந்தலெடுத்தது. வேப்பமரத்து நிழலில் வெக்கை யாக நின்றான் சில்லாண்டி.

முதுகுக்குப் பின்னால் இருக்கும் கோயிலைப் பார்க்காமல், விசனப்பட்டுப்போய்.... கோபித்துக்

கொண்டு... விகாரங்களால் குதறப்பட்ட மானபிமான ரணத்தோடு... ஆட்டுக்கம்பை ஊன்றிக் கொண்டு...

நீண்ட யோசனையில் நேரம் போவது தெரியாமல் மூழ்கிக் கிடந்த சில்லாண்டி.... கால் எரிச்சல் பற்றியதால்.... காலைமாற்றி ஊன்றினான். தற்செயலாகக் கரிசல்தரிசைப் பார்த்தான்.

தரிசு, தரிசாகவே கிடந்தது. வெள்ளாடுகளைக் காணோம். ஓர் ஆட்டைக்கூடக் காணோம். திக்கென்றது.

விரிந்து பரந்த கரிசல் தரிசு முழுதும் பார்வையை எறிந்தான். எங்குமே சூன்யம். ஆடுகளற்ற சூன்யம்.

'ஐயய்யோ.... பணம்பெத்த ஆடாச்சே.... எங்க போச்சு...? ஏதாச்சும் வெள்ளாமை வெளச்சல்லே.... பச்சைப்பசப்புலே போய் விழுந்து மேய்ஞ்சிட்டா...? ஐயய்யோ.... ஊர்க்கூட்டம்... வசவுகள்... அபராதம்...'

சில்லாண்டி பதறிப் பதைத்தான். உள்ளங்கால்வரை பரவிப் பாய்ந்த மன அதிர்ச்சி. பயச் சிலிர்ப்பு. கையும் காலும் ஓடவில்லை.

'முதலில் கோவிந்தனிடம் தாக்கல் சொல்லணுமே.... கோயிலுக்குள்ளேயிருக்கிற கூட்டத்துக்குள்ளே இருக்கானே.... எப்படிச் சொல்ல?' மனசுக்குள் வியர்த்துக் கொட்டியது.

ஒரே ஓட்டமாய்க் கோயிலைப் பார்த்து ஓடினான். வெறிபிடித்த ஓட்டம். உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு ஓடிய ஓட்டம்.

நாலு ஆள் நீட்டி நிமிர்ந்து படுக்கலாம். வாசல்ப் படிஅத்தனை நீள அகலம். ஓடிய ஓட்டத்தில் அதில் ஏறி மிதிக்கப்போன-

"ஏலேய்!.."

வாசலில் ரட்சஸத் தாட்டியமாய் ஓர் ஆள். வெள்ளை வேட்டியும் மஞ்சள் துண்டும் போட்டு, மீசையும் வைத்திருந்தார். பார்த்தாலே மனசு பதறும். அப்படியொரு தோற்றம்.

திகைத்துப்போய் நின்ற சில்லாண்டி முகத்தில் வெலவெலப்பு. கண்ணில் அப்பிக் கிடந்த பீதி.

"எங்கேலே போற?"

கர்ண கடூரமான குரலில் இயல்பான அதிகாரத் தொனி.

ஓடிவந்த வேகத்தில் வேர்வைக்காடு. மூச்சிரைப்பு.

"கோயிலுக்குள்ளே... கோவிந்தனைப் பார்க்க..."

"யாருலே.... நீ?"

"சில்லாண்டி... ஆடு மேய்க்கேன்"

"சில்லாண்டியா? சேரிப் பயலா?"

"ம்"

"போடா அங்குட்டு" என்று கோபமாய் வெடித்துக் கத்துகிறார்.

பிடிபட்ட குருவிக்குஞ்சாக 'விலுக், விலுக்'கென்று விழித்தான் சில்லாண்டி.

“ஆடு மேய்க்குற எளிய சாதிப் பயலுக்கு எம்புட்டுத் திமிரு இருந்தா.... கோயிலுக்குள்ளே வருவே? ராஸ்கல். போடா நாயே.... வாசப்படியிலே காலை வச்சே.... மண்டையை ஒடைச்சிப் போடுவேன்.... படுவா.... போடா.... அங்குட்டு-”

கண் மூக்கு தெரியாத வெறியில் கத்துகிற அவர். அதட்டலும், மிரட்டலுமாய் காட்டுக்கத்தலாய் கூச்சலிடுகிற அவர்.

சில்லாண்டி அரண்டு போனான். பயத்தில் டவுசரே நனைந்து போயிற்று. உயிரே அறுந்து போனமாதிரியிருந்தது.

அவனுக்குள் ‘என்னென்னவோ’ நிகழ... ஆட்டுக் கம்பை எறிந்துவிட்டு நடந்தான். கோயில் வாசப்படியை திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டே அரை உயிராக நகர்ந்தான்.

மனசெல்லாம் கிடந்து கசந்தது.

அடுத்த வருஷம் ஜூன் மாதத்தில் ஏழாப்பில் சேர்ந்தான், சில்லாண்டி மட்டும்.

❑❑❑

**கோ**யில் முன்னால்-

தர்மகர்த்தா உட்பட வெள்ளையும், சொள்ளையுமாய் பிரமுகர்கள் நின்றார்கள். அரசு ஊழியர்களும் நின்றனர். அவர்கள் பார்வைகள் முழுவதுமே ஊரிலிருந்துவரும் மெட்டல் ரோட்டின் மீது நங்கூரமிட்டிருந்தது. ஆவலான நங்கூரம். பரவசக் கூத்தாட்டமான நங்கூரம்.

ஊரிலிருந்து கோயில்வரை ரோடு போட்டு ஏழெட்டு வருஷமாயிற்று.

ரோட்டில் பால்நிறக் கார் புழுதியைக் கிளப்பிக் கொண்டு பாய்ந்து வந்து நின்றது. ஊழியர்கள் பதற்றமும் பரபரப்புமாய்க் கதவைத் திறக்க 'வாங்க சார்.... வாங்க சார்...' என்று பவ்யமாக வணங்கி வரவேற்க.... பிரமுகர்கள் முகமெல்லாம் சிரிப்பாக வணங்கி வரவேற்றார்கள்.

காரிலிருந்து இறங்கிவந்த அறநிலையத்துறை அதிகாரி. கோயிலுக்குள் மரியாதையான உபசரிப்போடு மாலையணிவித்து வரவேற்கப்பட்ட அதிகாரி. கோயிலுக்குள் நுழைகிற நேரம். அதிகாரி ஷூவைக் கழற்றிக் கொண்டே வாசல்ப்பட்டியைப் பார்த்தார்.

அதே வாசல்ப்பட்டி.... நாலு ஆள் படுக்கலாம். அத்தனை நீள அகலாம்.

அவரைச் சுற்றிலும் வரவேற்புச் சத்தம். 'வாங்க, வாங்க' என்று மரியாதையான உபசரிப்புகள்.

வெறும் உள்ளங்காலை வாசல்படியில் வைக்கிற போது- குப்பென்று பழைய அக்னி ஜ்வாலைகள் சில்லாண்டி மனசில்.

❑❑❑

திருவரசு புத்தக நிலையம்